
# உனக்குள் நீ

சிறுகதைத் தொகுப்பு



கதிர். திருச்செல்வம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்குள் நீ

சிறுகதைத் தொகுப்பு

கதிர்.திருச்செல்வம்.

வெளியீடு

நம்மட முற்றம் வெளியீட்டகம்

திருக்கோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரப் பட்டியல்.


| | | |
|---|---|---|
| வெளியீடு | :- | 02 |
| நூல் | :- | உனக்குள் நீ |
| இலக்கிய வகை | :- | சிறுகதைத் தொகுப்பு |
| ஆசிரியர் | :- | கதிர்.திருச்செல்வம் |
| | | எண்:48/116, விநாயகபுரம், |
| | | கண்டித்தெரு, திருக்கோணமலை. |
| பதிப்புரிமை | :- | ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | :- | 2021 |
| பக்கங்கள் | :- | 142 |
| பிரதிகள் | :- | 500 |
| அச்சுப்பதிப்பு | :- | A.R.Traders, |
| | | திருஞானசம்பந்தர் தெரு |
| | | திருக்கோணமலை, 0776566173 |
| மின்னஞ்சல் | :- | nammadamuttam@gmail.com |
| அலைபேசி | :- | 0772908990 |
| விலை | :- | உருபா. 290.00 |
| ISBN | :- | 978-624-95654-1-8 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படையல்



என்னை இவ்வுலகிற்கு அறிமுகப்படுத்திய

என் பெற்றோர்களுக்கு

'உனக்குள் நீ'

என்ற இந்த சிறுகதைத் தொகுப்பினை

படையலாக்குகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

தமிழில் சிறுகதை உருப்பெற்றபோது, ஒரு புலமை சார்ந்த பிரிவினரால் அது வரவேற்கப்பட்டாலும் மரபை மீறக்கூடாது, தமிழ் வசனநடையின் பாண்டித்தியம் இவ்வாறுதான் இருக்க வேண்டுமென்ற மரபுவாதிகளும் பாண்டித்திய பேர்வழிகளும் இவ்வடிவத்தை பெரிதும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏற்றுக்கொள்ள திராணியற்ற அந்த மரபு வட்டத்தை உடைத்தெறிந்த பெருமை புதுமைப்பித்தன், பிச்சா மூர்த்தி, செல்லப்பா, கு.ப.ரா., மௌலி போன்ற சிறுகதை முன்னோடிகளைச் சேரும்.

இவர்களைப் போன்றே ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளான இலங்கையர்கோன், வைத்திலிங்கம், சோ.சிவபாதசுந்தரம், வ.அ., தனியான ஈழ இலக்கிய நெறிக்கு வித்திட்டவர்களாகும். கிழக்கின் சிறுகதை இலக்கியம் பற்றி பேசப்படும் போதெல்லாம் நினைவில் வந்து போகின்றவர்களாக வ.அ.இராசரெத்தினம், எஸ்.பொ. போன்றவர்களைக் குறிப்பிட்டாலும் ஈழத்து சிறுகதை இலக்கியத்துக்கு காத்திரமான பங்களிப்பைச் செய்த பெருமை திருக்கோணமலையைச் சேர்ந்த வ.அ.இராசரெத்தினத்துக்கு உரியதாகும். அவரின் உன்னதமான சிறுகதையான 'தோணி', ஈழகேசரியில் வெளிவந்தபோது ஈழத்து சிறுகதை இலக்கியம் தன்னை ஒருகணம் சிலிர்த்துக் கொண்டதாக பேசப்படுவது வழக்கம். வ.அ.வின் சிறுகதைகள் அவர் வாழ்ந்த மண்ணான மூதூரின் மக்களைப் பேசின. அவரின் 'தோணி', 'அறுவடை' ஆகிய சிறுகதைகள் உலக தரத்திலான சிறுகதைகளாக ஒப்பிட்டுப் பார்க்கப்பட்டன.

தோணியின் கருப்புள்ளி மிக எளிமையானதாக உழைப்பவனுக்கு அவன் உழைப்பிற்கு உதவும் கருவி சொந்தமானதாக இருக்க வேண்டும், மீனவனுக்கு தோணியும் கமக்காரனுக்கு வயலும் சொந்தமாக இருக்கவேண்டும், உழைப்பு சுரண்டப்படக்கூடாது என்ற மார்க்சீயத் தத்துவத்தை அநுசார எழுத்தாளனாக சொல்லிப் படைத்த பெருமை வ.அ. வைச் சேரும்.

வ.அ.க்குப் பிறகு கிழக்கில் சிறுகதை வடிவம் அல்லது படைப்பாளிகள் போதுமான பெயர் கொண்ட சிறுகதைகளை படைக்கவில்லையென்பது எனது தாழ்மையான அபிப்பிராயம். குறிப்பாக திருக்கோணமலையின் மண்ணியல் வாழ்வியல் சமூக முரண்பாடுகளைச் சொல்லும் கதைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிக்கண்டு பிடிப்பது அருந்தலாகவே காணப்படுவதாக யான் கவலை கொள்வதுண்டு.

மிக நீண்ட காலத்துக்குப் பின் கதிர்.திருச்செல்வத்தின் "உனக்குள் நீ" சிறுகதைத் தொகுப்பை ஆர்வத்துடன் படித்தேன். 'பச்சை வயல் பசுமை அளிக்கிறது' முதல் 'கங்கையும் கடந்து போகும்...?' வரை, இத்தொகுப்பிலுள்ள கதைகள் மீண்டும் எனக்கு பாரம்பரியமும் மரபும் கொண்ட தொன்மையான கிராமங்களைப் பார்க்க வைத்தது.

தம்பலகமம் போர்த்துக்கீசர் காலத்துக்கு முன்பிருந்தே குளக்கோட்டன் மன்னன் காலம் தொட்டு தொன்மை பேசும் கிராமமாக இருந்து வந்துள்ளது. அக்கிராமத்தின் வழக்காறுகள், குல, குடிமுறைகள், வாழ்வியல் நெறிமுறைகள் மாவட்டத்தினுடைய ஏனைய கிராமங்களைவிட ஆழமான மரபுமுறைக் கொண்டது. இவைபற்றி 'கங்கையும் கடந்து போகும்...?' கதையிலும் 'பச்சை வயல் பசுமை அளிக்கிறது' கதையிலும் வரும் கதைப்புலம், பாத்திர வார்ப்புகள் சம்பவப் பின்னல்கள் பதிபோடப்பட்டுள்ளன.

புதிய தலைமுறையினர் தெரிந்துகொள்ள வேண்டிய பல குடிமுறை மற்றும் தொழில்முறை செய்திகள் மிகவும் அழகாக சொல்லப்பட்டுள்ளன.

"நாளை மறுநாள் ஆடிஅமாவாசை நீராட்டம். தம்பலகமத்திலிருந்து கோணேசர் நீராடக் கங்கைத்துறைக்கு செல்வது வழக்கம். சின்னத்தம்பியார் தன் நினைவுதெரிந்த நாளிலிருந்து நீராட கங்கைக்கு போகாமல் விட்டதில்லை"

கதைகளில் கதைமாந்தர்கள் கிராமங்களின் வடிவங்களாய் சொந்தங்களாய் வந்து போவது வரலாற்றை மீள் பார்வை செய்வதாக அமைகிறது. எடுத்துக்காட்டாக 'பச்சைவயல் பசுமை அளிக்கிறது' கதையில் வரும் சந்தானம் போன்ற கதாபாத்திரங்கள் பழம்பெரும் கிராமங்களின் குறியீடுகளாக காணப்படுகின்றன. எல்லாக் கதாபாத்திரங்களும் ஏதோ ஒரு தளத்தின் யதார்த்த வெளிப்பாடுகளாகவே காணப்படுகின்றன.

சிறுகதைகளில் வரும் கதைபாத்திரங்களின் பெயர்கள் வருவிக்கப்பட்டவையாக இருந்தபோதிலும் அதில் கலந்து காணப்படும் குணாம்சங்களும் ஏதோவொரு கிராமத்தின் அல்லது கிராமத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பண்பாட்டுக் கோலங்களின் வெளிப்படுத்தல்கள்போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கப்பட்டிருப்பது புதியதொரு போக்கை நோக்கி திருக்கோணமலைப் பிராந்திய சிறுகதைகள் வளர்ந்து கொண்டிருப்பதைக் காட்டுகிறது.

சிறுகதையொன்றின் கதைப்புலம் பாத்திரவார்ப்புகள் அவற்றை வெளிப்படுத்தும் உத்திமுறைகள் கதையை நெய்து கொண்டு செல்லும் வரிவடங்கள் ஒன்றையொன்று தொட்டுச் செல்வதனாலோ என்னவோ புதியதொரு சிறுகதைப் போக்குக்கு கதிர்.திருச்செல்வத்தின் சிறுகதை இட்டுச் செல்கின்றனவென்ற கூறலாம்.

இத்தொகுதியில் வரும் ஒவ்வொரு சிறுகதையிலும் வரும் பாரம்பரியங்கள் வழக்காறுகள், கிராமியக் கோலங்கள் புதிய தலைமுறைகள் கற்றுக்கொள்ள வேண்டிய கிராமிய வாழ்வில் களஞ்சியங்களாக, காணப்படுகிறது என்பதே சிறப்பான அம்சமாகும்.

நான் ஏலவே குறிப்பிட்டது போல் திருக்கோணமலைப் பிராந்திய கலை, இலக்கியப் போக்கு கடந்த மூன்று தசாப்த காலத்துக்கு மேலாக தேக்கநிலைபெற்றுக் காணப்படுகின்றதென்ற குறைபாடு எனது மனதை நெருடிக் கொண்டேயிருந்து வந்துள்ளது(இக்கருத்து எனது தனிப்பார்வையான அபிப்பிராயம்), வ.அ.இறக்குப் பின் அருள் சுப்பிரமணியம், பாலேஸ் போன்றவர்களக்குப் பின் பிராந்தியக் கதைகள் தேசியத்தரம் கொண்டவையாக இருக்கவுமில்லை மதிக்கப்படவுமில்லையென்ற எனது ஆழமான அபிப்பிராயத்தை மாற்றியமைக்கும் வகையில் "உனக்குள் நீ" சிறுகதைகள் அமைந்து காணப்படுவது சந்தோசம் தருகின்ற விடயம்.

ஈழத்துச் சிறுகதைப் போக்குப்பற்றி ஆராயமுற்படும் ஓர் ஆய்வாளன் இத்தொகுதியிலுள்ள பல சிறுகதைகளை கவனத்தில் கொண்டு வரலாற்றை எழுதவேண்டிய தேவையை கதிர்.திருச்செல்வத்தின் 'உனக்குள் நீ' தொகுதி தந்துள்ளது எனலாம்.

திருமலை நவம். -10.10.2020.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

ஓர் ஆன்மா இருக்கும் இடத்தில் ஓர் ஆழமான கதை இருக்கும். கதை கூறலும் கேட்டலும் வழியாகவே மனித வரலாறு நெடுகிலும் சிந்தனைகள் பரிமாறப்பட்டிருக்கின்றன. கதை வழியாக மானுட அறமும், சிந்தனையும் வளர்தெடுக்கப்பட்டதே பண்பாட்டு வரலாற்றின் சாரம். இயற்கையின் விசித்திரங்கள், வீரம், சாகசம், திகில் என்பனவற்றோடு சிந்தனைக் கதைகளும் பேசப்பட்டிருக்கின்றன. அச்சுக் கருவியின் தொழில்நுட்பம் எட்டிய காலத்தில் கதை கூறலில் மாற்றங்கள் நிகழத் தொடங்கின. திகில் அனுபவங்கள் போன்றே சிந்தனைத் தூண்டல்களும் ஒரு வகைச் சிந்தனைக் கிளர்ச்சியை கொடுத்தது. அறவுணர்வும், அகவெழுச்சியைத் தூண்டக்கூடிய ஆயிரத்தொரு இரவுகள் போன்ற அரேபிய பொழுதுபோக்கு கதைகளும் கேட்போரை இலக்கிய வட்டத்துக்குள் கொண்டு வரத் தொடங்கியது. தமிழில் வீரமாமுனிவரின் பரமார்த்த கதைகள் தமிழில் எழுந்த சிந்தனைச் சிறுகதைத் துளிகளே.

இங்கும் ஆசிரியர் க. திருச்செல்வத்தின் கனவுகளும் ஆளுமைகளும் இந்த படைப்பூக்கத்தில் வாழ்கின்றன. அதிகாரத்திற்கும் அடித் தட்டிற்கும் இடையே எப்போதும் நிகழ்கிற விலகலை எப்பாடுபட்டாவது தடுத்துநிறுத்த வேண்டிய ஒரு சுயப்பொறுப்புணர்வுக்கு ஆயத்தமாகவேண்டிய காலப்புள்ளியில் நம்மெல்லோரும் வந்து நிற்கிறோம். பழமையின் அறத்தை சுமந்துகொண்டு நவீனத்தை எதிர்கொண்டு முன்னேறுவதுதான் ஓர் அறிவார்ந்த சமூகம் தனது அனுபவத்தால் அடைந்து நிகழ்த்தும் நிஜப்புரட்சி என்னும் ஜெயமோகனின் கருத்துக்களுடன் ஆசிரியர் திருச்செல்வம் நெருக்கமடைவது ஒவ்வொரு கதைகளிலும் இழையோடி இருக்கின்றது. 'பச்சை வயல் பசுமையளிக்கிறது' கதையில் மின்னலாகும் சமூக உரசல்களும் அது தீர்க்கப்பட்ட வழிகளும் கூர்மையான ஜனநாயக ஆயுதங்கள். இவ்வகைச் சிறுகதைகளின் பண்புகளை களத்தோடு பொருள் கொள்ளும்பொழுதுதான் ஆசிரியரின் நெருக்கத்தை வாசகனால் எட்ட முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெடுங்கதைகள் போன்று பாத்திரங்களை வளர்த்தெடுக்க சிறுகதையின் அளவும், காலமும் அனுமதிப்பதில்லை. மு.வ, நா.பார்த்தசாரதி போன்றோர் வளர்த்தெடுத்த இலட்சியக் கதாபாத்திரங்கள் ஜெயகாந்தனின் 'வாழ்க்கை அழைக்கிறது' காலத்தில் சாமானியர்களாக மாறினார்கள். இங்கும் வாசகனின் அகவெழுச்சியைத் தூண்ட வார்க்கப்பட்ட கதை மனிதர்கள் அனைவரும் 'உன்னைப் போல் ஒருவன்' என்பது தான் இக்கதைகளின் மெய்ப்பொருள்.

சமூகம் என்பது புவியின் ஒரு சிறு கூறு அல்ல. பொது உணர்வு களால் கட்டமைக்கப்பட்ட குடிகளின் தொகுப்பு. கையறு நிலையில் வாழும் சமூகம் தன் மீட்சிக்காக கிளர்ந்தெழும் போதெல்லாம் சத்தியத்தின் அகவெழுச்சி போராடத் தூண்டுகின்றது. சத்தியா வேசத்தின் குரலாக நாகராசா மாறுகின்றான். அந்தப் போராட்டத்தை வழி நடாத்த மரகதத்தில் உள்ளுறங்கிக் கிடந்த 'உனக்குள் இருக்கும் நீ' எவ்வாறு தூண்டப்பட்டு உளவூக்கமளிக்கின்றது என்பது தான் 'உயிரும் வாழ்வும் பேசும் பெண்மை'. தன்னெழுச்சி என்பது வழிகாட்டல் அல்ல. அது சமூகக் கூட்டுணர்வைக் கூட்டி எழுப்புவது என்ற கருப்பொருளே இங்கு பேசப்படும் கதைகளின் உயிருட்டமான வித்து.

'உனக்குள் நீ' தொகுப்பில் 'காதலால் மனம் மகிழ்ந்து கிடக் கின்றது' வாசகர் மனதின் எடையைக் குறைக்கும் ஒரு இளங்காதல் கதை. சிட்டுக்களான சித்திரச்செந்தாளை 'அருளரசன், இசைவளன், காள்சன் என ஒரு வகுப்பறை வட்டத்துக்குள் முகிழ்விட்ட பருவச் சிலிர்ப்பு நெறி தவறாக் காதலாக வளர்த்தெடுத்து 'சுபம்' என முடித்திருக்கின்றார் ஆசிரியர். ஆனால், காதல் அறிவார்ந்த காதலாக முதிர முன் இளங்கன்றுக் காதலில் இருந்திருக்க வேண்டிய 'நகம் கடிப்பு அவஸ்த்தைகளை' எல்லாம் ஆசிரியர் வேகமாக கடந்துவிட்டார் என்ற மெல்லுணர்வு ஒரு வாசகனாக எனக்குள் எழுகின்றது. 'செந்தாளையைத் தொட்டுற்றாண்டா அரசன்' என்ற காட்சிச் சித்தரிப்பு பதின்ம வயதுக்காரர்களுக்கு ஒரு சரவெடிக் கொண்டாடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலட்சியத்தை உருவாக்கி அதற்காக உயிர் கொடுத்த தியாகிகளால் தான் உலகம் வளர்ச்சி நிலையைத் தொட்டிருக்கின்றது. 'பச்சை வயல் பசுமை அளிக்கின்றது, பச்சோந்தி வாழ்வு பரவிக் கிடக்கின்றது என்பன நாம் கடந்து வந்த கண்ணுகெட்டிய தூரக் காட்சிகள். ஆழ் மனதின் ஆக்கிரமிப்புகளை ஆசிரியர் தொட்டு சென்றிருக்கும் சில இடங்கள் நுட்பமானவை. மிக நுண்மையான மானிட உறவுகளினால் கோர்க்கப்பட்ட சமூகங்களிடையே உள்ள ஏற்றத் தாழ்வுகள், வறுமை என்பனவற்றைக் கடந்து பெரும் கனவோடு வாழ்வது தான் வாழ்க்கை எனப் பொருள்படுகின்றது. 'உனக்குள் நீ' ஒரு சமூகம் மானுடப் பெருநிலை நோக்கிய இலட்சியங்களை வென்றெடுக்கத் தூண்டும் ஒரு கருத்துப் பொறி.

கதாபாத்திரங்கள் வழியாக ஆசிரியர் ஒற்றைப்படையாக கதை சொல்வதைக் காட்டிலும் கதாபாத்திரங்களை தங்களுக்குள் உரையாட அனுமதிக்கும் போது உருவாகும் தர்க்கம் விரிவான கருத்துருவாக்கத்திற்கு வழிகோலும். மானுட சிந்தனை தர்க்கம் வழியாக தன்னை தினமும் புதுப்பித்துக்கொண்டு இன்றைய நிலையை எட்டியுள்ளது. தர்க்கம் செம்மையாக கட்டமைக்கப்படும் போது வாசகனும் ஒரு தரப்பாக கதாபாத்திரங்களுடன் உரையாடி வளர்ந்து கொள்கின்றான். அத்தகைய தர்க்கங்களின் அகவெழுச்சித் தூண்டல்களாலேயே வாசகர்களை எழுத்துப்பணிக்குள் உள்ளீர்க்க முடியும். இவ்வழியாகவே செ.கணேசலிங்கம், ஜெயகாந்தன், ஜெயமோகன், பிரபஞ்சன் ஆகியோரது வாசகர்கள் பெருகினார்கள். இங்கே ஆசிரியர் காட்டும் சாளரம் வழியே ஒரு முதிர்ந்த வாசகனால் தன் வாழ்வனுபவங்களை ஒப்பிட்டுணர முடியும்.

'உனக்குள் நீ. பாரதியின் வார்த்தையில் அக்கினிக் குஞ்சொன்று. இந்நூல் கருத்து வழியாக அகத் தீயை கொழுந்துவிட்டெரியத் தூண்டும் முயற்சி. மேலும் ஆசிரியர் கதிர்.திருச்செல்வம் அவர்களின் படைப்புகள் தொடர வேண்டும். இவரது எண்ணப்பாட்டினை புரிந்துகொள்ளும் போது எதிர்காலத்தின் மீதான நம்பிக்கை வளர்கின்றது.

க.சரவணபவன் 1.10.2020.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துரை

**திரு.சிவானந்தம் சிறீதரன்** (SLEAS-I).

வலயக்கல்விப்பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், திருகோணமலை.

திருமலை மண்ணின் கதிர்.திருச்செல்வம் வெளியிடும் 'உனக்குள் நீ" சிறுகதை தொகுப்பு மிகவும் வரவேற்கத்தக்கது. எமக்குள் இருந்த பச்சை வயலின் பசுமையான நினைவுகளை எனக்குள் நீவீர் கொண்டு வந்தீர் நண்பா. அதனால் உனக்கு கோடி நன்றிகள். தொலைந்து போகும் மனிதத்தினை சுயதேடலுக்காய் தந்த இச்சிறுகதைத் தொகுப்பு அதிசிறப்பிற்குரியது. எழுத்துலகில் சஞ்சரிக்கும் நண்பன் நீ - எழுதிய 'காதலால் மனம் மகிழ்ந்து கிடக்கிறது" என தலைப்பிட்டுத் தந்த சிறுகதை என்னை மிகவும் கவர்ந்திருக்கின்றது. வாசிப்பதற்கு வகையற்றுக் கிடக்கும் எமது சமூகத்தினருக்கு அழகிய தமிழ் மொழியில் நீங்கள் படைத்திருக்கும் சிறுகதை தொகுப்பு - குறிப்பாக மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தினை வலுப்படுத்தும் என்பதில் எனக்கு சந்தேகம் எதுவுமில்லை.

"உயிரும் வாழ்வும் பேசும் பெண்மை.." என்ற கதையினூடாக பெண்மை பற்றியும் ஆசிரியர் பற்றியும் அழகுபட எழுதி வாழ்வின் யதார்த்தத்தை வெளிக்கொண்டு வந்தமை பாராட்டுதற்குரியது. மேலும் 'பச்சோந்தி வாழ்வும் பரவிக்கிடக்கின்றது" என படிக்கத் தந்த அருமையான குறுங்கதை கிராமிய வழக்குகளைக் கொண்டு புரையோடிக்கிடக்கின்றது. அத்துடன் இயல்பான கதையோட்டமும் சுலபமான மொழிநடையும் கொண்ட உங்களது சிறுகதை தொகுப்பு எதிர்காலத்தில் சிறுகதை எழுதத் துடிப்போருக்கு அருமருந்தாக அமையுமெனக் கருதுகின்றேன். ஈ-வாசிப்பு என உலகில் முகிழ்ந்து கிடக்கும் எம்மவர்க்கு இச்சிறுகதை தொகுப்பு இயல்பான வாசிப்பைத் தூண்டும் நூலாக அமையுமெனக் கருதுகின்றேன்.

நானும் ஓர் எழுத்தாளன் என்ற வகையிலும் மாணவர் சமூகத்தையும் ஆசிரியர் சமூகத்தையும் வழிப்படுத்துபவன் என்ற வகையிலும் உங்கள் முயற்சி எங்கள் சமூகத்திற்கு சாலச் சிறந்தது என கருதுகின்றேன். ஆதலால் என்றென்றும் உங்கள் பணி தொடர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

இவ்வண்ணம்
ஈச்சிலம்பதியூரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் மனதிலிருந்து.....

'உனக்குள் நீ' எனது இரண்டாவது அச்சுப் பதிப்பு. படித்துக் கொண்டிருப்பவனால் பலசாலி ஆகலாம் என்பதே தற்கால பலசாலிக்கான வரையறை.

ஆரம்ப காலத்திலே பலசாலி என்போர் வீரம் மிகுந்தவர்களையும் சிறிது காலத்தில் செல்வம் நிறைந்தவர்களையும் அதன் பின்னான காலத்தில் கல்வியறிவு கொண்டவர்களையும் ஏற்றுக் கொண்ட உலகு தற்போது தகவல் நிறைந்தவர்களையே உலகில் 'பலசாலி' என வரையறை செய்கிறது. தகவல் நிறைந்திருப்பதற்கு வாசிப்புத் தேவை என்பது சொல்லாமலே விளங்குகின்ற கருத்தாடல்.

எனது **'உனக்குள் நீ'** தன்னகத்தே கொண்டிருக்கும் பத்து சிறிய கதைகளும் எனது வாழ்வில் பார்த்து, கேட்டு, பட்டறிந்த விடயங்களை குழைத்து தந்திருக்கிறேன். சொல்லாடல்களில் வர்ணனை குறைவாகக் காணப்பட்டாலும் அவை காத்திரமான கருத்தைச் சொல்லி நிற்கும் என நம்புகின்றேன்.

நமது காலத்திலும் நமக்கு பின்வரும் காலத்திலும் 'உனக்குள் நீ' வாசிப்பவர்களுக்கு உயர் சிந்தனை கருத்துகளை வழங்க வேண்டும் என்பதே எனது மனதின் உள்கிடக்கையாகும்.

பள்ளிக் காலத்திலே பார்த்த காதலையும், போராட்ட காலத்திலே பட்டறிந்த நடைமுறைத் துரோகத்தையும் மக்களுடன் பணியற்றும் போது கண்ட கல்வி ஏக்கத்தையும் வாலிபர்களுக்கான வழிகாட்ட வழியிலா நிலையினையும் தொழில்களில் ஏற்படும் அவமானங்கள் மற்றும் தோல்விகளையும் ஊர்களிலே இருக்கின்ற ஒருமையிலா தன்மையினையும் இப்படியான மனதைத் தொடுகின்ற கருத்துக்களை கருப்பொருளாக்கி பத்துக் கதைகளையும் உருவாக்கியிருக்கிறேன்.

சேனையூர் மத்திய கல்லூரியில் எனது குருவான திரு.தா.ஜெயவீரசிங்கம் ஐயா எனது வாழ்க்கையை நேராக்கியவர். தோழர் இராசகிளி அவர்கள் எனது சிந்தனை வடிவத்திலே குமுகாயப் பார்வையை உருவாக்கியவர். எனது பள்ளி முதல்வர் திரு.க.துரைரெட்ணசிங்கம் ஐயா எனது கல்வியைத் தொடர வழிசமைத்தவர். எனது வகுப்பாசிரியை செல்வி செல்வராசா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கமணி அவர்கள் என்னை சிறந்த மனிதனாக்கியவர். இவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகளை தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

'உனக்குள் நீ' என்ற சிறுகதைத் தொகுப்பினை திறமான முறையில் அச்சிட்டுத் தந்த 'ஏ.ஆர்.ரேடர்ஸ்' அச்சகத்தாருக்கு நன்றிகள்.

என்னைப்பற்றி நூலின் பின்னட்டையில் அலங்கரிக்கும் வரிகளுக்குச் சொந்தக்காரனான எனது பள்ளித் தோழன் , பள்ளி முதல்வர் திரு.கா.அழகேஸ்வரன் அவர்களுக்கு எனது நன்றிகள்.

இந்நூலிற்கான அணிந்துரையினை வழங்கிய என் அன்பிற்குரிய மேனாள் பள்ளி முதல்வர் திரு.திருமலை நவம் ஐயாவிற்கும் வாழ்த்துரை வழங்கிய திருக்கோணமலையில் வரலாற்றுத்துறையில் போற்றுதலுக்குரியவருமான பேரன்புக்குரிய முனைவர் க.சரவணபவன் ஐயாவிற்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

நூலினை முழுமையாக 'மெய்ப்புப்' பார்த்து எழுத்துக்கள் பிழையின்றி அச்சேற்றப்பட வேண்டும் என்பதில் எனக்கு ஒத்துழைப்பு வழங்கிய ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு.க.கனகசிங்கம் அவர்களுக்கு எனது மனம் நிறைந்த நன்றிகள்.

கதிர்.திருச்செல்வம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே....


| | | |
|---|---|---|
| 01. | பச்சை வயல் பசுமையளிக்கிறது | 15 |
| 02. | உயர்த்தத் துடிக்கும் மனிதம் | 32 |
| 03. | உயிரும் வாழ்வும் பேசும் பெண்மை | 41 |
| 04. | காதலால் மனம் மகிழ்ந்து கிடக்கிறது | 59 |
| 05. | உனக்குள் நீ | 66 |
| 06. | சீதனம் தேடும் உறவுகள் | 79 |
| 07. | ஓர் அமைதி கலைகிறது | 88 |
| 08. | கலக்கமும் தெளிவும் | 103 |
| 09. | பச்சோந்தி வாழ்வும் பரவிக் கிடக்கிறது | 121 |
| 10. | கங்கையும் கடந்து போகும் | 131 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சை வயல் பசுமையளிக்கிறது

பச்சைப் பசேல் என்றிருந்தது சந்தானத்தின் நெல் வயல். எல்லாப் பயிர்களும் குடலைப் பருவம். தன் உழைப்பால் முதன்முதலாக வாங்கிய சொத்து அந்த வயல் நிலம். இரண்டு ஏக்கருக்கு உறுதி. ஆனால் தெரு அருகில் இருக்கும் வீதிக்கு ஒதுக்கப்பட்ட நிலத்துடன் சேர்த்து இரண்டேகால் ஏக்கர் இருக்கும் என்று விற்றவர் சந்தானத்திற்கு கூறியிருந்தார். அவர் கூறியதை விடக் கூடத்தான் இருக்கும் என்று உழவு இயந்திர செலுத்துநர்கள் வயலை உழும்போது கூறுவார்கள். இரண்டரை ஏக்கருக்கு சந்தானம் கூலிகள் கொடுப்பது வழக்கம். இரண்டரை ஏக்கர் இருக்கும் என்பது சந்தானத்தின் கணிப்பு.

காலையில் ஐந்து மணிக்கு எழுந்து காலைக் கடன்களை முடித்துவிட்டு துணைவியின் கையால் ஊற்றிய தேநீரை உறுஞ்சிக் குடித்துவிட்டு அது எப்படியிருந்தாலும் 'நேற்றயத விட இண்டைக்கு சுவையாக இருக்கு' என்று சொல்ல முகம் மலர்ந்த மகிழ்ச்சியுடன் துணைவி தமிழ்ச்செல்வி சமையலறைக்குப் போனதும் சந்தானம் செய்கின்ற வேலை வயலுக்குப் போவதே.

அண்ணளவாக மூன்று கிலோமீற்றர்கள் தூரத்தில் அவனது வயல் இருந்தது. நீர் தேவையான நேரத்தில் ஆற்றை மறித்து நீரைப் பாய்ச்சுவதும் நீர் தேவையில்லாத வேளையில் நீரை வடிச்சலாற்றில் திறந்து விடுவதும் நீர் இல்லாத வரவைகளைப் பார்த்துப் பார்த்து வரப்புகளை வெட்டியும் உமை வைத்து நீரை வெளியேற்றுவதும் என அவனது காலைநேர ஒரு மணி நேரம் தனது குடும்பத்தின் வருவாயினை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளில் பயனுள்ளதாகும்.

சரியாக ஏழு மணிக்கு வீட்டுக்கு வந்துவிடுவான். தனது இரண்டு பிள்ளைகளையும் பள்ளிக்குக் கொண்டு சென்றுவிட வேண்டும். பதினைந்து நிமையங்களில் பள்ளியின் வாசலில் உந்துருளியில் இருந்து இறங்கி பள்ளி நோக்கி ஓடும் தன் பிள்ளைகள் இருவரையும் பார்த்து மகிழ்ந்து வீடு திரும்புவான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றும் அப்படித்தான் வழக்கமான வேலைகள் அனைத்தையும் முடித்து விட்டு வீடு திரும்பியவனுக்கு காத்திருந்தது அந்த அவசரமான செய்தி.

"உடனடியாக மருத்துவமனைக்கு வரட்டாம். தொலைபேசியில சொன்னவங்க. உங்கட கைப்பேசிக்கு எடுத்தா நீங்க எடுக்கிறீங்கல்லயாம்" துணைவி பதற்றத்துடன் கூற "சரி, சரி நான் பாக்கிறன். நீ ஏன் பதர்றா?" துணைவியை சற்றுக் கடிந்தவனாக மருத்துவ மனைக்கு கைப்பேசி ஊடாக அழைப்பினை மேற்கொள்ள யோசித்தவன் போய்ப் பார்ப்போம் என்று மனதை மாற்றிக் கொண்டு தனது உந்துருளியை ஊர்திகள் நிறுத்துமிடத்தில் நிறுத்திவிட்டு வேலைக்குச் செய்வதற்கான ஆடைகளை உடுத்துக்கொண்டு தனது மகிழ்வுந்தில் புறப்பட்டான்.

என்னவாயிருக்கும்? ஒரு நாளும் இப்படி தொலைபேசி மூலமாக அழைக்கமாட்டார்களே, ஏதோ அவசரமாக இருக்கும் என வேகமாக மகிழ்வுந்தைச் செலுத்தினான் மருத்துவரான சந்தானம்.

சந்தானம் தனது வீட்டில் மூன்றாவது பிள்ளை. அப்பா இராசநாயகம் தோட்டத்தில் கிடைக்கும் வருமானத்தின் மூலமாக வீட்டில் உள்ள ஐந்து பேரையும் வளர்த்து வந்தார்.

அநேகமான நாள்களில் இரவுச் சாப்பாடு மட்டுமே அன்றைய உணவாக இருக்கும். காலையில் பழைய சோற்றை மீதப்படுத்தி "தண்ணிச் சோறு" என்று கூறி அதில் பச்சை மிளகாய் நாலைந்தையும் வெங்காயத்தையும் சிறு துண்டுகளாக்கி அரைத் தேங்காயைத் துருவிப் பாலாக்கி மூன்று பிள்ளைகளுக்கும் கொடுத்து இராசநாயகத்துக்கும் கொடுத்து மீதமிருந்தால் தாய் மரகதமும் உண்பாள். உண்பாள் என்பதனை விட குடிப்பாள் என்பதே பொருந்தும். ஏனெனில் கூடுதலாக தண்ணீர் தான் அவ்வுணவில் இருக்கும்.

பசியுடன் பல நாள்கள் கழிந்திருக்கின்றன. பிள்ளைகளுக்கும் பழக்கப்பட்டு விட்டன.

ஆனால் மூத்த மகன் மயில்வாகனம் மட்டும் பசியுடன் கிடக்க மாட்டான். அம்மா, அப்பாவுடன் சண்டை பிடிப்பான். "பசிக்கிறது சாப்பாடு வேணும்" என சண்டையிடுவான். அவனைச் சமாளிப்பதே பெரும்பாடாகி விடும் அம்மாவுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு நாள்களும் சமாளித்துத்தான் வந்திருக்கிறாள். மயில்வாகனம் அப்பாவிற்கு உதவியும் செய்யமாட்டான்.

ஆனால் சந்தானம் சிறியவனாக இருந்தாலும் பேணியினால் நீரை அள்ளிக் கொண்டு போய் பயிர்களுக்கு ஊற்றுவான்.

அப்பாவின் உழைப்பினை அவர் படும் வேதனைகளை நன்றாக உணர்ந்தவனாக இருந்தான் சந்தானம்.

ஆறாம் வகுப்பு படிக்கும் போது சந்தானம்தான் பயிர்களுக்கு துலா மூலமாக நீர் இறைப்பான்.

இரண்டாவது மகன் சண்முகம் பாத்திகளுக்கு நீர் மாறுவான்.

அப்பா புதிய பயிர்களை நாட்டுவதற்றாக நிலத்தினை மண்வெட்டியால் கொத்திப் பண்படுத்துவார்.

மூத்தவன் மயில்வாகனம் பெரிதாக தோட்ட வேலையும் செய்ய மாட்டான். பள்ளியில் படிக்கவும் மாட்டான். இதனால்தானோ என்னவோ அவன் பின்னாளில் ஒரு கூலித்தொழிலாளியாக நாள்தோறும் வடிசாராயம் குடிக்கின்ற ஒரு குடிகாரனாக மாறியிருந்தான்.

சந்தானம் குடும்பத்தின் பொருளாதார நிலையினை நன்கு உணர்ந்தவனாக பொறுப்புடன் அம்மா, அப்பாவிற்கு எந்த வேலையெனினும் உதவிகள் செய்து வந்தான். அத்துடன் தனது படிப்பினையும் சிறப்பாகவே கவனித்து வந்தான்.

அப்பாவும் சந்தானத்தை எப்படியாவது படிப்பில் நல்ல நிலைக்கு கொண்டு வந்துவிட வேண்டும் என்ற எண்ணத்தில் அவனது கல்வியில் அக்கறையுடன் செயற்பட்டு வந்தார்.

முதலாம் வகுப்பில் சந்தானம் சேரும் போது கோபால் ஐயா புதுக்குடியிருப்பு அ.த.க.பாடசாலையின் முதல்வர். காது கொஞ்சம் கேட்பது குறைவெனினும் நல்ல நிருவாகி.

“வா ராசநாயகம், மூணாவது பெடியனையெண்டாலும் படிப்பிக்க வேணும் எண்ட எண்ணம் வந்ததே பெரிய விசயம். ஒழுங்கா பள்ளிக்கூடம் அனுப்போணும். அப்பத்தான் பொடியன் நல்லாப் படிப்பான் சரியா” என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோபால் ஐயா கூறியதும் சந்தானத்தின் அப்பா மறுப்பேதுமின்றி தலையை அசைத்தார்.

கோபால் ஐயா சந்தானம் வீட்டிற்குப் போய் இவனை எப்படியாவது பள்ளிக்கூடம் சேர்க்க வேண்டும் என்று ஆலோசனை கூறியதன் அடிப்படையில்தான் இன்று பள்ளியில் சேர்க்கப்பட்டிருக்கிறான்.

ஆசிரியர்களுக்கு சந்தானத்தைப் பிடித்துவிட்டது. "சரியான துடியாட்டக்காரன். சும்மாவே இருக்கமாட்டான். வகுப்பில் வைத்திருப்பதே சரியான சிக்கல். ஒரு தரம் சொல்லிக் குடுத்தாப் போதும் சட்டென்று பிடித்துவிடுவான். வீட்ட ஒரு நாளும் படிக்கமாட்டான். வீட்டு வேலை ஒண்டும் செய்து வரமாட்டான். வகுப்பில வந்துதான் செய்வான். பின்னேரத்தில ஒரே விளையாட்டுத்தான். எப்பிடித்தான் அஞ்சாம் ஆண்டு தேர்வில வெட்டுப் புள்ளிக்கு மேல பெற்றான் எண்டு மற்றாக்காள் சொன்னாலும் அவன் சித்தியடைவான் எண்டு எனக்குத் தெரியும்" என்று முதலாம் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்புவரை கற்பித்த அவனது மனதில் நீங்கா இடம்பிடித்துக் கொண்டிருப்பவருமான கருணாநிதி ஆசிரியர் சக ஆசிரியர்களிடம் அடிக்கடி கூறுவார்.

ஆறாம் வகுப்பு, மகாவித்தியாலயத்தில்.

பல புதிய மாணவர்களுடன் போட்டிபோட வேண்டியிருந்தது.

தன்னை, மகா வித்தியாலயத்தில் ஏற்கனவே இருந்த மாணவர்கள் ஓரங்கட்டுவது போல் உணர்ந்தான் சந்தானம்.

அவர்களில் சுதேசனை நண்பனாக்கிக் கொண்டான். சுதேசன் படிப்பிலே கீழ்நிலையில் இருந்தான். ஆனால் சந்தானத்துடன் அன்பாக இருந்தான்.

ஆறாம் வகுப்பிலிருந்து சாதாரண தரம் சித்தியடைந்து உயர்தரத்தில் இந்துக்கல்லூரியில் சித்தியடைந்து பல்கலைக்கழகம் செல்லும் வரை ஒன்றாகத்தான் இருவரும் இருந்தார்கள்.

சுதேசனுக்கு பாடங்கள் விளங்குவது குறைவாக இருந்த போதெல்லாம் சந்தானம் அவற்றைத் தெளிவுபடுத்துவான்.

சுதேசன் விளையாட்டில் நாட்டம் இல்லாதவன். அவனையும் இழுத்துக்கொண்டு சென்று விளையாடுவான். யாருமே நினைக்கவில்லை சுதேசன் பாடசாலையின் துடுப்பாட்ட அணியில் இடம் பிடிப்பான் என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தளவிற்கு சந்தானம் சுதேசனை கல்வியில் மாத்திரமின்றி விளையாட்டிலும் மேம்படுத்தியிருந்தான்.

மருத்துவமனை வாசலில் மக்கள் கூட்டமாக இருந்தார்கள். ஏதோ சிக்கல் ஏற்பட்டிருக்கிறது என எண்ணியவனாக மருத்துவமனைக்கு உள்ளே செல்லாது தெரு ஓரத்திலே மகிழ்வுந்தை நிறுத்தி விட்டு இறங்கி அதன் கதவுகளை தன்னியக்கி மூலமாக பூட்டிவிட்டு நடந்து சென்றான்.

மருத்துவமனைக்குழுத் தலைவர் சுந்தரராசனும் அப்போது அங்கே வந்தார்.

"நானும் இப்பத் தான் கேள்விப்பட்டனான். அதான் ஓடி வந்தனான் டொக்ரர்".

"வாங்க போய்ப் பாப்பம்" என்று அவரையும் அழைத்துக் கொண்டு உள்ளே சென்றான்.

வெளிநோயாளர் பிரிவு கதவு மூடப்பட்டிருந்தது. வெளியில் நோயாளர்கள், மக்கள் கலவரமான முகங்களுடன் காணப்பட்டனர்.

மருத்துவமனைப் பணியாளர் வெளியே வர முடியாதபடி உள்ளே இருப்பதை அறிந்து கொண்டான்.

வெளியே நின்று கொண்டிருந்த மக்களைப் பார்த்து " என்ன சிக்கல் எண்டு சொன்னா நல்லா இருக்கும்" என சந்தானம் கேட்டார்.

இரண்டடி முன்னே வந்த சிறாஜ்நகரைச் சேர்ந்த இஸ்மெயில் "ஐயா காலயில கிளினிக்குக்கு துண்டு எடுக்க வந்தனான். எனக்கு முன்னால ஒரு தம்பி நிண்டவர். நான் அவசரமா மலைக்குப் போகோணும். நான் முதல்ல துண்ட எடுக்கட்டா எண்டு கேக்க அவரும் ஓம் எண்டு முன்னால என்ன போகவிட்டவர். நான் முன்னால போக, துண்டு தந்திற்று இருந்த அந்த ஆள் என்ன வந்து தள்ளிப் போட்டு 'இந்தச் சோனிகளே இப்பிடித்தான். ஒழுங்காவே வரமாட்டானுவள்' எண்டு பேசிப்போட்டார் ஐயா. இதப் பாத்திற்று நிண்ட ஆக்களுக்கு கோபம் வந்திற்று. எனக்காக அவர்கள் கதைக்க அவரும் ஏதேதோ எல்லாம் கூடக் கதச்சிப்போட்டார் ஐயா. ஆக்கள் அவருக்கு அடிச்சுப் போட்டாங்க. மருத்துவமனையில வேலை செய்யிற மற்ற ஆக்களும் அவருக்கு ஆதரவா என்ன நடந்ததெண்டே கேக்காம பிரச்சினைப் பட ஆக்களெல்லாம் ஒண்டாச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேந்து எல்லாருக்கும் அடிக்கப்போக அவங்க எல்லாரும் ஓடிப்போய் கதவப் பூட்டிற்றாங்க ஐயா. நல்ல காலம் இப்ப நீங்க வந்தீங்க."

என்ன நடந்திருக்கும் என்பதனை நன்றாக விளங்கிக் கொண்டான் சந்தானம்.

இராசையா சிறந்த பணியாளர். ஆனாலும் அவரிடம் இப்படியான இனவாத எண்ணம் இருப்பது சந்தானத்திற்கு முன்னரே தெரியும்.

பல தடவைகள் அவரை கண்டித்திருக்கிறான். அவரது எண்ணங்கள் மாறவில்லை. 'ஒரு நாளைக்கு நீங்க நல்லாப் பட்டாத்தான் திருந்துவீங்க' என்றும் ஒரு தடவை கூறியிருந்தான் சந்தானம்.

இவ்வாறு நடைபெற்றது உள்ளே அவனுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் எப்படி இதனைச் சமாளிப்பது என்பதைப் பற்றிய எண்ணங்கள் மனதில் ஓடிக்கொண்ருந்தன.

உள்ளே மருத்துவமனையின் அனைத்து பணியாளர்களும் இருந்தனர். இரண்டு மருத்துவர்கள் உட்பட அனைவரும் அடைபட்டு இருந்தனர் என்றுதான் சொல்ல வேண்டும்.

சந்தானத்திற்கு அவர்கள் தொலைபேசி மூலமாக அழைப்பெடுத்துக் கொண்டிருந்தார்கள். அவனோ கைப்பேசியை வீட்டில் வைத்துவிட்டு பள்ளிக்கூடத்திற்கு பிள்ளைகளை விடுவதற்குச் சென்றுவிட்டான். அவர்களோ செய்வதறியாது இருந்தார்கள். வீட்டிற்கு வந்தவுடன் மருத்துவமனைக்கு அழைப்பை மேற்கொண்டிருக்கலாமோ என இப்ப எண்ணத் தோன்றியது சந்தானத்திற்கு.

"சரி நான் உங்கட்ட அவருக்காக பொறுத்துக்கொள்ளுமாறு கேக்கிறன். அவர் அப்படி நடந்தது தவறு தான். அதேவேளை நீங்க எல்லாரும் இப்படி நடந்தா எப்பிடி இஞ்ச வேல செய்யிற ஆக்கள் வேலை செய்வாங்க? எல்லாரும் இடமாற்றம் எடுத்திற்றுப் போனா ஆர வச்சு இஞ்ச வேலை செய்யிறது? அருள்கூர்ந்து பொறுமையாக இருங்க. இனி ஒருநாளும் இப்பிடி நடக்காமல் இருக்க நான் பாத்துக்கொள்றன்." என்றவுடன் மக்கள் அமைதியானார்கள்.

சந்தானம் பொறுப்பேற்கும்போது எப்படி இருந்தது இந்த மருத்துவமனை.

மாடுகள் மருத்துவமனை வளாகத்தின் உள்ளே நிற்கும். மாட்டுச்சாணம் துப்புரவாக்கப்படாமல் கிடக்கும். வெளிநோயாளர் பிரிவில் கதிரைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திற்கும் குறைவாக, அவற்றில் பாதிக்குமேல் உடைந்த நிலையில் இருந்தன. நோயாளர்களுக்கான கட்டில்கள் போதியளவில் இல்லை. படுக்கைவிரிப்புகளும் இருக்கவில்லை.

நோயாளர்கள் வருவதும் குறைவு. காரணியம் கேட்டால் மருந்துகள் இல்லை என்பது பதில். மிகவும் மோசமான நிலை.

பலரிடம் ஊர் மக்கள் சென்று முறையிட்டும் பலனில்லை. மருத்துவர்களும் மருத்துவமனையில் இருப்பதில்லை. மாகாணசபை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என அனைவரிடமும் சென்று களைத்துப் போய்விட்டார்கள் ஊர்த் தலைவர்கள். பல போராட்டங்களை மக்கள் நடத்தியிருந்தும் திணைக்களம் காத்திரமான நடவடிக்கைகள் எதனையும் அப்போது மேற்கொண்டிருக்கவில்லை.

நலத்துறை அமைச்சர் இங்கு நேரில் வந்து பார்த்த பின்னர் தான் திணைக்களத்திற்கு கண்திறந்தது. இது நடந்தது எட்டு ஆண்டுகளுக்கு முன்னர்.

சந்தானம் இரண்டு ஆண்டுகள்தான் தனது உள்ளக மருத்துவப் பயிற்சிகளை முடித்து முல்லைத்தீவு மருத்துவமனையில் பணியாற்றிவிட்டு தனது ஊரில் தனது மக்களுக்கு பணியாற்றுவதற்காக என விண்ணப்பம் கோரியது திணைக்களத்திற்கு பெரிய தலையிடி ஒன்று நீங்கியது போல.

வெளிநோயாளர் பிரிவில் ஒரு நாளைக்கு பத்து தொடக்கம் இருபத்தைந்து மக்கள் வருகின்றார்கள்.

அப்போது அங்கிருந்த இரண்டு மருத்துவர்களுக்கும் இடமாற்றம். அமைச்சரின் வரவின் தண்டனை அது.

ஒரு மருத்துவர் மாத்திரம் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார்.

தனது ஊர் என்பதனால் உரிமையுடன் அனைத்து கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்கள், கோவில் அமைப்புகளின் தலைவர்கள் என அறுபதுக்கு மேற்பட்டவர்களுக்கு அழைப்புவிடுத்தான்.

காரி(சனி)க்கிழமை மாலை கலந்துரையாடல் மருத்துவனையில். அதனை மேம்படுத்துவதற்காக என. அநேகமாக எல்லாருமே வந்திருந்தார்கள் என்று தான் கூறவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீண்ட நாள்களாக சிறந்த மருத்துவர்கள் இன்மையால் பட்ட அவதி அவர்கள் பட்ட வேதனைகள் அவர்களுக்கு மட்டுமே தெரிந்தவை.

“இது நம்மட மருத்துவமனை. நல்ல நிலைக்கு கொண்டு வர வேணும். என்னால என்ன செய்ய முடியுமோ அதையெல்லாம் நான் செய்வன். நீங்க எனக்கு பூரண ஒத்துழைப்புத் தர வேணும்” சொல்லி முடிப்பதற்கு முன்பாகவே நாயன்மார்திடல் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சிவலிங்கம் “தம்பி என்ன செய்யோணும் எண்டு சொல்லுங்க. உடனே செய்து தாறம்” என்றார்.

அன்று கூறியவரை மூன்று ஆண்டுகளின் பின்னர் உடல்நலக்குறைவு என மருந்து எடுக்க வந்தபோதுதான் சந்தானம் கண்டான்.

செய்ய வேண்டிய பல விடயங்களை சந்தானம் விபரித்தான். தனது எதிர்காலத் திட்டங்களை எடுத்துரைத்தான். சரியாக நாற்பது நிமையங்களில் கலந்துரையாடல் முடிந்தது. அனைவருக்கும் நன்றி கூறினான்.

“இப்பிடித்தான் புதிசா வாறவங்க வந்த புதிசில சொல்லுவாங்க. ரெண்டு மாசத்தில எல்லாம் சரி. நாங்க இவரப் போல எத்தின பேரப் பாத்திற்றம். மாடு உள்ள வரக்கூடாதாம். பிறைவேற்றப் போட்டானுவள் எண்டா எல்லாம் சரி. மாடு உள்ளுக்குள் படுக்கும்.”

“இந்தப் பொடியன் செய்வான் போலதான் இருக்கு. அவன்ர கதை நிதானமா இருக்கு”

இப்படியாக கூட்டத்திற்கு வருகை தந்தவர்கள் வீடு செல்லும்போது ஆளாளுக்கு வாய்க்கு வந்தாற் போல் பேசிச்சென்றார்கள்.

மறுநாள் பள்ளி முதல்வர்களை அழைத்திருந்தான். பள்ளிப்பிள்ளைகளின் ஒத்துழைப்பினை வேண்டிநின்றான் சந்தானம்.

தூய்மையாக்கல் முதலில் நடைபெறவேண்டும். ஒரு மருத்துவமனைக்கு தேவையான விடயம். தனது பணியாட்கள் மூலமாக செய்வதற்கு தேவைப்படும் காலத்தினை எடுத்துக் கூறினான். முதல்வர்கள் மருத்துவருக்கு ஒத்துழைக்க சம்மதித்தனர்.

இது நடந்தது ஞாயிற்றுக் கிழமை. சந்தானம் மருத்துவமனையினைப் பொறுப்பேற்று மூன்றாம் நாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்காவது நாள் திங்கட்கிழமை. பணியாட்களுடனான சந்திப்பு.

தனது திட்டங்களை தெளிவாகச் சொன்னான். தனது வாழ்நாளில் மருத்துவ மனையைத் தவிர வேறு எங்கும் தனிப்பட்டமுறையில் நான் நோயாளர்களை பணத்திற்காகப் பார்வையிட மாட்டேன். எனது வருவாய் போதாவிட்டால் வயல் செய்து எனது வருவாயைப் பெற்றுக்கொள்வேன். அனைவரும் கடமையுணர்வுடன் பணியாற்ற வேண்டும் என்பது எனது கட்டளையல்ல. அன்பான வேண்டுகோள். அதற்காகவே மக்கள் நமக்கு சம்பளம் என்ற பெயரில் தமது பணத்தை வரியாக அரசு மூலமாகத் தருகின்றார்கள்.

அவனது கருத்துக்கள் எல்லாம், சிலருக்கு முன்னர் மக்கள் கூறிச் சென்றவை போலவே தெரிந்தன.

செவ்வாய்க்கிழமை பள்ளிப் பிள்ளைகள் ஏறத்தாள நூறு பேருக்கு மேல் ஆசிரியர்களுடன் வந்திருந்தார்கள்.

அதற்கான ஒப்புதலை கோட்டக் கல்வி அதிகாரியிடமும் வலயக் கல்விப் பணிப்பாளரிடமும் சந்தானம் பெற்றுக் கொடுத்திருந்தான். ஒரு மணிநேர வேலை. ஏற்கனவே எவ்வாறு வேலைகள் செய்யப்பட வேண்டும் என திட்டமிட்டிருந்தான். பத்துக் குழுக்கள். ஒவ்வொரு குழுவையும் வழி நடத்தவென ஒரு குழுத்தலைவர். அவனும் ஒரு குழுவின் தலைவரானான்.

வினைக்கொடை(சிரமதானம்)யின் நிறைவில் மருத்துவமனையின் தோற்றம் வேறு எங்கோ இருந்து கொண்டு வந்து வைத்தது போல இருந்தது.

ஒன்பது மணிக்கு தேநீர் மாத்திரம் வந்தவர்களுக்கு கொடுத்து அனுப்பினான் சந்தானம்.

அன்று வெளிநோயாளர் பிரிவில் மக்கள் ஐம்பது பேராவது இருந்திருக்க வேண்டும்.

முதல்நாள் பிராந்திய நலத்துறைப் பணிப்பாளரிடம் சென்று தேவையான மருந்துகளில் இன்றியமையாதவற்றை மட்டும் பெற்று வந்திருந்தான்.

மறுநாள் மிகுதியை அனுப்புமாறு கோரியிருந்தான். நேற்று அனுப்புவதாகக் கூறிய மருந்துகளும் இன்று காலையிலேயே வந்துவிட்டன. ஓரளவு மருந்துத் தேவைகள் நிறைவேறியிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"முயற்சி செய்யாட்டி ஒண்டும் நடக்காது தானே" மருந்துகள் வந்ததன் பின்னர் ஒரு மருத்துவத்தாதி கூறிச்சென்றார்.

"நம்மட ஆஸ்பத்திரியில இப்ப சிறிஞ் வாங்கிக் குடுக்காமலே ஊசி போர்றாங்களாம் தெரியுமா" என்று அப்பாவித்தனமாக ஓர் அம்மா தன் தோழியிடம் பேசிச் சென்றாள்.

இவ்வளவு நாளும் ஊசி போடுவதெனில் சிறிஞ் பக்கத்தில் உள்ள கடையில் ஊசி போடப்பட வேண்டியவர் வாங்கிக் கொடுக்க வேண்டும்.

இது முன்னர் இருந்த மருத்துவர்களின் உழைப்பின் ஒரு வடிவம்.

அடுத்த வாரத்தில் அமைச்சரிடம் சென்றான் சந்தானம். "மருத்துவமனைக் குழு அமைக்க வேண்டும்" என்றான். அத்தோடு பல தேவைகளையும் எடுத்துக் கூறினான்.

தன்னால் செய்யக்கூடிய சிலவற்றை உடனடியாகச் செய்து தருவதாகவும் மருத்துவமனைக் குழுவிற்கு ஆள்களைத் தெரிவுசெய்யும் பொறுப்பினை சந்தானத்திடமே தந்தார் அமைச்சர்.

மகிழ்ந்தவனாக வீடு திரும்பினான்.

தன் துணைவியாரிடம் தனது நடவடிக்கைகளை எடுத்துக் கூறினான்.

தமிழ்ச்செல்வி தன் துணைவரின் நடவடிக்கைகளை தட்டிக்கொடுத்தாள். அவனை ஊக்கப்படுத்தினாள்.

பதினொருபேர் தேவை மருத்துவமனைக் குழுவிற்கு.

பள்ளி முதல்வரை அழைத்தான். கோணேசர் கோவில் தலைவரையும் அழைத்தான்.

"கோயில், பள்ளி, மருத்துவமனை இம்மூன்றும் இந்த ஊரின் கண்கள்.

மூன்றுமே அருகருகே இருப்பது இந்த ஊருக்குக் கிடைத்த பாக்கியம்.

அதனால் தான் உங்கள் இருவரையும் அழைத்தேன். நாம் மூவருமாக இணைந்து செயலாற்ற வேணும்.

உங்களது ஆலோசனைகள் எனக்குத் தேவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே உங்களுக்கும் எனது சேவைகள், அல்லது கருத்துக்கள் தேவையெனில் எந்த நேரத்திலும் கேளுங்கள். செய்வதற்கு நான் தயாராகவே இருக்கிறேன்.

மருத்துவமனைக் குழு அமைக்க வேண்டும். பதினொருபேர் தேவை.

அதில் மூன்று பேராவது இளைஞர்களும் இரண்டு பேராவது பெண்களும் இருக்க வேண்டும்" என்றான்.

"இப்ப மருத்துவமனை நல்லா இருக்குத் தம்பி. உங்கட அப்பா பட்ட கஸ்ரமெல்லாம் வீணாப் போகல்ல. காலயில அப்பாவக் கோயில்ல கண்டனான். உங்களப் பற்றி பெருமையா கதைச்சனான். நாங்க உங்களுக்குத் துணையா இருப்பம்" என்றார் கோவில் தலைவர்.

"குழுவில் நாலு இளைஞர்களைச் சேருங்க. அவங்க தான் இந்த ஊர வழிநடத்தப் போறவங்க. அவங்கட கையில தான் இதெல்லாம் குடுக்க வேணும். இப்படியான குழுக்கள்ல அவங்க இருந்தாத்தான் அவங்களுக்கும் ஊரில பற்று வரும். அதோட பொம்பிளகளயும் மூணு பேர் போடுங்க. அவங்கட பங்களிப்பு உங்களுக்கு இருக்க வேணும்". பள்ளி முதல்வரின் கருத்துக்கள் உற்சாகமளித்தன சந்தானத்திற்கு.

"நீங்கள் இருவரும் இந்தக் குழுவில் இருப்பதில் ஏதும் சிக்கல் இல்லைத் தானே?"

இருவரும் இருப்பதாக இணைங்கிக் கொண்டார்கள்.

அவர்களது மதியுரையின் அடிப்படையில் நான்கு இளைஞர்கள், மூன்று பெண்கள், கோவில் தலைவர், பள்ளி முதல்வர்,கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்,விவசாயச் சங்கச் செயலர் எனப் பதினொருவரைக் கொண்டதாக மருத்துவமனைக் குழு அமைக்கப்பட்டது.

மாதத்தில் இரு தடவைகள் குழு கூடியது. இரவு நேரத்தில் ஏழு மணியிலிருந்து எட்டு மணிவரை ஒரு மணி நேரக் கலந்துரையாடல்.

தொடக்கத்தில் பெண்கள் சற்றுப் பின்னடித்தாலும் அவர்களது துணைவர்களுடன் தனிப்பட்ட முறையில் சந்தானம் இரவில் கூட்டம் நடத்துவது தொடர்பாகக் கலந்துரையாடியதன் அடிப்படையில் பெண்கள் இரவில் கூட்டங்களில் கலந்துகொள்ள உடன்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவமனைக் குழு சந்தானத்தின் வழிகாட்டலில் பயன்மிகு பங்களிப்பைச் செய்தது.

ஒவ்வோர் ஆண்டும் குழு உறுப்பினர்களை மாற்றிக் கொண்டார்கள். புதியவர்கள் இருந்தவர்களைவிட புதிதாக எதையாவது செய்ய வேண்டும் என்ற உற்சாகத்தில் இயங்கிக் கொண்டிருந்தார்கள்.

மக்கள் மருத்துவமனைக்கு வருவது கூடியிருந்தது. ஒரு மருத்துவரால் சமாளிக்கமுடியாது என்பதனை திணைக்களத்திற்கு அறிவித்தது மருத்துவமனைக் குழு.

அடுத்த கிழமை நேரடியாகவே பிராந்தியச் நலத்துறைப் பணிப்பாளரைச் சந்தித்தார்கள்.

இதன் பயனாக அவர்கள் சென்று சந்தித்ததிலிருந்து மூன்றாவது மாதத்தில் ஒரு மருத்துவர் வந்து சேர்ந்தார்.

மருத்துவருக்கான விடுதி அவருக்கு தங்குமிடமானது. அவர் சிங்கள மொழியை தாய் மொழியாகக் கொண்டவர். அது சந்தானத்திற்கு மகிழ்ச்சியளித்தது.

சிங்கள மக்களும் மருத்துவமனைக்கு கூடுதலாக வரத் தொடங்கியிருந்தனர். சந்தானத்திற்குச் சிங்களம் தெரியாது. இதனால் சந்தானம் கவலை கொண்டிருந்தான்.

பிழையாக அவர்களது நோயை விளங்கிக் கொள்வோமோ என்ற அச்சம் அவனிடம் இருந்தது உண்மை தான்.

அங்கிருந்த சிற்றூழியரான லால்காந்த ஓரளவு தமிழில் மொழி பெயர்த்துக் கூறினாலும் அவருக்கும் சரியாக சொல்லத் தெரியவில்லை.

தற்போது ஒரு சிங்களவரே மருத்துவராக வந்தமை அவனுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி.

தானும் சிங்களம் படித்துக்கொள்ளலாம் என்பதே அந்த இரட்டிப்புக்கான காரணியம்.

மருத்துவனைக்குப் பின்பக்கத்தில் உள்ள அரை ஏக்கர் நிலத்தில் ஏதாவது செய்ய வேண்டும் எனக் குழுவில் கலந்துரையாடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வல்லாரை, பொன்னாங்காணி பயிரிட்டால் கிளினிக்குக்கு வருகின்ற கர்ப்பிணித் தாய்மாருக்கும் மற்றவர்களுக்கும் இலைக்கஞ்சி கொடுக்கலாம்" என்ற பள்ளி முதல்வரின் கருத்து அனைவரையும் ஈர்த்திருந்தது.

அதற்கான நடவடிக்கைகளை தனது தொழிலாளர்களை வைத்து சந்தானம் மேற்கொண்டிருந்தான்.

விவசாயத் திணைக்களத்தின் தொழில்நுட்ப அறிவினையும் அதற்காகப் பெற்றிருந்தான்.

இரண்டு மாதத்தில் தொடங்கப்பட்ட இலைக்கஞ்சி நடைமுறை இன்றுவரை தொடர்கின்றது.

மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சைபெறுகின்ற நோயாளர்களுக்கும் இலைக்கஞ்சி வழங்கப்படுகின்றது.

அதற்குத் தேவையான சிவப்பரிசியினை ஊரின் செல்வந்தர் செல்வண்ணன் வழங்கிக்கொண்டிருந்தார்.

ஊரில் உள்ள கிராம அபிவிருத்திச் சங்கங்களை மருத்துவமனைக் குழுத் தொடர்பு கொண்டு கோரியதனால் ஒரு மாதத்திற்கு ஒரு சங்கம் என்ற வகையில் தேங்காய்கள் சுழற்சி முறையில் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

பயறு, மற்றும் சிறிய செலவுகளை கோவில் பொறுப்பேற்றிருந்தது.

அடுத்த ஆண்டிலேயே புதிய மாடிக் கட்டடம் ஒன்றிற்கு நிதி ஒதுக்கப்பட்டிருந்தது.

ஆறு மாதத்தில் முடிக்கப்படும் என்று கூறப்பட்டாலும் எட்டு மாதத்தில் கட்டடம் கையளிக்கப்பட்டது.

நலத்துறை அமைச்சர் திறப்புவிழாவிற்கு 'தான் வர வேண்டும்' என கட்டடத்திற்கான நிதி ஒதுக்கும் போதே கட்டளையிட்டிருந்தார்.

திறப்பு விழாவிற்கான ஒழுங்குகளை மருத்துவமனைக் குழு சிறப்பாகச் செய்திருந்தது.

அமைச்சர் திறந்து வைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இரண்டு ஆண்டுகளில் இந்த மருத்துவமனை இவ்வாறு மாற்றமடையும், வளர்ச்சியடையும் என்று நான் மாத்திரமல்ல யாருமே கனவு கூடக் கண்டிருக்க மாட்டார்கள்.

மருத்துவர் சந்தானத்தின் செயற்பாடுகள் மெய்சிலிர்க்க வைக்கின்றன. இந்த மாவட்டத்திற்கு மாத்திரமல்ல எமது மாகாணத்திற்கே எடுத்துக்காட்டாக இந்த மருத்துவமனை விளங்கிக் கொண்டிருக்கின்றது.

மக்கள் ஒத்துழைப்பு இல்லை என்று எல்லா இடத்திலும் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். ஏன் இங்கு இருந்தவர்களும் அப்படித் தான் சொன்னார்கள். இன்று எங்கிருந்து வந்தது? வழிகாட்டலில் தங்கியிருக்கிறது.

தம்பி சந்தானத்திடம் படிக்க நிறைய இருக்கிறது.

எனது ஆலோசகராக அவரை வைத்திருக்க நான் சில மாதங்களுக்கு முன்னர் விரும்பியிருந்தேன். அவர் மறுத்துவிட்டார்.

மருத்துவமனைக் குழுவோ உயிரே போனாலும் நாங்க விடமாட்டோம் என்று கூறிவிட்டார்கள். இதைவிட வேற என்ன வேணும் நான் சந்தானத்தைப்பற்றிச் சொல்வதற்கு.

இந்த நேரத்தில் ஒரு இனிப்பான செய்தியை உங்களுக்குக் கொண்டு வந்திருக்கிறேன்" என அவரது பேச்சை சற்று நிறுத்தியவுடன் அனைவரும் ஆவலாக அமைச்சரைப் பார்த்தார்கள் "என்ன சொல்லுங்க, சொல்லுங்க" என ஒவ்வொருவர் மனதும் சொல்லிக்கொண்டிருக்க உரையை தொடர்ந்தார் "இவ்வளவு நாளும் இந்த மருத்துவனை சுற்றயல்கூறாக இருந்தது. இன்றிலிருந்து இது கிராமிய மருத்துவமனையாக தர உயர்ச்சி பெறுகின்றது" எனக்கூறி அதற்கான ஒப்புதலை பிராந்திய நலத்துறை பணிப்பாளரிடம் கையளித்தார்.

கைதட்டல் ஒலி வானுயர ஓங்கி ஓய்ந்தது.

ஏறத்தாள ஐந்து நிமையங்கள் வரை கைதட்டல் நீடித்தது என்றால் பாருங்களேன்.

"சிறப்பாக மருத்துவமனையை வழி நடத்துகின்ற மருத்துவர் சந்தானம் மற்றும் ஊழியர்கள், குறிப்பாக மருத்துவமனைக் குழு அனைவருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாராட்டுக்களைத் தெரிவித்து உரையினை நிறைவு செய்கிறேன்" என நிறுத்தினார் அமைச்சர்.

சந்தானத்தின் தந்தை உண்மையாகவே மனம் மகிழ்ந்தார். அமைச்சர், பெரியோர்கள் எல்லோரும் தனது மகனை பாராட்டுவதில் பெருமை கொண்டார்.

அடுத்த ஆண்டில் மேலும் ஒரு மருத்துவர் கிண்ணியாவில் இருந்து மாற்றலாகி வந்தார்.

இங்கு வருவதற்கு பலர் விண்ணப்பித்திருந்தார்கள். சூரங்கல்லைப் பிறப்பிடமாகக் கொண்ட மருத்துவர் சம்சுதீனுக்கே அந்த வாய்ப்புக் கிடைத்தது.

மூன்று மருத்துவர்களும் சிறப்பான பணிகளை மக்களுக்கு வழங்கினார்கள்.

மக்களுக்கு மேலும் சிறந்த பணிகளை செய்ய விரும்பிய சந்தானம் சக மருத்துவர்கள் இருவருடனும் சிறப்புக் கலந்துரையாடல் ஒன்றினை நடத்த எண்ணினான்.

அதற்காக தனது வீட்டில் இரவு உணவு ஏற்பாடு செய்து வீட்டிற்கு வருமாறு அழைத்தான். உணவு நேரத்தில் தனது விருப்பைத் தெரிவித்தான். அவர்களும் அதற்கு இணங்கினர்.

மறு நாள் பணியாட்களிடமும் பேசினான். அவர்களில் சிலர் முகத்தைச் சுழித்தாலும் தமது எண்ணம் நிறைவேறாது என்பதால் முழுவிருப்பம் என்பதனை உதட்டளவில் தெரிவித்தனர்.

அடுத்த நாள் மருத்துவமனைக் குழுவின் சிறப்புக் கூட்டத்திற்கு அழைப்பு. கூட்டத்தில் கலந்து கொண்டோர் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

"இன்று முதல் வெளி நோயாளர் பிரிவு இரவு எட்டு மணி வரை திறந்திருக்கும்" அறிவிப்பு மூன்று மொழிகளிலும் பெரிதாக போடுவதற்கான நடவடிக்கைகளை குழு எடுத்திருந்தது.

வயலுக்குச் சென்று கொண்டிருந்த சேகர் அந்த அறிவிப்பைப் பார்த்துவிட்டு தன் நண்பனிடம் " பாத்தியா மச்சான் நிலமைய, முதல் இருந்த டொக்ரர் அம்புலன்ஸ்ல பசளை ஏற்றி வயல் செய்திற்று இருந்தார். இந்த டொக்ரர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயலுக்குப் போற நமக்கு ராவு எட்டு மணி வரைக்கும் ஆஸ்பத்திரிய திறந்து வச்சிருக்கிறார்" எனக் கூறி மகிழ்ந்தான்.

இரண்டு மாதங்களின் பின்னர் கூடுதல் கொடுப்பனவிற்கான சிறப்பு ஒப்புதலை நலத்துறை அமைச்சர் வழங்கியிருந்தார்.

அதன்பின்னரே முகத்தை முன்னர் சுழித்தவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

"நான் சொன்னனான் தானே. டொக்ரர் எப்பிடியெண்டாலும் ஓவர்ரைம் எடுத்துத் தருவார் என்டு. நீங்க கேட்கல்ல" என்று மருத்துவத் தாதியான சுகுமாரி தனது தோழியிடம் கூறியபோது "இவர் எவ்வளவு கெட்டிக்காரரா இருக்கிறார்டீ" பதிலுரைத்தாள் மங்கயற்கரசி எனும் தாதி.

வெளி நோயாளர் பிரிவு கதவைத் திறந்த உள்ளே சென்றவனுக்கு அதிர்ச்சியாக இருந்தது. இராசையா அண்ணனைப் பார்க்கும் போது. தலையிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது.

"இப்பிடி அடித்திருக்கிறார்களே" என்று கோபத்துடன் அவர் அருகில் சென்றான்.

"இல்லை ஐயா அவங்க அடிக்கல்ல. அவங்க துரத்தி வரக்கொள்ள நான் உள்ளுக்குள்ள ஓடி வந்தனான். அப்ப தடக்கி விழுந்திற்றன்" என்று கூறியதன் பின்னரே சந்தானத்தின் கோபம் அடங்கியது.

எதற்கும் அவசரப்படக் கூடாதுதான் என தன் மனதுள் நினைத்துக் கொண்டான்.

நடந்தவற்றை விசாரித்து அறிந்து கொண்டான். இராசையா அண்ணன் தன்னைப் பொறுத்தருளுமாறு கோரினார்.

அன்றிலிருந்து இராசையா அண்ணனில் மாற்றம் தெரிந்தது. உண்மையாகவே மாறித்தான் விட்டார்.

தானாகவே சிந்தித்த அவர் மூன்று இன மருத்துவர்களும் ஒற்றுமையாகப் பணியாற்றுகின்ற போது நமக்கு மட்டும் ஏன் இப்படியான மனசு இருக்கிறது என அவர்களிடம் அடிவாங்கிய பின்னர் அவரது மண்டைக்கு உறைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தானம் உண்மையில் மகிழ்ந்தான்.

முன்னர் அந்த மருத்துவமனை வளவிற்குள் ஒரு பசு வந்தபோது அதனை விரட்டுவதற்காக ஒரு மருத்துவர் அதன் மேல் அமிலம் ஊற்றிய போது யாரும் அதற்கெதிராக கிளர்ந்தெழவில்லை.

ஆனால் இன்று மக்கள் கிளர்ந்தெழுந்திருக்கிறார்கள். இது மக்கள் ஊரில் பற்றுள்ளவர்களாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வதற்கான அறிகுறி என்பதனை எண்ணியே மகிழ்ந்தான்.

வீடு சென்ற பின்னர் தன் துணைவியாரிடம் என்ன நடந்தது என்பதனையும் எவ்வாறு மருத்துவமனைக்குழுத் தலைவரின் உதவியுடன் அனைத்தையும் சமாளித்தான் என்பதனையும் கூறினான்.

"நான் சரியாப் பயந்து போயிற்றன். அழைப்பு எடுத்தவர்கள் அழுது கொண்டு தான் கதைச்சவங்க, கெதியா ஐயாவ வரச்சொல்லுங்க எண்டு அழுதவங்க. நான் அத உங்களுக்குச் சொல்லல்ல. போக முதலே ஏன் உங்கள கலவரப்படுத்துவான் எண்டு நினைச்சன்." என்றாள்.

தன் பிள்ளைகளை அணைத்தவாறே துணைவியாரின் செயலை எண்ணி பெருமிதம் கொண்டான் சந்தானம்.

கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது.

கதவைத் திறந்தவனுக்கு ஓரே மகிழ்ச்சி "தன் உயிர் நண்பன் சுதேசன்" வெளியே நின்று கொண்டிருந்தான். இஸ்ரவேல் நாட்டில் விவசாயத்துறையில் உயர்பட்டப் படிப்பிற்காகச் சென்றவன் நாடு திரும்பியதும் தன் நண்பனைச் சந்திப்பதற்காக வந்திருக்கிறான்.

நீண்ட நாள்களின் பின்னர் நண்பர்கள் சந்தித்திருக்கின்றார்கள். நாம் ஏன் அவர்களுக்குத் தொல்லை கொடுப்பான்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்த்தத் துடிக்கும் மனிதம்

'அம்பலத்தரசு .. அம்பலத்தரசு'

ஆறு தடவை அழைத்த பின்னர் தான் 'ஆரு...' என்ற சத்தம் வீட்டினுள் இருந்து வந்தது. ஆரு என்ற சத்தத்திற்கு உரியவள் அம்பலத்தரசுவின் அன்னை புரிகுழலாள்.

வெளிய வாம்மா , நான் கலைச்செல்வன் என்றார் பாமகள் வித்திலாயல பள்ளி முதல்வர். நித்திரைக் கலக்கத்தில் ஆரு என்று கேட்டவள் துடித்துப்பதைத்துக் கட்டியிருந்த சேலையைச் சரி செய்துகொண்டு வெளியே ஓடி வந்தாள்.

ஐயா , கொஞ்சம் இருங்க. தம்பிய எழுப்பிற்று வாறன் என்றவள் வீட்டினுள் புகுந்தாள். தம்பிடேய்...., தம்பிக்குட்டி.... டேய்..... என்று மகனின் தோளைப் பிடித்து உலுக்கி உலுக்கி எழுப்பினாள். எடேய் எழும்புடா புது ஐயா வந்திருக்கார்ரா என்று பலதையும் கூறி மல்லுக்கட்டி ஒருவாறு எழுப்பி விட்டாள் மகனை.

வீட்டிற்கு வெளியே வந்தவன் தன் பள்ளி முதல்வருக்கு அருகில் சென்று "என்ன ஐயா வேணும்" என்றான் பத்து வயது அம்பலத்தரசு.

"இப்ப மணி ஏழே முக்கால், கெதியா வெளிக்கிட்டு வா. பள்ளிக்கூடத்திற்கு போகோணும். வாறியா. இண்டைக்கு காலயில கஞ்சி காய்ச்சிருக்கம். கெதியா போனாத்தான் கஞ்சி இல்லாட்டி இல்லை" என்றவுடன் ஓடிப்போய் பல்தீட்டி முகத்தை கழுவி வந்தான். அன்னை மகனது பள்ளி உடுப்புகளை எடுத்துக் கொடுத்தாள். உடுத்திக்கொண்டு பள்ளி முதல்வருடன் பள்ளி நோக்கி நடக்கலானான்.

புரிகுழலாள் ஒருவித குற்ற உணர்வுடன் மகன் போவதைப் பார்த்துக்கொண்டு நின்றாள். புது ஐயா ஒண்டும் பேசாம மகனக் கூட்டிற்றுப் போறாரே என தனக்குள் நினைத்துக் கொண்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இவரும் காட்டுக்குத் தேன் எடுக்கப் போயிற்றார். இவர் நிண்டிருந்தாரெண்டா நேரத்தோட எழும்பியிருப்பார்." தான் நேரத்துடன் எழுந்திருக்காததை எண்ணி கவலைப்பட்டாள் அன்னை.

நாகநாதன் தன் அண்ணன் காங்கேயன், நண்பன் முருகேசு என மூவருமாக காட்டிற்கு தேன் எடுக்கச் சென்று விட்டார்கள்.

தேன் எடுப்பதற்காகக் காட்டுக்குச் சென்றால் மூன்று நாலு நாள்கள் காட்டில் தங்கியிருந்து தேன் எடுப்பார்கள்.

ஒரே நாளில் தேன் கூடுகளை கண்டு அதிலிருந்து தேன் எடுப்பது சாத்தியமில்லை. காட்டில் போனால் தேன் கூட்டைத் தேடி அலைந்து ஒருவாறு கண்டுவிட்டால் நளினமாக தேன் எடுத்து, கொண்டு போயிருக்கும் சுரக்குடுவைகளில் தேனை வதையுடன் அப்படியே கொண்டு வருவார்கள்.

கொண்டு வருகின்ற தேனை கொள்வனவு செய்வதற்காக வாயிது நானா வருவார். வாயிது நானாவின் பல்பொருள் வாணிபத்தில் தான் காட்டுக்குப் போகும் போது தங்கியிருக்கும் நாள்களுக்குத் சமைப்பதற்கு அரிசி, பருப்பு, மிளகாய்த்தூள் உட்பட சோறு கறி ஆக்குவதற்குத் தேவையான பொருட்களை கடனாகப் பெற்றுச் செல்வார்கள்.

வாயிது நானா வாங்கும் பொருட்களுக்கு அதிக விலை போடமாட்டார். வாங்கும் தேனுக்கும் குறைந்த விலை போடமாட்டார். என்றாலும் இருபக்க விலையினையும் தீர்மானிப்பவர் அவர்தான். கூடக் குறைய என்பதெல்லாம் நாகநாதனைச் சேர்ந்தவர்களுக்குத் தெரியாது. அவர்கள் பள்ளிக்கூடப் பக்கம் மழைக்குக் கூட ஒதுங்கியவர்கள் அல்லர்.

கணக்கு வழக்குப் பார்க்கத் தெரியாது. கேட்பதைக் கொடுப்பார்கள். கொடுப்பதை வாங்கிக் கொண்டு சத்தமின்றி வருவார்கள் போவார்கள். இதுதான் அவர்களது நடைமுறை.

நாகநாதன் குழுவினர் காட்டிற்குப் போய் இரண்டு நாள்களாகின்றன. நாளை அல்லது நாளை மறுநாள் வீடு திரும்புவார்கள். அதுவரை புரிகுழலாள் மகனுடன் இருப்பாள். மகனுடன் சிரித்துப் பேசிக் கொண்டு கொக்கான் வெட்டி விளையாடிக்கொண்டும் இருப்பாள்.

மகனது படிப்பில் பெரிதாக அக்கறை இல்லை. கல்வியின் பெறுமதியினை நாகநாதனோ புரிகுழலாளோ பெரிதாக அறிந்திருக்கவில்லை. தேனெடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிற்குச் செல்வதற்கு மகனுக்கு எதற்கு படிப்பு? வீணாக காலத்தை செலவழிக்க அம்பலத்தரசுவின் பெற்றோர் விரும்பியிருக்கவில்லை.

நாகநாதன் மகனை பள்ளிக்கு படிக்க அனுப்புவதில் உடன்பாடு இல்லை. நேரத்துடன் எழுந்திருப்பது பெரிய சிக்கலாக இருந்தது. மகன் பள்ளிக்குப் போவதெனில் நேரத்துடன் மகன் எழுந்திருக்க வேண்டும். மகன் எழுந்திருக்க வேண்டுமெனில் பெற்றோரும் எழுந்திருக்க வேண்டும்.

இது நடைமுறைக்குச் சரிவராது என்பது நாகநாதனின் நிலைப்பாடு.

பள்ளி முதல்வர் கலைச்செல்வன் ஊர்ப் பள்ளிக்கு வந்து மூன்று கிழமைகள் ஆகின்றன. வந்து நான்கு நாள்களில் ஊரின் நிலையினை உணர்ந்து கொண்டார்.

ஊர்க்காரர்கள் வில்லங்கமானவர்கள் என்பதனை புரிந்து கொண்டார். பிரம்பெடுத்து பாடம் நடத்தும் இடம் இதுவல்ல என்பதனையும் தெரிந்து கொண்டார்.

அன்பு. ஓம் அன்புதான். இது மாத்திரமே இங்கு பயன்படுத்த வேண்டிய பொறிமுறைக்கருவி என்பதனை நடைமுறை கருவியாகத் தேர்ந்தெடுத்தார்.

பள்ளிக்கு வந்து நான்காம் நாள் மாலையில் நாகநாதனை சந்திக்க விரும்பிய கலைச்செல்வன் அவனது வீட்டிற்குச் சென்றார்.

வீட்டு முற்றத்திலே நின்ற பாலை மரநிழலிலே சாக்குக் கட்டிலிலே படுத்திருந்தான். வருவது பள்ளி முதல்வர் என அறிந்திருந்தும் நாகநாதன் எழுந்திருக்கவில்லை. எழுந்திருக்க வேண்டும் என்று தோணவுமில்லை. எழுந்திருப்பது மரியாதையான செயல் எனவும் அவன் புரிந்திருக்கவுமில்லை.

"என்னட்டயா? எனக் கேட்டான் படுத்திருந்தவாறே." "ஓம் நாகா. கொஞ்ச நேரம் கதைக்கலாமா" கேட்டார் கலைச்செல்வன். அப்போது தான் எழுந்து கட்டிலில் அமருவதற்கு இடம் கொடுத்தான் நாகநாதன்.

"சொல்லுங்க" என்றான்.

"அம்பலத்தரசு கெட்டிக்காரன் எண்டு அவன்ர வகுப்பு ஆசிரியர் சொன்னா. அவன் ஒழுங்கா பள்ளிக்கூடம் வாறல்ல. அவன பள்ளிக்கு ஒழுங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனுப்பினாத்தானே அவன் படிப்பான்" கலைச்செல்வன் பக்குவமாக நாகநாதனுக்கு புரிகின்ற விதத்தில் நாகாவின் மொழியில் கூறினார்.

"அவன் படிக்கிறதே எனக்கு விருப்பமில்ல. தேன் எடுக்கப் போறதுக்கு எதுக்கு படிப்பு?. சும்மா காலத்த வீணாக்கிறது.." என இழுத்தான்.

நாகநாதனின் நிலைப்பாடு கலைச்செல்வனுக்கு தெளிவாக விளங்கியது. மகன்தான் பள்ளிக்கு வருவதற்கு பின்னடிக்கிறான் என்று நினைத்து வந்த பள்ளி முதல்வருக்கு மகனல்ல கரணியம் அப்பாதான் முழுக்கரணியம் என்பதனை தெளிந்து உணர்ந்து கொண்டார்.

இதனைக் கையாள வேண்டிய முறையில் கையாள வேண்டும். மேலும் தொடர்ந்து பேச பள்ளி முதல்வருக்கு மனம் இடம் கொடுக்கவில்லை.

நாகநாதன் நீ கூலி வேலைக்குப் போறனியா?

"ஓம்" பதில் வேண்டா வெறுப்பாக வந்தது.

எங்கட வீட்டுத் தோட்டத்தில புல்லுக் கொத்துற வேல இருக்கு. நாளைக்கு வந்து செய்யேலுமா? பள்ளி முதல்வர் கேட்டவுடன் சிறிது உற்சாகமடைந்தவன் 'எத்தின நாளைக்கு வேல இருக்கும்? ஆர்வத்துடன் கேட்டான்.

தன்னுள் உள்வாங்கப் படுகிறான் என்பதனை புரிந்துகொண்ட கலைச்செல்வன் "ஒரு..... நாலு நாளைக்கு வேல இருக்கும்" என்றார்.

"அப்ப என்ர கூட்டாளி காங்கேயனையும் கூட்டி வரயா" நட்புக்கு உதவும் நோக்கத்துடன் கேட்டான்.

நாகநாதனை அறிவூட்டுவதே கலைச்செல்வனின் நோக்கம். எதற்கு அங்கு காங்கேயன்?

"இல்ல நாகநாதன் ஓர் ஆள்தான் வேல செய்யலாம். உனக்கு ஏலுமெண்டா சொல்லு. இல்லாட்டி வேற ஆரையெண்டாலும் நான் பாக்கிறன்" கூறி முடிப்பதற்குள் "இல்ல ஐயா நான் நாளைக்கு வாறன்" ஐயா என்பதனை சேர்த்து மரியாதையாகக் கூறியது பள்ளி முதல்வருக்கு மகிழ்ச்சியை மனதில் கொடுத்திருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்கு வாற ஆக்களுக்கு தேத்தண்ணி குடுக்க மாட்டீங்களா நாகநாதன்" என கலைச்செல்வன் கேட்க அதிசயமாகப் பள்ளி முதல்வரைப் பார்த்தான் நாகநாதன்.

'எங்கட வீட்ட தேத்தண்ணி குடிப்பீங்களா நீங்க?' ஆச்சரியம் கலந்த மகிழ்ச்சி தெரிந்தது குரலில்.

புரிகுழலாள் சிறிது நேரத்தில் தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள்.

தேநீர் குவளையில் மீன் வாடை வீசியது. அதனை வெளியில் காட்டிக் கொள்ளாமல் "நல்ல சுவையான தேநீர்" என தேநீரை குடித்துக் கொண்டே கலைச்செல்வன் கூறினார். புரிகுழலாளுக்கும் மகிழ்ச்சிதான்.

முதன்முதலாக வேறு ஊரைச் சேர்ந்த ஒருவர் தங்களிடம் தேநீர் குடித்திருக்கிறார். அதுவும் பள்ளி முதல்வர் தேநீர் குடித்திருக்கிறார். மகிழ்ச்சியாக இருக்காதா பின்ன?

பள்ளி முதல்வரின் வீடு நாகநாதனின் வீட்டிலிருந்து எட்டுக் கிலோமீற்றர் தூரத்திற்கப்பால் இருந்தது. அடுத்தநாள் காரி(சனி)க்கிழமை என்பதால் நாளையே வேலைக்கு வருமாறு கலைச்செல்வன் அழைத்திருந்தார்.

நாகநாதன் தனது ஈருருளியில் ஏழு மணியளவில் தன் வீட்டிலிருந்து புறப்பட்டான். மணி ஏழு இருபது ஆகும் போது பள்ளி முதல்வரின் வீட்டுக்கு வந்து சேர்ந்து விட்டான்.

கலைச்செல்வன் நாகநாதனை எதிர்பார்த்தவாறு இருந்தார். "வா நாகநாதா. உன்னைத்தான் பாத்திற்று இருக்கன். வேலயச் சொல்லிற்று நான் ஒருக்கா வெளியில போகோணும் எண்டு இருக்கிறன்" என்றார் நாகநாதனிடம்.

அவரது வீட்டின் பின் பக்கமாக மரவள்ளி பயிரிடப்பட்டிருந்தது. சென்ற கிழமைதான் புற்களைச் செருக்கி துப்பரவாக்கினார் கலைச்செல்வன்.

நாகநாதனை தன் வழிக்குக் கொண்டு வர வேண்டும் என்பதற்காகவே அவனுக்கு வேலையினை உருவாக்கியிருந்தார்.

மண்வெட்டியைக் கொடுத்து "புல் செருக்க எண்டுதான் சொன்னனான். ஆனா புல் எல்லாம் நானே செருக்கிப்போட்டன். நீ நன்றாக மரவள்ளியின் இடையே உள்ள இடத்தினைக் கொத்திப் பண்படுத்த வேண்டும்" என நாகநாதன் செய்ய வேண்டிய வேலையை எடுத்துக் கூறியபின் "முதல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பிடு நாகநாதன்" என மகன் கொண்டு வந்த அரை இறாத்தல் வெதுப்பியையும் கிண்ணத்திலே இருந்த பருப்புக் கறியையும் கொடுத்துவிட்டு தனது வேலை நிமித்தமாக உந்துருளியில் புறப்பட்டார்.

சாப்பிட்ட பின் வேலையில் மும்முரமானான் நாகநாதன்.

நாகநாதன் நல்ல உடல்வாகு கொண்டவன். சிறந்த தொழிலாளி. கொடுக்கப்படும் வேலையினை திறம்பட செய்து முடிப்பான். ஆனால் வேலைக்குப் போவதற்கு சோம்பல். வேலை செய்யத் தொடங்கிவிட்டால் முடியும் வரை இருக்கவும் மாட்டான்.

பத்தரை மணியளவில் கலைச்செல்வன் வீட்டுக்கு வந்து நாகநாதனைப் பார்ப்பதற்காக வேலை செய்யும் இடத்திற்குச் சென்றார்.

தன் கண்களால் நம்பவே முடியவில்லை. தான் புற்களைச் செருக்க நாலு நாள்கள் எடுத்துக்கொண்ட இடப்பரப்பினை வெறும் இரண்டரை மணிநேரத்தில் கொத்திப் பிரட்டி எறிந்து விட்டிருந்தான் நாகநாதன்.

இவர்களல்லவா பணியாளர்கள். இவர்களை நாம் பயன்படுத்துவதில்லை. அவர்களது உழைப்பை அவர்கள் எப்படி பயன்படுத்த வேண்டும் எனவும் அவர்களுக்கும் தெரிவதில்லை. நாமும் வழிகாட்டுவதில்லை என மனதில் எண்ணி நொந்து கொண்டார்.

மகனை அழைத்து தேநீர் கொண்டு வருமாறு கூறினார்.

மகன்,அவித்த சோளம் கதிர் இரண்டைக் கொண்டு வந்து கொடுத்தான்."அம்மா இதச் சாப்பிடட்டாம். தேத்தண்ணி கொண்டு வாறாவாம்" என்றான் மகன்.

நாகநாதனுக்கு ஒரு சோளம் கதிரைக் கொடுத்து தானும் ஒரு கதிரைச் சாப்பிட்டார். மகன் அருகில் இருந்து ஆங்கிலத்தில் ஏதே கேட்டான். அப்பா பதில் கூறினார். நாகநாதனுக்கு எதுவும் புரியவில்லை. "புள்ள எத்தனயாம் வகுப்பு படிக்குது ஐயா?" நாகநாதன் அறிய ஆவலானான்.

"ரெண்டாம் வகுப்பு. பாத்தியா எப்பிடி ஆங்கிலம் கதைக்கிறான் எண்டு. உன்ர மகன் இவனவிடக் கெட்டிக்காரன். அவனும் உன்னப் போலதான். பார் நான் நாலுநாள் செய்யிற வேலய நீ ரெண்டு மணிநேரத்தில செய்திருக்கிறா. உங்களுக்கு உங்கட திறமையும் விளங்குறதில்ல. உங்களப் பத்தியும் விளங்குறதில்ல" ஆசையூட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைச்செல்வன் மகனிடம் ஏற்கனவே கூறியிருந்தவாறு நாடகம் நடந்தேறியது.

பள்ளி முதல்வரின் முதலாவது வியூகம் வெற்றியடைந்து விட்டது என்பதனை நாகநாதனின் முகமும் அவனது வார்த்தைகளும் சொல்லாமல் சொல்லி நின்றன.

அம்மா கொண்டு வந்த தேநீரைப் பருகியவன் சிறிது நேரமும் இருக்கவில்லை. தன் பணியைத் தொடங்கினான்.

பகல் உணவு நேரத்தில் நாகநாதனுடன் கூட இருந்து உணவு உண்டார் பள்ளி முதல்வர். நாகநாதனுக்கு கலைச்செல்வனின் நடவடிக்கைகள் உள்ளூர மகிழ்ச்சியளித்ததுடன் மனதில் மாறுதல்களையும் ஏற்படுத்தியது.

மகனை பள்ளிக்கு அனுப்பினால் என்ன என்ற எண்ணம் மனதில் துளிர் விடத்தொடங்கியது.

நாலரை மணிக்கு வேலை முடிந்ததும் கலைச்செல்வன் ஆயிரம் உருபாக்களை வேலைக்கான கொடுப்பனவாகக் கொடுத்தார்.

"என்னய்யா இவ்வளவு தாறீங்க?" என நாகநாதன் கேட்க "குறைவாகக் கொடுத்து விட்டோமோ என எண்ணி "ஏன் நாகன்நாதன் காணாதா?" எனப் பதில் கேள்வி கேட்டார். "இல்ல ஐயா இவ்வளவு காசு ஆரும் எங்களுக்குத் தாறல்லயே. நீங்க கூடத் தந்திருக்கீங்களே ஐயா."என்றான்.

மகிழ்ந்தவராக உண்மையில நான் தந்ததே குறைவுதான் நாகா. நீ செய்யிற வேலைக்கு நான் கூடத்தான் தரோணும். இண்டைக்கு காசு இல்ல. நாளைக்கு வா சேத்துத் தாறன்" பள்ளி முதல்வர் கூற உண்மையில் நெகிழ்ந்தே போனான் நாகநாதன்.

கலைச்செல்வன் வீட்டில் காலையிலிருந்து மாலை வரை நடந்தவற்றை ஒன்று விடாது துணைவியிடம் கூறி வியப்படைந்தான்.

'மகன நாளயில இருந்து பள்ளிக்கு அனுப்போணும். அவனப் படிப்பிக்கோணும். அவன மட்டுமில்ல நம்மட ஊரப் புள்ளகள் எல்லாரயும் நல்லாப் படிக்கச் சொல்லோணும். நான் நாளைக்கு வேலைக்குப் போயிற்று வந்து தலைவரிட்ட கதைச்சு புள்ளகள பள்ளிக்கு அனுப்ப நடவடிக்க எடுக்கோணும்'என தன் மனக்கிடக்கைகளை கொட்டித் தீர்த்தான் நாகா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு நாளில் எப்பிடி இருந்த மனிதரை இப்படி ஆக்கிவிட்டார் பள்ளி முதல்வர் கலைச்செல்வன் மக்களை நேசிக்கின்ற மனிதர்.

இடமாற்றம் கிடைத்து பள்ளிக்குப் போக முன்பே அந்த ஊரிலுள்ள மக்களது வாழ்நிலை, அவர்களது மனநிலை என்பவற்றை பலரிடம் கேட்டுத் தெரிந்து கொண்டுதான் அங்கு சென்றார்.

எப்படியான செயற்பாடுகளை முன்னெடுத்தால் பிள்ளைகளுக்கு கல்வி அறிவூட்டலாம் என்பதனை பல நாள்கள் வீட்டில் தனிமையில் இருந்து எண்ணியிருக்கிறார். ஒவ்வோர் அசைவினையும் ஒவ்வொரு காலடியினையும் நிதானமாகவே எடுத்து வைக்கத் தொடங்கினார்.

அவ்வாறான ஓர் அசைவே நாகாவின் மனமாற்றத்திற்குக் கரணியமாக அமைந்தது. மனிதத்தினை நேசிக்கும் மனிதர்களால் மட்டுமே இவ்வாறு செயற்பட முடியும்.

ஆசிரியர் தொழில் என்பது தொழிலே அல்ல. ஒரு பிள்ளையின் வாழ்க்கையை வடிவமைக்கும் சிற்பியின் பணி என்பதில் மட்டுமே உடன்பாடுள்ளவர் கலைச்செல்வன்.

ஓவ்வோர் ஆசிரியரும் ஒவ்வொரு பிள்ளையிடமும் வெவ்வேறு வகையான நடைமுறைகளைக் கையாண்டு அப்பிள்ளையை அவனது திறனுக்கேற்ற வகையில் திறமையுள்ளவனாக்க வேண்டும் என்பதில் அசையாத உறுதியான நம்பிக்கையுள்ளவர். அதன்படி நடப்பவர்.

அவ்வாறான ஆசிரியர்கள் ஒவ்வொருநாளும் கற்கின்ற மாணவர்களாக தாம் இருக்க வேண்டும். அப்படி இருந்தாலேதான் நாளும் நாளும் புதிதுபுதிதாக அறிந்து அவற்றைத் தம்மிடம் கற்கும் மாணவர்களுக்கும் கூற முடியும் என்பதனை ஆசிரியர்களிடம் அடிக்கடி கூறுவதுடன் அவ்வாறு செயற்படும் பழக்கத்தினை தானும் கடைப்பிடித்து வருபவர்.

வழக்கமாக காலை ஆறே முக்கால் மணிக்கு கலைச்செல்வனின் உந்துருளி பள்ளிப் படலையருகில் நிற்கும். திங்கள் காலையும் அவ்வாறுதான் போனார். அந்தநேரத்தில் அம்பலத்தரசு கதவருகில் நின்றான்.

இரண்டு நாள்கள் நாகநாதன் கலைச்செல்வன் வீட்டில் வேலை செய்தாலும் மகனை ஒழுங்காக பள்ளிக்கு அனுப்புமாறு கலைச்செல்வன் கோரவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாகா மகனை அனுப்புவான் என்பதனை அவர் நாகாவின் நடவடிக்கைகள் மூலமாகவும் நாகாவின் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகளிலிருந்தும் உய்த்தறிந்து கொண்டிருந்தார் பள்ளி முதல்வர்.

அம்பலத்தரசைக் கண்டவுடன் மகழ்வடைந்தார் கலைச்செல்வன்.

ஒழுங்காகப் பள்ளியில் படித்தவன் அப்பா வீட்டில் இல்லை என்றால் உரிய நேரத்தில் எழுந்திருக்கமாட்டான்.

அன்று பள்ளிக்கு வரவில்லை என்பதனாலேயே அம்பலத்தரசைத் தேடி வீட்டுக்கு வந்து அழைத்துச் சென்றார் கலைச்செல்வன்.

மகிழ்ச்சியான கற்றலும் கற்பித்தலுமே நம் பிள்ளைகளை உயர்நிலைக்கு உயர்த்தும் என்ற நோக்கோடு அயராது பாடுபட்டுக்கொண்டிருக்கிறார் பள்ளி முதல்வர் கலைச்செல்வன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிரும் வாழ்வும் பேசும் பெண்மை

'அறிவகன் , அறிவகன்' அம்மா உச்சத் தொனியில் அழைத்தது தூரத்தில் விளையாட்டுத் திடலின் மரநிழலில் நின்ற அறிவகனுக்கு மெதுவாகக் கேட்டது. மச்சான் எத்தன மணிரா? இரண்டு நாற்பது என்றவுடன் அம்மா ஏன் அழைக்கிறாள் என்பதனை தெரிந்து கொண்டவனாக 'மச்சான் நாளைக்கு வாறண்டா' என்று கூறிவிட்டு மட்டைப்பந்து விளையாட்டை முடித்து கதைத்துக் கொண்டிருந்தவன் இடைநடுவே நிறுத்தியவனாக வீடு நோக்கி ஓடினான் இருபது வயது நிரம்பிய அறிவகன்.

"என்னம்மா கிடந்து கத்திற்று கிடக்கிறா?" என்ற கேட்டுக் கொண்டே வீட்டிற்குள் நுழைந்தான். "ஏன் கூப்பிட்டனான் எண்டு தெரியாதாக்கும் உனக்கு" "இண்டைக்கு சனிக்கிழமை, மூணு மணிக்கு வெளிக்கிடோணும் எண்டல்லோ சொன்னனான். இரண்டு நாற்பத்தைந்து ஆகிற்று. கெதியாப் போய் சாப்பிடு தம்பி" என்ற அம்மாவின் சற்றுக் கோபக் குரல் அவனை சிறிது கவலையடைய வைத்தது என்னவோ உண்மை தான். அம்மா இப்பிடி கோபமாக அவனுடன் கதைப்பதில்லை.

ஒரே பிள்ளை, அப்பா இல்லாத பிள்ளை என்பதால் மிகுந்த செல்லம் கொடுத்து ஆனால் கண்டிப்புடன் வளர்த்து வந்தாள் மரகதம். "அப்பாவைப் போல் வரணும்" என்று அடிக்கடி சொல்லுவாள் மகனிடம்.

மரகதம் சில ஆண்டுகளுக்கு முன்பு தன் அம்மா அப்பாவுடன் கணேசபுரத்தில் தோட்டச்செய்கைக்காக கட்டைப்பறிச்சானில் இருந்து சென்று குறியேறியவள். இருபது வயது அவளுக்கு அப்போது.

விபுலாநந்தர் வித்தியாலயத்தில் மரகதம் நாலாம் வகுப்பு படித்த போது நாகராசா ஐந்தாம் வகுப்பு படித்தவன். அடுத்த ஆண்டு சேனையூர் மகாவித்தியாலயத்திற்கு நாகரசா சென்ற பின்னர் பதினொரு வருடத்தின் பின்னர் இப்ப தான் சந்திக்கிறாள்.

நாகராசா ஆறாம் வகுப்பு மட்டும் தான் சேனையூரில் படித்தவன். ஏழாம் வகுப்புக்கு திருக்கோணமலையில் உவர்மலை பள்ளியில் சேர்த்து விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பா நீர்ப்பாசனத் திணைக்களத்தில் காவலாளியாக பணியாற்றியதால் அம்மாவையும் பிள்ளையையும் நகரத்திற்கே அழைத்துவிட்டார் நாகராசாவின் அப்பா.

நாகராசா சாதரண தரத்தில் ஓரளவு சித்தியடைந்து உயர்தரத் தேர்வுக்குத் தோற்றி பல்கலைக் கழகம் செல்லுமளவிற்கு பெறுபேறு இல்லாவிட்டாலும் மற்றவர்கள் பாராட்டுமளவில் சிறந்ததாக இருந்தது. அவனுடன் படித்தவர்களுடன் பெறுபேற்றினை மகிழ்ச்சியாக கூறக்கூடியளவு சிறப்பான பெறுபேற்றினைப் பெற்றதனால் அப்பாவிற்கும் மனநிறைவுதான்.

அடுத்த ஆண்டிலே ஆசிரியராக நாகராசாவிற்கு வேலை கிடைத்தது. தனது ஊரில் முதல் நியமனம் கிடைத்தது. தன் ஊரில் உள்ள பிள்ளைகளுக்கு சிறப்பாக கல்விப் பணியினை செய்து கொண்டிருந்த போது ஒரு நாள் கடுமையான மழை பெய்து கொண்டிருந்தது. நாகராசா தனது நண்பர்களுடன் இருந்து கதைத்துக் கொண்டிருந்த வேளையில் "மரவள்ளிக் கிழங்கு அவிச்சுச் சாப்பிடா நல்லா இருக்கும் என " சொல்லிய நாகராசாவின் கோரிக்கைக்கு எதிராக ஒரு தலையும் அசையவில்லை.

துணைக்கு கார்த்திகேசை அழைத்துக் கொண்டு நண்பர்கள் இருவரும் செல்வநாயகம் அண்ணாச்சியின் சேனைக்குப் புறப்பட்டார்கள். ஐந்து நிமையத்திலேயே சேனைக்குப் போய்விட்டார்கள்.

செல்வநாயகம் அண்ணாச்சிதான் மரகதத்தின் தந்தை. மகள் தனியாக இருந்தாள். அப்பா மரவள்ளிக் கிழங்கு பிடுங்கச் சென்றிருந்தார். சேனையில் அவர்கள் தங்கியிருந்தது ஒரு குடிசை.

"மரவள்ளிக் கிழங்கை உரி மனே. யாரும் கிழங்கு வாங்க வருவாங்க. வந்தா தின்னக் குடுக்கலாம்" அப்பாவின் உத்தரவினால் கிழங்கை உரித்து மழையில் நனைந்திருந்த கம்புக் குச்சிகளை சிறிதாக உடைத்து அடுப்பில் நெருப்பு மூட்டி பானையில் கிழங்கைப் போட்டு அவிப்பதற்கு தயாரான போதுதான் நாகராசாவும் காரத்திகேசுவும் அவர்களின் சேனை வளவிற்குள் உள் நுழைந்தார்கள்.

மரகதம் மாவெள்ளை நிறமானவள். ஐந்து அடி ஏழு அங்குலம் உயரம். வட்ட முகம். நாகராசாவிற்கு மனதுக்குள்ளே ஒரு மாதிரியாகிவிட்டது. நாகராசாவின் மனசிற்கு மரவள்ளி மறந்து மரகதமானது.

மரவள்ளி வாங்கினது, நண்பர்களுடன் சேர்ந்து உண்டு மகிழ்ந்தது என்று நடைபெற்றவைகளெல்லாம் கதைகளாகின.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த கிழமை தன் வீட்டில் மரகதத்தை தனக்கு திருமணம் செய்து தருமாறு சொல்ல வீட்டில் பிரச்சினையாகி செல்வநாயகம் அண்ணையிடம் போய் நேரே கேட்க அதுவும் பிரச்சினையாகி ஆறு மாதங்களின் பின்னர் தன் நண்பர்கள் உதவியுடன் மரகதத்தை கைப்பிடித்தான் இரு வீட்டாரின் பலமான புயலின் பின்னரும்.

இருவரும் கட்டைப்பறிச்சானில் உள்ள நாகராசாவின் பெரியப்பாவின் வீட்டின் பின்புறத்தில் இருக்கும் இரண்டு அறைகளில் தங்களது எதிர்காலத்தினை திட்டமிடுவதற்காக தற்காலிகமாக தமதாக்கிக் கொண்டார்கள்.

நாகராசா தங்களது வீட்டாருக்காக வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற வெறியுடன் பள்ளி முடிந்த நேரங்களில் தோட்டம் செய்வான். மரகதம் புல் அள்ளுதல், நீர் இறைத்தல் என்று தோட்ட வேலைகளில் அவ்வப்போது உதவுவாள்.

மாலை நேரங்களில் சிறிமுருகன் விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு மைதானத்தில் கைப்பந்து விளையாடுவான். ஒரு மணிநேரம் விளையாட்டு.

அதன் பின் அரசடிப்பிள்ளையார் கோயிலில் முன்பிருக்கும் அனிச்சையடியில் நண்பர்களுடன் ஒன்றுகூடுவார்கள். அந்த இடத்தை அனிச்சையடித்திண்ணை என்று தான் சொல்லுவார்கள்.

பலவிடயங்கள் பேசுவார்கள். கதைப்பவற்றில் பல அறிவினை வளர்ப்பதற்காக பயன்படும். சில செயல் வடிவங்கள் பெறும்.

அன்று ஆண்டின் ஏழாம் மாதம் இருபதாம் நாள்.

“இருபத்தியேழாம் நாள் கறுப்பு ஜுலை. நாம நம்மட ஊரிலயும் நினைவுகூர வேணும்” நாகராசாவின் கருத்தை யாரும் எதிர்க்கவில்லை.

“உண்மை தான் மச்சான், நம்மட இராசகிளி அண்ணன்ர இடம் இது. அவர யாரால மறக்கேலும். எப்பிடியான மனுசன். அவர் குழந்தைப் பிள்ளைகளுக்குக் கூட கண்ணால் தண்ணி வரக்கூடாது எண்டு நினைக்கிற மனுசனாம். அவரக்கூட விட்டு வைக்கல பாதகனுகள். நம்மட ஊரில ஒவ்வொரு வருசமும் நாம இந்த நாள நினைவு கூரவேணும்” என்று சர்வா தனது கருத்தினை சொல்லி முடிக்கும் போது அதில் இருந்த சிலரின் கண்களின் ஓரத்திலே நீர் நிரம்பியிருந்ததை நாகராசா அவதானித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பு ஜூலையை எப்படி நினைவுகூர வேண்டும் என திட்டமிட்டார்கள்.

அன்று ஜூலை இருபத்தேழாம் நாள்.

பள்ளிகளுக்கு யாரும் செல்லக் கூடாது. எவருமே வேலைக்கு செல்லக்கூடாது. மாலை இராசகிளி அண்ணனுக்கான நினைவுக் கூட்டம்.

இதுவே திட்டம்.

பள்ளிக்குச் சென்ற மாணவர்கள் வீடுகளுக்குத் திருப்பி அனுப்பப் பட்டனர்.

வேலைகளுக்குச் சென்றவர்களை பக்குவமாக பேசி வீடுகளுக்கு திருப்பி அனுப்புவதில் முன்நின்றான் நாகராசா.

அவன் ஆசிரியராக இருந்தமையினால் மக்களும் அவனது கருத்திற்கு மதிப்பளித்தனர்.

மாலையில் அனிச்சையடியில் கூட்டம்.

இளையோர்கள் வீடு வீடாகச் சென்று தகவலை தெரிவித்து வந்தார்கள்.

எனினும் “இராணுவம் வந்தா என்ன செய்வது? காவல்துறை வந்தால் எங்கே ஓடுவது?” என்ற அச்சம் பலருக்கு.

“நாகராசாவிற்குத் தேவையில்லாத வேலை இது. இந்தக் காலத்தில இதெல்லாம் தேவையா. ஆசிரியர் எண்டா பள்ளிக்கூடம் படிப்பிக்கிறத விட்டுற்று. இதெல்லாம் எங்க போய் முடியப் போகுதோ?” என்று சிலர் தங்கள் பாட்டுக்கு விசனத்தைத் தங்களுக்குள் தெரிவித்தார்கள்.

கூட்டத்திற்கு எதிர்பார்த்ததை விட கூடுதலாகவே மக்கள் வந்திருந்தார்கள். இராசகிளி அண்ணன் எவ்வாறு வாழ்ந்திருக்கிறார் என்பதனை நாகராசா ஊகித்தறிந்து கொண்டான்.

கூட்டம் தொடங்கும் நேரத்திற்கு சரியாக ஐந்து நிமையங்கள் இருந்தன. “ஆமி வாறான், ஆமி வாறான்” என்று கூறிக்கொண்டே விதானையார் சந்திப் பக்கமிருந்து சுதா ஓடி வந்து கொண்டிருந்தான்.

இராணுவம் வந்தால் தகவலைப் பெற்றுக் கொள்வதற்காக நாகராவின் ஏற்பாடு அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரும் தலைதெறிக்க ஓடிக் கொண்டிருந்தனர்.

நாகராசா கல்லம்பார் பக்கமாக தனது ஈருருளியிலே மனதில் கனமான கவலைகளைச் சுமந்தவாறு ஓடிக் கொண்டிருந்தான். " சே நினைவு கூரலை செய்ய முடியாமல் போய் விட்டதே" என்ற ஏக்கம் மனதை நெருடியது அவனுக்கு.

கல்லம்பார் கும்பத்துமாலடிக்கு போயிருப்பான். வீதியின் அருகில் உள்ள பற்றைக்குள் இருந்த எட்டு இராணுவத்தினர் வெளியே வந்து நாகராசாவை நிறுத்தினர்.

இதனைக் கண்ட பின்னால் வந்தவர்கள் திரும்பி ஓடினர். "துவண்டஏப்பா, துவண்டஏப்பா" என்றவாறு அவர்கள் பின்னால் இரு இராணுவத்தினர் ஓடினர். 'ஓட வேணாம் , ஓட வேணாம்' என்று அவர்கள் மொழியில் சிங்கள இராணுவம் உரத்த குரலில் கத்தியபடி ஓடியது.

கல்லம்பார் வளைவினால் திரும்பியவுடன் தங்கள் துப்பாக்கிகளை ஓடியவர்களை நோக்கி குறிபார்த்தனர். சரமாரியாக சன்னங்கள் பறந்தன. ஓடியவர்கள் பக்கத்திலிருந்த வளவுகளுக்குள் புகுந்து ஓடினார்கள்.

நாகராசா வெடிச்சத்தத்தினைக் கேட்டதும் தனக்கும் இது தான் நடக்கப்போகின்றது. பரவாயில்லை. பிடித்துக்கொண்டு போனால் சித்திரவதை செய்து சாக வேண்டிவரும். சித்திரவதை இல்லாமல் சாக வேண்டுமாக இருந்தால் சுடுபட்டுச் சாக வேண்டும்.

தன் மனதில் துணிச்சலை வரவழைத்தவனாக தன்னைப் பிடித்திருந்த இராணுவ வீரனின் கையில் இருந்த துப்பாக்கியை கைப்பற்றும் நோக்குடன் தனதருகில் நின்ற ஆறு இராணுவத்தினரும் துப்பாக்கி வேட்டுச் சத்தத்திலேயே கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்த வாய்ப்பினைப் பயன்படுத்தி தனது பலத்தினை ஒருசேர தனது கைக்கு வரவழைத்து வலது கையினால் ஓங்கி ஒரு குத்துக் குத்தினான் அந்த இராணுவ வீரனுக்கு. மறு கணமே நாகராசாவின் கையில் ஏ கே 47. அதனை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது போராளிகள் மூலமாக முன்னரே அறிந்து வைத்திருந்து நல்லதாகப் போய்விட்டதாக அக்கணத்தில் எண்ணினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துப்பாக்கியை லோட் செய்து மற்றைய இராணுவத்தினரை குறி வைத்து துப்பாக்கியை நீட்டிய போது அவர்கள் கீழே விழுந்து நிலையெடுத்துக் கொண்டிருந்தனர். அனைவரும் ஐந்து மீற்றருக்கும் குறைவான தூரத்திலேயே இருந்தனர்.

நாகராசாவின் கையிலிருந்த துப்பாக்கிகள் நெருப்பைக் கக்கின. ஐந்து இராணுவத்தினரின் துப்பாக்கிகளும் இவனை நோக்கிச் சன்னங்களைப் பொழிந்தன.

எல்லாம் கணப்பொழுதில் நடந்து முடிந்து விட்டன.

மக்களைத் துரத்திக் கொண்டு சென்ற துப்பாக்கிச் சூடு நடத்திய இரு இராணுவத்தினரும் திரும்பி வந்த போது இரண்டு இராணுவ வீரர்கள் உயிர் துறந்தும் மற்றைய நால்வரும் காயங்களுடனும் நாகராசா சாவடைந்திருந்ததையும் கண்டனர்.

ஏதேதோ எல்லாம் சொல்லி இரண்டு இராணுவத்தினரும் கத்தினர். சற்று நேரத்தில் இராணுவ வாகனம் வந்தது. எல்லோரையும் ஏற்றிக் கொண்டு சென்றது. நாகராசாவையும் தான்.

மாலை ஏழு மணியிருக்கும் கிராம உத்தியோகத்தரை ஜீ.பீ.எஸ் இராணுவ முகாமுக்கு வரும்படி முகாம் பொறுப்பதிகாரி அழைத்திருந்தார். கிராம உத்தியோகத்தரிடம் "கொட்டி ஒண்டு சுட்டிருக்கிறம். போய்ப் பாருங்க" என்று கொச்சைத்தமிழில் கூறினார்.

நாகராசாவின் உயிரற்ற உடலைக் கண்டதும் வாய்விட்டு அழுதே விட்டார் கிராம உத்தியோகத்தரான தர்மலிங்கம் ஐயா. "ஐயா இவர் சிறந்த ஓர் ஆசிரியர். நல்ல பொடியன் ஐயா அவர். எங்கட பள்ளிக்கூடத்தில படிப்பிக்கிறவர்" என்று பலதும் நாகராசாவைப்பற்றிச் சொன்னதும் முகாம் பொறுப்பதிகாரிக்கு தனது வீரர்களில் ஐயம் ஏற்பட்டுவிட்டது.

தனது வீரர்களின் முரண்பாடால் தங்களுக்குள் சுட்டுக்கொண்டு விட்டார்கள் என நினைத்து விட்டார். அதனை தர்மலிங்கம் ஐயாவிடமும் கூறியதுடன் இந்த விடயத்தைப் பெரிதாக்காமல் துப்பாக்கிச் சண்டையின் இடைநடுவில் ஆசிரியர் வந்ததால் சாவடைந்து விட்டார் என்று கூறுமாறு தர்மலிங்கம் ஐயாவைக் கெஞ்சினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரும் "நம்மால என்ன தான் செய்ய முடியும். எப்படியோ உடலத்தைத் தருவதே பெரிய விடயம்" என எண்ணியவராக ஓம் என்பதற்கு அடையாளமாக தலையை ஆட்டினார்.

மரகதம் வீட்டில் தனது துணைவரின் வரவுக்காக அச்சத்துடன் காத்துக்கொண்டு இருந்தாள். யார் யாருக்கு என்ன என்ன நடந்ததோ தெரியாது என்று எண்ணிக் கொண்டிருந்தாள். தனது துணைவரின் உயிரற்ற உடல் மாத்திரம் தனது வீட்டிற்கு வரும் என்பதனை சிறிதும் ஒரு கணமேனும் அவள் எண்ணியிருக்கவில்லை.

நாகராசாவின் உடலைப் பார்த்தபோது மரகதம் "ஐயோ என்ர உசிரே" என்று வான் பிழந்த அழுகை இன்றுவரை அவ்வூரில் யாரும் அழவில்லை.

அங்கிருந்த அனைவரின் கண்களும் குளமாகின. நாகராசாவுடன் அன்றைய நாளில் நான்கு உயிர்கள் அந்த ஊரிலிருந்து காவுகொள்ளப்பட்டிருந்தன. ஊரெல்லாம் ஒரே ஓலங்கள்.

நாகராசா இந்த உலகை விட்டுப் பிரிந்த அந்த நாள் தான் இன்று. இராசகிளி அண்ணனும் கொல்லப்பட்ட நாளும் இன்று தான்.

இன்று மாலை கட்டைப்பறிச்சானில் நடக்க இருக்கிற நினைவுகூரல் நிகழ்வுக்குப் போவதற்காகவே மரகதம் தன் மகனை அவசரப்படுத்திக் கொண்டிருந்தாள்.

"அனிச்சசையடியில் நிகழ்வு மாலை ஆறு மணி ஐந்து நிமையத்திற்கு என்றும் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும்" என்று கட்டைப்பறிச்சான் இளைஞர்கள் மரகதத்திற்கு அழைப்பினை அனுப்பிவிட்டு கைப்பேசியூடாகவும் அன்புக்கட்டளையிட்டிருந்தார்கள்.

நாகராசாவின் சாவின் பின்னர் இரண்டு வயதுக் குழந்தையுடன் வந்தாறு மூலையில் தன் மாமாவின் வீட்டில் குடியேறிவிட்டாள் மரகதம். ஆண் துணை இன்றி ஒரு பெண் அதுவும் ஓர் இளம் பெண் வாழ்வது எவ்வளவு சிக்கல் நிறைந்தது என்பதனை நாகராசா மரகதத்துடன் ஊர்ப் புதினங்களை ஓய்வு நேரங்களிலும் தோட்ட வேலை செய்கின்ற வேளைகளிலும் கதைத்தவை நினைவிலிருந்தன.

தனது வீட்டார், தன் மாமா வீட்டார் எல்லோரும் மரகதத்தை தங்களது வீட்டில் வந்து இருக்குமாறு கேட்டிருந்தனர். தன் துணைவருடன் வாழாத வீட்டில் உறவு கொண்டாட தான் விரும்பவில்லை என்று மறுத்துவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்கும், தன் துணைவருக்கும் திருமணமான புதிதில் மனத்தெம் பேற்றியவர் மாமாதான். அதனாலேதான் மாமாவின் வீட்டினைத் தெரிவு செய்தாள்.

அங்கு எவ்வகைச் சிக்கலுமில்லை. துணைவரின் ஓய்வூதியத் தொகை அவர்கள் இருவரினது பிழைப்புக்கும் போதுமானதாக இருந்தது.

மேல் படிப்பிற்குப் பணம் தேவைப்படும் என்பதனை மரகதம் பிள்ளையுடன் கலந்து பேசுவாள். "ஏதாவது செய்வோம்" என மகன் சொல்லுவான்.

அப்போது அறிவகன் ஒன்பதாம் வகுப்புப் படித்துக்கொண்டிருந்தான். அவர்கள் இருக்கும் வீட்டிலிருந்து மூன்றாவது வீட்டில் பொது நலத்துறை ஆய்வாளர் வந்து பார்வையிட்டுக் கொண்டிருந்தார். அறிவகனும் அதனைப் பார்ப்பதற்காகச் சென்றான். அவனுக்கு அந்த வீட்டிற்கு பொது நலத்துறை ஆய்வாளர் வரப்போவது ஏலவே தெரிந்திருந்தது.

பக்கத்து வீட்டுக்காரர், அம்மாவின் மாமா, என ஐந்து பேர் முறைப்பாடு செய்திருந்தார்கள்.

சிக்கலுக்குரிய வீட்டுக்காரர்கள் ஆறு பசுக்கள் பாலுக்காக வளர்ப்பதாகவும் பசுக்களின் சாணத்தினால் கெட்டமணம் வீசுவதாகவும் அதனால் அக்கம் பக்கத்தில் வசிக்க முடியாதுள்ளதாகவும் ஆகையினால் பசுக்களை வேறு எங்காவது அப்புறப்படுத்த வேணும் என்பதே முறைப்பாடு.

ஆனால் அறிவகனுக்கு முறைப்பாட்டின் முடிவில் உடன்பாடில்லை. முறைப்பாடு நியாயாமானது என நினைத்தான். அந்த வீடும் ஆண் துணை இல்லாத வீடு.

அவர்களின் வாழ்வாதாரம் அந்தப் பசுக்களின் பால் விற்பனையின் மூலமாகத் தான் கிடைக்கிறது.

என்ன நடக்கிறது என்பதனைப் பார்ப்பதற்காகவே அந்த வீட்டிற்குச் சென்றிருந்தான்.

பொது நலத்துறை ஆய்வாளர் நல்ல மனசு உள்ளவர் போல் அறிவகனுக்கு தெரிந்தது. அவர் அவ்வீட்டுப் பெண்களுக்காகவும் பேசினார். முறைப்பாட்டாளர்களின் கோரிக்கையின் நியாயத்தினையும் பேசினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் கூறிய ஒரு கருத்து அறிவகனின் ஒரு பொறியைத் தூண்டுவதாக எண்ணினான். இந்த சாணத்தினை கூட்டெருவாக மாற்றினால் கெட்டமணத்தையும் தவிர்க்கலாம் பணமும் சம்பாதிக்கலாம் என்பதே அது.

"அதெல்லாம் எங்களால் செய்ய ஏலாது. நாங்க மாடுகள விக்கிறம் தம்பி. எங்களால மற்ற ஆக்களுக்கு ஏன் வீண் சிக்கல். இவங்க ஐஞ்சு பேரும் உங்கட்டச் சொல்ல முதல் எங்கட்ட ஒரு சொல் சொல்லியிருக்கலாம். அது தான் எங்களுக்குக் கவலை" என்று அந்த வீட்டு அம்மா சொன்னதும் முறைப்பாட்டாளர்கள் ஒவ்வொருவர் முகத்திலும் ஓங்கி ஓர் அறை விழுந்தது போல் தோன்றியது அவனுக்கு.

"ஏதோ யோசித்துச் செய்யுங்கம்மா" என்று கூறிவிட்டு முறைப்பாட்டினைப் பார்ப்பதற்காக வந்தவர் சென்றுவிட்டார்.

அறிவகன் மட்டும் பார்க்க வந்தவர்களில் மீதமாக அந்த வீட்டில் நின்று கொண்டிருந்தான். 'வா தம்பி தேத்தண்ணி குடிச்சிற்றுப் போவன்' என்ற அந்த வீட்டம்மாவின் அன்புக் கோரிக்கையினை ஏற்று அவர்களின் வீட்டுத் திண்ணையில் இருந்தவாறு அந்தம்மாவிடம் கேட்டான் "அம்மா எனக்கு ஓர் உதவி செய்தா நான் உங்களுக்கு உதவி செய்யலாம். அதோட அது எனக்கும் உதவியா இருக்கும் என்றான்" அந்தம்மா கொடுத்த தேநீரை ஒரு உறுஞ்சு உறுஞ்சியவாறு. என்ன என்பது போலவும் அதற்கு உடன்பாடு என்பது போலவும் அந்தம்மாவின் பார்வை தெரிந்தது.

"அம்மா நான் விவசாய பாடத்தில எப்பிடி கூட்டெரு தயாரிக்கிற எண்டு படிச்சிருக்கிறன். விவசாய ஆசிரியர் எனக்கு சொல்லித் தந்தவ. எனக்கு றோல் பொலித்தீன் ஒரு இருபது கிலோவும் பொதி செய்யிறத ஒட்டிறதுக்கு ஒரு சீலரும் வாங்கித் தந்தீங்கண்டா நான் அத வித்து வாற காசில பிறகு திருப்பித் தந்திருவன்" என்றவனின் கருத்தினை சின்னப் பெடியன் கதைக்கிறான் என்று அந்தம்மா நினைத்து விட்டாள். அவரும் எதுவும் பதில் சொல்லவில்லை. அவனும் பதிலை எதிர்பாராதவனாக தேநீர் குவளையை திண்ணையில் வைத்துவிட்டு தனது வீட்டிற்குச் சென்று விட்டான்.

மாலையில் தன்அம்மாவுடன் அறிவகன் அந்த வீட்டிற்கு வந்தான். மரகதம் அந்தம்மாவிடம் சொன்னாள் "பாருங்க இவனுக்கு நீங்க ஒண்டும் கொடுக்கத் தேவையில்ல" என்றவுடன் அந்தம்மா உண்மையில் பயந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார். இந்தப்பெடியன் ஏதேனும் போய் சொல்லி விட்டானோ என நினைத்துவிட்டாள் அந்தம்மாள்.

"நீங்க இவனுக்கு வீட்டிற்குப் பின்னால இருக்கிற இடத்தை மட்டும் குடுங்க, அவன் கூட்டெரு தயாரிக்கட்டும். உங்களுக்கும் சிக்கல் ஒன்று தீர்ந்தமாரி போகும். பசுக்களை விற்கப் போறதாகச் சொன்னீங்களாம். வித்துப்போட்டு என்ன செய்யப் போறீங்க. இவன் வந்து சரியாக் கவலைப்பட்டான். நீங்க மாடுகளையும் விக்காதீங்க. கூட்டெரு தயாரிக்கிறதுக்குத் தேவையான செவுகளெல்லாம் நான் பாத்துக் கொள்ளுவன்" என்ற மரகதத்தின் வாயிலிருந்து வந்த வார்த்தைகளை ஆச்சரியமாகப் பார்த்துக்கொண்டிருந்தாள் அந்தம்மாள். உடன்பாடும் தெரிவித்தாள்.

மறுநாளே அறிவகன் செயலில் இறங்கிவிட்டான். சரியாக ஒரு மாதத்தின் பின்னர் பொலித்தீன் வாங்கி வந்தான். அம்மா மட்டக்களப்பு போய் சீலர் வாங்கிக் கொடுத்திருந்தாள். ஒவ்வொரு கிலோவாக பொதிகளைத் தயார் செய்தான்.

இந்த விடயத்தை தனது விவசாய ஆசிரியர் சகுந்தலாவிடமும் கூறி அவ்வப்போது மதியுரைகளும் பெற்றிருந்தான். அதன் அறுவடை தொடங்கினான்.

சகுந்தலா ஆசிரியருக்குத்தான் முதலாவது விற்பனை. ஒரு கிலோ பத்து உருபா என விலை குறித்ததான். ஆசிரியர் பத்துப் பொதிகளைப் பெற்று நூறு உருபா கொடுத்து விற்பனையைத் தொடங்கி வைத்தார்.

அவர் மட்டக்களப்பு நகரத்தில் இருக்கும் தனது நண்பர்கள் பலரிடம் கூறி வீட்டில் உள்ள வீட்டுத் தோட்டம் மற்றும் பூஞ்செடிகளுக்கு இயற்கை உரப்பயன்பாட்டை ஏற்பாடு செய்தார் அறிவகன் மூலமாக.

ஒவ்வொரு மாதமும் ஏறக்குறைய ஆயிரம் கிலோ கூட்டெருவை அறிவகன் உற்பத்தி செய்யக் கூடியதாக இருந்தது. இதன்மூலமாக மாதமொன்றிற்கு சராசரியாக உருபா எட்டாயிரம் அளவில் வங்கியில் வைப்புச் செய்தான்.

இந்த விற்பனை சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து வருவாயும் மெதுமெதுவாக கூடி அவன் உயர்தரம் படிக்கும் போது இரண்டு பணியாளர்களை வைத்து மாதமொன்றிற்கு தங்களது வீட்டுச் செலவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கலாக அண்ணளவாக உருபா நாற்பதாயிரம் வங்கியில் வைக்கும் அளவிற்கு வளர்ந்துவிட்டது.

தற்போது இந்த வியாபாரம் மாதாந்தம் ஐந்து இலக்கம் தருகின்ற ஒரு வணிகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

உயர்தரத்தில் மருத்துவத்துறைக்குச் செல்லக் கூடிய பெறுபேற்றினைப் பெற்றிருந்தாலும்கூட அவன் அங்கு செல்வதனை விரும்பவில்லை.

அம்மா அறிவகனின் முடிவினை முற்றாக எதிர்த்தாள்.

ஆனால் அறிவகன் விவசாயத்துறையினால் உள்ள நன்மைகளை எடுத்துச் சொன்னான்.

நமது ஊருக்கு நாம் போக வேணும். அப்பா தோட்டம் செய்யக்கொள்ள என்ன சொன்னவர், 'நாம பழைய முறையில விவசாயம் செய்யிறம். கூட இலாபம் கிடைக்காது. நவீன முறைகளை படிச்சு நம்மட மக்களுக்கு சொல்லிக் கொடுக்கோணும். அப்பத்தான் கூட இலாபம் கிடைக்கும்' இப்பிடிச் அவர் சொன்ன எண்டு தானே அம்மா சொன்னனீ.

அதால நான் விவசாயத்தில பட்டம் பெறோணும். பிறகு நம்மட ஊருக்குப் போகணும். அப்பாட கனவ நிறைவேற்றணும்" இப்படி பல கருத்தக்களைக் கூறித்தான் அம்மாவின் ஒப்புதலுடன் பல்கலைக்கழகத்தில் விவசாயத்தில் பட்டம் பெற்றான் அறிவகன்.

எதுவுமே தெரியாத வயதில் ஊரைவிட்டு வந்தவர்கள். இன்றுதான் அந்த ஊருக்குப் போகப் போகிறார்கள் அம்மாவும் பிள்ளையும்.

தனது ஊரைப் பார்க்கப் போகின்றோம் என்ற ஆவலில் இருந்தான் அறிவகன். அதனால் தான் விளையாட்டுத் திடலுக்குச் சென்று நண்பர்களுடன் இதுவிடயமாகக் கூறிக்கொண்டிருக்கும் போது தான் அம்மா கூப்பிட்டாள்.

ஊர்மக்கள் எல்லாம் இடம் பெயர்ந்து மட்டக்களப்புக்கு வந்தவேளை அம்மா அறிவகனை அனுப்பி மக்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்யும்படி பணித்தாள். அவனும் செய்தான்.

ஆனால் தனது விட்டார் , தன் மானார் வீட்டார் யாரையும் சந்திப்பதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அவனும் இன்றுவரை சந்திக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏன் தன்னை அம்மா தன்னுடைய ஊருக்கு ஒரு முறையேனும் அழைத்துச் செல்லவில்லை என்று தெரியவில்லை.

சிறுபருவத்தில் ஒரு தடவை கேட்டபோது காரணியம் கூறவில்லை.

பெரிதான பின்பும் அம்மா அழைக்காமல் செல்வதில்லை என்று முடிவெடுத்தவிட்டான்.

இப்படியான அம்மா எனக்குக் கிடைத்ததே நான் செய்த பெரும்பேறு. அப்பாவைப் போல் வரவேண்டும் என்றுதான் முன்னர் அடிக்கடி கூறுவாள்.

ஆனால் இப்போது அவ்வாறு கூறுவதில்லை. அப்பாவைவிட கூடியளவு திறமையானவனாக வந்துவிட்டான் என்று எண்ணினாள் போல.

"அம்மா சாப்பிட்டாச்சு, வா போவம் " என்று வெளீர் என்ற வெள்ளை நிற மகிழ்வுந்தின் செலுத்துநர் இருக்கையில் இருந்தவனாக அழைத்தான் சரியாக நான்கு மணிக்கு.

மரகதம் ஏற்கனவே நான்கு உமல்களை மகிழ்வுந்தில் ஏற்றியிருந்தாள் தொடர்ந்து தன் ஊரில் தங்குவதற்குத் தேவையான உடைகள் மற்றும் பொருட்கள் அவற்றில் இருந்தன.

அவற்றினையும் இவர்கள் இருவரினையும் சுமந்துகொண்டு மகிழ்ச்சியாகப் புறப்பட்டது நிசான் சன்னி.

"தம்பி நேரத்துக்கு போயிரலாமா?"

"அம்மா ஆமை வேகத்தில போனாலும் ரெண்டு மணித்தியாலம் போதும். ஒண்டும் பயப்பிடாத"

"இல்லத் தம்பி அப்பா சொல்லுவார் எந்த நிகழ்வுக்கும் குறிப்பிட்ட நேரத்துக்கு ஐஞ்சு நிமையம் எண்டாலும் முந்திப் போகோணும்" எண்டு.

அப்பாவை எண்ணிப் பெருமிதப்பட்டான். இப்ப அப்பாவப் போல ஆக்களக் காணுவது சிக்கல் போல என நினைத்துக் கொண்டான்.

கடந்த மாதம் கிரானில் இளைஞர்களுக்கான விவசாய செயல் திட்டம் ஒன்றிற்கான பயிலமர்வு ஒன்றை நடத்துவதற்கு "காலை ஒன்பது மணிக்கு நிகழ்வு ஆரம்பமாகும்" என அறிவித்திருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவகன் தான் வளவாளர்.

அவன் மட்டுமே ஒன்பது மணிக்கு அங்கிருந்தான்.

பத்தே முக்கால் மணிக்கே ஒவ்வொன்றாக இருபது பேரும் வந்து சேர்ந்தார்கள். அதன் பின்னரே பயிலமர்வு தொடங்கியது.

அப்பயிலமர்வில் பத்துமணி பதினைந்து நிமையத்திற்கு வந்த ஒருவர் 'நேரம் முக்கியமானது. உரிய நேரத்தில் எமது வேலைகளைச் செய்ய வேண்டும்' என நேரத்தின் முக்கியத்துவத்தினை பற்றி கூறியதை நினைக்க இப்போது சிரிப்பாக இருந்தது அவனுக்கு.

எதற்கெடுத்தாலும் அப்பாவையே எடுத்துக் காட்டாக அம்மா காட்டுகிறாளே.

அவ்வளவு சிறப்பான மனிதராக இருந்திருப்பார் போல. அதனாலே தான் தானும் எல்லா விடயங்களையும் அவதானமாக கவனத்துடன் செய்கிறோமோ என எண்ணிக்கொள்வான்.

சரியாக ஐந்து மணி நாற்பத்தைந்து நிமையத்திற்கு கட்டைப்பறிச்சான் பெரிய பாலத்தைக் கடந்தான் அறிவகன். மகனுக்கு வழிகாட்டிக் கொண்டிருந்தாள் அன்னை.

ஒரு நிமையத்தில் "கட்டைப்பறிச்சான் அன்புடன் வரவேற்கின்றது" என்ற வரவேற்பைப் பார்த்தான்.

அவ்விடத்தில் வண்டியிலிருந்து கீழே இறங்கியவன் தனது இரண்டு கால்களையும் மடித்து இருந்து நிலத்தை முத்தமிட்டான். தன்னை பெற்றெடுத்த ஊரில் முதன் முதலாக கால் வைத்த மகிழ்ச்சியில்.

மகனின் செய்கைளை பார்த்த மரகதத்தின் கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீர் மல்கியது. மகனை எண்ணி பெருமிதமடைந்தாள் அன்னை.

ஐந்து மணி ஐம்பத்தைந்து நிமையத்தில் அனிச்சை மரத்தடிக்கு தாயும் மகனும் வந்து சேர்ந்தார்கள்.

பெரும் திரளாக ஊர் மக்கள் திரண்டிருந்தார்கள். அதனைக் காணும் போது "இவ்வூரில் எவ்வளவு பற்றுடன் இம்மக்கள் இருக்கின்றார்கள்" என மனதில் எண்ணிக்கொண்டான். இனி இப்படியான ஊரில் இருக்கப் போகிறோம் என்பதனை மகிழ்ச்சியுடன் நினைத்துக்கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"குட்டி நாகராசா வாடா! வா தம்பி" என்று அப்பாவின் பள்ளித் தோழன் சண்முகம் அவனைக் கட்டிப் பிடித்து வரவேற்றார்.

அனிச்சையடியின் முன்னால் இருக்கும் மேடையில் இராசகிளி அண்ணனின் படம் இருந்தது.

அம்மா இராசகிளி அண்ணனின் படத்தை வைத்து ஒவ்வோர் ஆண்டும் இந்நாளில் மலர் தூவி வணக்கம் செலுத்துவாள்.

அதனால் இராசகிளி அண்ணனை அறிவகனுக்கு நன்கு தெரியும்.

அதோட ஐந்து படங்கள் அருகில் இருந்தன அதில் தன் தந்தையின் படமும் இருந்தது. மற்றையவர்கள் அப்பா சாவடைந்த நாளில் ஆகுதியானவர்கள் என்பதனை அறிந்து கொண்டான்.

சரியாக ஆறுமணி ஐந்து நிமையத்திற்கு தாய்ச் சுடரினை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் ஏற்றினார்.

இராசகிளி அண்ணனின் படத்திற்கு அவர் அக்கா சந்திரா ஆசிரியர் சுடர் ஏற்றினார்.

அடுத்து நாகராசாவின் படத்திற்கு தாயும் மகனுமாக சுடரினை ஏற்றினர்.

அதன் பின்னர் பொது மக்கள் தமது நினைவுகூரலை மலர்களாலும் சுடர்களாலும் செலுத்தினர்.

சுடர் ஏற்றி முடிந்ததுதான் தாமதம் அம்மா விம்மி விம்மி அழத்தொடங்கி விட்டாள். அவள் இப்படி அழுததை இன்று தான் மகன் பார்த்திருக்கின்றான்.

எவ்வளவோ துயர் வந்தாலும் அழக்கூடாது என தன்னிடம் கூறிய தாயா இன்று இப்படி அழுகின்றாள் என்று தவித்தான் மகன்.

தனது துணைவரை மட்டும் நினைத்து அளவில்லை மரகதம்.

நாகராசாவின் கனவை நிறைவேற்ற ஒரு புலிக் குட்டியையும் அல்லவா அவள் ஊருக்குக் கூட்டி வந்திருக்கிறாள்.

அந்த மகிழ்ச்சிக் கண்ணீரும் தான் அந்த விம்மி அழுகையின் உட் கருத்து என்பது மரகதத்திற்கு மட்டுமே தெரிந்த உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சி நிரல் நீண்டதாக இருக்கவில்லை. இரண்டு உரைகள் மட்டுமே நிகழ்ச்சி நிரலில் இருந்ததை கூட்ட முடிவில் அறிவகன் தெரிந்து கொண்டான்.

இராசகிளி அண்ணனின் நினைவுரையினை அவர் இருந்த ஈரோஸ் அமைப்பைச் சேர்ந்த அவருடன் மக்கள் பணியாற்றிய தோழர் கான் வழங்கினார்.

"இராசகிளி ஏழை மக்களின் தோழன், சின்னப் பிள்ளைகளின் அன்பன், தொழிலாளர்களின் பங்காளன், இளைஞர்களின் நண்பன். அத்துடன் அவன் பலருக்கு எதிரியுமாக திகழ்ந்தவன். சாதி பார்ப்பவர்களை அடியோடு வெறுத்தவன், முதலாளித்துவ சிந்தையுடையோரை அடியோடு பச்சையாக எதிர்த்தவன், ஆட்சியாளர்களுக்கு அச்சுறுத்தலாகவும் இப்பிரதேசத்தின் மீது பற்றுள்ளவர்களையும் எம்மினத்தில் அக்கறையுள்ளவர்களையும் ஒன்றிணைத்தவன். இராசகிளியைப் பற்றிச் சொல்ல பல நாள்கள் தேவை." என நீண்ட உரையினை நிகழ்த்தினார்.

இந்த உரையின் நடுவே கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் அறிவகனிடம் வந்து "ஒரு சின்ன உரை செய்ய முடியுமா" எனக் கேட்டார்.

"அம்மா உரையாற்றுவார்" என்றான் பதிலாக.

மகனுக்கு தாய் வரும்போதே இதனைத் தெரிவித்திருந்தாள்.

தலைவருக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை.

நாகராசாவின் படத்தைக் கண்டவுடன் அழுதுவிட்டாள். அழைக்கும் போது மறுத்து விட்டால் என்ன செய்வது என கலக்கமடைந்த நிலையில் இருக்கும்போது கரன் உரை நிறைவடைந்துவிட்டது.

அவர் சற்றும் எதிர்பார்க்காத வகையில் மரகதம் எழுந்தாள். ஒலிவாங்கி முன்னால் நின்று " நாகராசா நினைவுரையினை வழங்க முன்பு மரகதம் உரையாற்றுவாளா என எனது மகனிடம் தலைவர் கேட்டுக்கொண்டிருக்கிறார் என நினைக்கின்றேன். உங்கள் அனைவரிடமும் என்னைப் பொறுத்தருள வேண்டும் என கோரியவளாக "எனது துணைவரின் நினைவு உரையினை நானே உரையாற்றுவதற்கு வாய்பளிக்க வேண்டும். ஏனென்றால் எனது துணைவரைப்பற்றி என்னைத் தவிர வேறு யாருக்கும் கூடுதலாகத் தெரியாது." என்று கூறி முடிப்பதற்குள் அரங்கமே அதிர்ந்துவிடும் 'அளவிற்கு அனைவரதும் கையொலி நிரப்பியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டு மணித்துளிகள் கையோசை நீடித்தது. மகனின் மனது மகிழ்ச்சியில் திளைத்தது.

"எனது துணைவர், இராசகிளி அண்ணனின் நினைவு நாளினை எம் மக்கள் அனைவரும் நினைவுகூர வேண்டும் என்று எழுந்தபோது அவருக்கு ஆதரவான குரல்களை எழுப்பியவர்கள் இங்கே இருக்கிறார்கள்.

அன்றைய நாள் இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் எமது ஊர் இருந்தது. அதனாலே தான் அப்போது இவ்வளவான மக்கள் எனது துணைவர் கொல்லப்பட்ட நாள் நடைபெற்ற கூட்டத்திற்கு வருகை தரவில்லை.

ஆனால் இன்றையநிலை அப்படியில்லை. எனினும் இவ்வாறு நினைவுகூரல் நிகழ்த்தப்படுவதற்கு எடுத்த முடிவானது புரட்சிகரமானது. நான் ஒவ்வோர் ஆண்டும் இராசகிளி அண்ணனுக்கு வணக்கம் செலுத்திய பின்னர்தான் இவருக்கு வணக்கம் செலுத்துவேன். ஏனென்றால் இராசகிளி அண்ணன்தான் இவருக்கான எடுத்துக்காட்டு என்று ஒரே கூறுவார்.

அவரது கருத்தினாலேதான் இவர் மக்களின் வாழ்க்கையினை மேம்படுத்த வேண்டும் என்ற கொள்கையினைக் கொண்டிருந்தார்.

எனது துணைவர் சாவடைந்த வேளை தமிழ் மறவனாக இரண்டு இராணுவத்தினரை சுட்டுக் கொன்றுவிட்டே உயிர்நீத்தார். வன்முறை சரியான தென்பது அல்ல எனது கருத்து. எமது மக்களுக்கு எதிரானவர்களை எம்மினத்தில் இருந்தாலும் ஏன் எம் ஊரில் இருந்தாலும் அவர்களை அழிப்பதில் தவறில்லை"

இளைஞர்களின் கைதட்டல் வானைத் தொட்டது.

"இப்படியானதொரு உரையினை நாம் ஒரு பெண்ணிடம் எதிர்பார்க்க வேயில்லையே" என முணுமுணுத்துக் கொண்டனர்.

"எனது மகளா இப்படி உரையாற்றுவது" என மனமகிழ்ந்தார் செல்வநாய கத்தார்.

கைதட்டல் நிறைவடைந்த பின் தனதுரையினைத் தொடர்ந்தாள் மரகதம்.

"அவரின் விருப்பமெல்லாம் நம் ஊர்மக்கள் சிறப்பாக கல்வியில், பொருண்மியத்தில் மிளிர வேண்டும் என்பதுதான். அதனாலேதான் நான் விரும்பியிருக்காவிட்டாலும் கூட நமது ஊர் மக்களுக்கு என்ன செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என தனது தந்தை விரும்பினாரோ அதனைச் செய்ய வேண்டும் என்பதற்காகவே கிடைத்த மருத்துவத்துறையையே உதறித் தள்ளி விட்டு விவசாயத்துறையினைத் தேர்ந்தெடுத்து அதில் சிறப்புப் பட்டத்தினைப் பெற்று பல பிரதேசங்களுக்கு மட்டுமல்ல பல நாடுகளுக்கும் சென்று நவீன தொழில்நுட்பங்கள் மூலமாக எவ்வாறு விவசாயத்தினை வளர்த்தெடுப்பது என்பவற்றை எனது மகன் அறிவகன் படித்து வந்துள்ளான். இவை அனைத்தும் உங்களுக்காகத்தான்."

மீண்டும் அனைவரது கை தட்டல் தொடர்ந்தது.

"கமோன் அறிவகன்" என்ற குரலொலிகள் பின்னாலிருந்து பலமாகக் கேட்டன.

அறிவகன் உண்மையிலேயே நெகிழ்ந்துதான் போனான். அம்மாவால் இப்படியெல்லாம் தங்குதடையின்றி பேசவும் முடியுமா?

அவனது உள்மனதில் அப்பா தான் உரையாற்றுகின்றாரோ என எண்ணினான்.

மரகதம் தொடர்ந்தாள்

"அவர் என்ன நினைத்தாரோ, அதனை சிறிதளவேனும் நிறைவேற்ற என் மகனை இங்கே கூட்டி வந்திருக்கிறன். இன்றுதான் முதன் முதலாக அவனை இங்கே அழைத்து வந்திருக்கிறேன். அவனும் நானும் இங்கே தான் வாழப்போகின்றோம்."

கைதட்டல்.

தொடர்ந்தாள்

"எனது உறவினர்களை மட்டுமல்ல எனது அப்பா, அம்மா, அவரின் அம்மா, அப்பா எவரையும் அவனுக்குத் தெரியாது. அவர்களிடம் தொடர்புகளை நான் தொடர விடவில்லை. அதற்காக நான் பொறுத்துக்கொள்ளுமாறு யாரையும் கேட்கப் போவதுமில்லை. ஆனால் இனிமேல் நான் அவனை அவர்களுடன் உறவாடுவதைத் தடுக்கப் போதில்லை" என்றதும் செல்வநாயகம் அண்ணாச்சி கண்ணீர் மல்க "பேரா இஞ்ச வாப்பா, இதுக்குத் தாண்டா இந்த சீவன் இன்னும் போகாம கிடக்கு" என்று அழுதவாறே பேரனை நெருங்கி கட்டி அணைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனது துணைவர் பெரிதாக இந்த ஊருக்குச் செய்யாவிட்டாலும் என் மகன் செய்வான். அதே வேளை இராசகிளி அண்ணனின் நினைவு நாள் தொடர்ந்து நினைவுகூரப்பட வேண்டும். நன்றி"

மரகதத்தின் உரை அனைவரிடத்திலும் புதுத் தெம்பை ஏற்படுத்தியிருக்க வேண்டும்.

ஒவ்வோர் ஆண்டும் நினைவுகூரல் நடத்தப்படல் வேண்டும் என்ற உறுதிமொழியினை மனதில் நிறுத்தியவர்களாக வீடுநோக்கினர் ஊர் மக்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காதலால் மனம் மகிழ்ந்து கிடக்கிறது

"யார்ரா மச்சான் இவளுக்கு சித்திரச்செந்தாழை எண்டு பேர் வச்சது" தன் பள்ளித் தோழர்களுடன் மதகில் இருந்தவாறு அருகில் இருக்கும் தன் நண்பன் அருளரசனிடம் அனைவருக்கும் கேட்கும்படியாகவே கிண்டலுக்காகவே கேட்டான் இசைவளன்.

சித்திரச்செந்தாழை பதினோராம் தரத்தில் படித்துக் கொண்டிருக்கிறாள். மா நிறம். குறிப்பிடும் அளவிற்கு அழகில்லை என்றாலும் நல்ல முகவெட்டானவள் என்பது அவள் அகவையொத்த ஆண் பிள்ளைகளின் கருத்து. வகுப்பில் உள்ள நாற்பது பிள்ளைகளில் பதினாறாவது பதினோளாவது நிலையில் இருப்பவள். ஆனால் தமிழ்மொழி மேல் அவளது அப்பா போலவே அளவற்ற விருப்புள்ளவள். நடுத்தர குடும்பத்தில் உள்ளவள்.

இசைவளனின் கிண்டல் இது முதல் முறையல்ல என்பதனால் அவள் அதனை ஒரு பொருட்டாகவே மதிக்கவில்லை. அவள் பொருட்படுத்தாமைக்கு அது மட்டுமல்ல கரணியம். தனது மனதிலே ஊடறுத்து துளைத்துக் கொண்டிருக்கும் அருளரசனிடமே அவள் பெயரைக் கிண்டலடிப்பதும் தான்.

கடந்த ஆண்டிற்கு முதல் ஆண்டு அருளரசன் ஒன்பதாம் தரத்தில் படித்துக் கொண்டிருக்கும் போது பள்ளியில் வெள்ளி விழா நடைபெற்றது.

விழாவில் குரு என்ற நாடகத்தில் நடிப்பதற்கான நடிகர்களை ஒன்பதாம் வகுப்பு மாணவர்களிலிருந்து எடுக்கலாம் என சுகுமார் ஆசிரியர் கூற நாடகத்திற்குப் பொறுப்பாக இருந்த ஜெயவீரசிங்கம் ஆசிரியரும் உடன்பட்டுவிட்டார்.

ஆண்களும் பெண்களும் நாடகத்தில் நடிப்பதனால் பல சிக்கல்கள் ஊரில் எழும் என்பது பல ஆசிரியர்களின் கருத்தாக இருந்தது. ஆனால் ஜெயவீரசிங்கம் ஆசிரியரோ "வருவது வரட்டும், அதெல்லாம் நான் பாத்துக் கொள்றன். நடைபெற இருப்பது வெள்ளி விழா. இனி ஒருநாளும் வரப்போறதில்ல. ஆண்பிள்ளைகளையும் பெண்பிள்ளைகளையும் சேர்த்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் நாடகம் பழக்கிறது" என்று பிடிவாதமாக இருந்தமையினால் பள்ளி முதல்வரினால் எதுவும் செய்ய முடியவில்லை.

குருவாக அருளரசன் தெரிவு செய்யப்பட்டான். குரு என்ற பாத்திரமே பொறுப்புகள் அதிகமுள்ளதாக வடிவமைக்கப் பட்டிருந்தது. அதற்கு இயல்பாக நடிப்பதற்கு ஏற்ற ஒருவர் தேவை என்பதனால் அருளரசன் தெரிவானான்.

அருளரசன். வகுப்பில் முதல் மாணவன். எந்த விடயத்தையும் விரைவாக பற்றிப் பிடிக்கும் ஆற்றல் கொண்டவன். சொல்லிக் கொடுக்காததையும் தேவையான இடங்களில் பயன்படுத்தக் கூடியவன் என்பவை கூடுதல் தகைமைகள் ஆகின அவனுக்கு.

ஒன்பது பேரை உள்ளடக்கிய நாடகத்தில் வறிய ஒரு பெண் பாத்திரத்திற்கு சித்திரச்செந்தாழை தெரிவு செய்யப்பட்டாள்.

நாடகம் அரங்கேறும் வரையில் பள்ளி முதல்வரைக் கூட பார்வையிட ஜெயவீரசிங்கம் ஆசிரியர் ஒப்புதலளிக்கவில்லை. மிகவும் கண்டிப்பானவர் என்பதற்கு இதைவிட சிறந்த எடுத்துக்காட்டு எதற்கு?

நாடகத்திற்கு கூடியளவில் எதிர்பார்ப்பு இருந்தது. ஜெயவீரசிங்கம் ஆசிரியரின் நாடகம் என்றால் அதற்கென தனியான நடை இருக்கும். புதிய விடயங்களை அனைவரும் சுவைத்து இரசிக்கக் கூடியதாக வடிவமைப்பார் என்பது பலரதும் கருத்து.

அவரது நாடகத்திற்காகவே அவ்வூர் மக்கள் கூடுதலாக வெள்ளிவிழாவிற்கு வருகை தந்திருந்தனர்.

அறிவிப்புக்களை தனது கணீர் என்ற குரலால் சுகுமார் ஆசிரியர் வழங்கிக் கொண்டிருந்தார்.

"நன்றியுரைக்கு முன்பாக நீங்கள் ஆவலுடன் இவ்வளவு நேரமும் எதிர்பார்த்துக் காத்திருக்கும் உங்கள் அன்பும் பாசமும் நிறைந்த" என்ற போது கைதட்டல் வானைத்தொட்டது. "ஜெயவீரசிங்கம் ஐயாவின் நெறியாள்கையில் அவரது சிந்தனையில் உருவான 'குரு நாடகம்' இதோ உங்கள் முன்னிலையில் மேடையேறுகிறது" என்று கூறி முடிக்கும் வரை பலத்த கைதட்டலுக்கு நடுவே அறிவிப்பு தொடர்ந்து முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைச்சீலை நீக்கப்பட்டது. குருவாக அருளரசன் காவிநிற உடையில் கண்களை மூடியவாறு இருக்க திரைச்சீலை முழுவதுமாக விலகியது.

நாடகம் எதிர்பார்ப்பிற்கு குறை எதுவும் வைக்காமல் எதிர்பார்த்ததைவிட மிகவும் சிறப்பாக வடிவமைக்கப்பட்டிருந்தது. வந்திருந்த அனைவரும் மெய்ம்மறந்து பார்த்துக்கொண்டிருந்தனர். பதினேழாவது நிமையத்தில் ஏழைப்பெண்ணாக குருவிடம் வாழ்த்துப் பெறுவதற்காக குரு முன்னால் முழந்தாழிட்டு அமர்ந்தாள் சித்திரச்செந்தாழை. அவளை வாழ்த்துவதற்காக தனது கையை சித்திரச்செந்தாழையின் தலையில் வைத்தான் குருவான அருளரசன்.

“செந்தாழையத் தொட்டுற்றாண்டா அரசன்” என்று உரத்த குரலில் கத்தினான் ஒன்பதாம் வகுப்பில் படித்துக்கொண்டிருந்த காள்சன். பின்னாலிருந்து கைதட்டல்கள் தொடங்கின. அருளரசனுக்கு காள்சனின் சத்தம் தெளிவாகவே கேட்டது. அது அவன் மனதில் ஏதோ செய்ததை அக்கணத்தில் அவன் உணர்ந்தான். ஏன் சித்திரச்செந்தாழையும் அவ்வாறு தான் உணர்ந்தாள்.

நாடகம் முடிந்தது. வந்திருந்தோர் நாடகத்தைப் பற்றியே புகழ்ந்து பேசினர். அருளரசனின் நடிப்பை மெச்சினர். அருளரசனை பாராட்டுகின்ற போது தனது மனதினுள் மகிழ்ச்சி ஏற்படுவதனை சித்திரச்செந்தாழை உணர்ந்தாள்.

அன்றிரவு அவளுக்கு நித்திரை வரவில்லை. அருளரசன் நினைவு குரு நாடக வடிவில் தொடர்ந்து வந்தது. நித்திரை வரவில்லை என்று அவள் கவலைப் படவில்லை. மனதிற்கு மகிழ்ச்சியாக இருந்தது. மீண்டும் மீண்டும் அருளரசன் அவள் மனத்திரையில் வந்து நின்று சென்றான். மீண்டும் வந்தான். நாடகம் பழகும் போது தலையில் கை வைப்பதாக சொல்லிக் கொடுக்கப்படவில்லை. ஆனால் மேடையேறியபோது அவன் அவளது தலையில் கையை வைத்தே வாழ்த்து வழங்கினான். அவன் திட்டமிட்டுச் செய்யவில்லை என்பது சித்திரச்செந்தாழைக்குத் தெரிந்திருந்தாலும் அவ்வாறு தலையில் கை வைத்தது இன்பமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்ததாக அவளுக்குத் தோன்றியது.

அடுத்த நாள் காரி(சனி)க்கிழமை என்பதால் பள்ளிக்குச் செல்ல வேண்டிய தேவை இருக்கவில்லை. காலையில் அருளரசனைப் பார்க்க வேண்டும் போலிருந்தது அவளுக்கு. என்ன செய்வதென்று தெரியவில்லை. அவன் வீட்டிற்குச் செல்ல முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்படி அவனைக் காண்பது என்று சிந்தித்தாள். தவித்தாள். ஏன் எனக்கு இப்பிடி எனவும் சிந்தித்தாள். காலை உணவு உண்டபின் விரித்திருந்த பாயில் படுத்தபடி நினைத்துக்கொண்டிருந்தவள் தன்னையறியாமலே தூங்கி விட்டாள். கண்விழித்த போது மாலை நான்கு மணியாகியிருந்தது. வீட்டாரும் அவளை எழும்பும்படி தொந்தரவு செய்யவில்லை. நேற்றைய விழாவில் உழைத்த களைப்பு என எண்ணிவிட்டனர்.

அடுத்த நாள் ஒவ்வொரு நொடியும் ஒவ்வொரு ஊழி போலிருந்தது. நேரம் ஊர்ந்து செல்வது போல் உணர்ந்தாள்.

திங்கள் பள்ளிக்கு வழமையைவிட நேரத்துடன் புறப்பட்டுவிட்டாள். பள்ளிக்குச் சென்ற போது மணி ஆறு இருபத்தைந்து. யாரும் வந்திருக்கவில்லை. என்ன இது. நேரமே போகுதில்லை என்று மனதில் எண்ணிக் கொண்டாள்.

வகுப்பறையினை துப்புரவு செய்து வெளி முற்றத்தையும் விளக்குமாறால் கூட்டி அழகுபடுத்தினாள். வெளிப்புறமாக இருந்த அவர்களது வகுப்பு பூந்தோட்டத்திற்கு நீர் ஊற்றி முடிக்கும் போது அருளரசன் நீலநிற அரைக் காற்சட்டையுடன் தனக்கேயுரிய கம்பீர நடையுடன் நடந்து வந்தான். அவனை கண்டவள் அவனைப் பார்க்க முடியாமல் குனிந்து கொண்டாள். அவனுக்கும் அவளைக் காணும் போது அவன் மனதில் ஏதோ செய்தது.

அவளது மனது இளகியது. மகிழ்வடைந்தது. பட்டாம்பூச்சி யெல்லாம் மனதில் பறந்தது போல் தெரிந்தது. மணியடித்து ஒன்றுகூடல் நடைபெற்று முதலாவது பாடம் ஆரம்பித்து முடிவடையும் வரை அவள் அவளாக இல்லை.

இரண்டாவது பாடவேளை கணிதஆசிரியர் இரவீந்திரன் மட்டக்களப்பிலிருந்து வராமையினால் பிள்ளைகள் ஓய்வாக இருந்தார்கள்.

அருளரசனிடம் ஏதாவது பேச வேணும் என்று அவள் மனம் துடித்தது. இருக்கையிலிருந்து எழுந்து சென்று அவனருகில் சென்று 'நல்லா நடிச்சீங்க. நல்லா இருந்துது. வாழ்த்துகள்" என்று சித்திரச்செந்தாழை கூறியதும் "நீங்களும் நல்லா நடிச்சீங்க, உங்களுக்கு என்ர பாராட்டு" என்றான்.

"மச்சான் நடிக்கிறது சரி ஆனா இனிம தலையில கிலயில கை வச்சிராத டேய்" என்றான் இசைவளன் பகிடியாக. அவளுக்கு வெட்கமாகிவிட்டது. தனது இருப்பிடத்திற்குப் போய்விட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைவளன் இன்னும் கொஞ்சம் சொல்லியிருக்கலாமே என அவள் மனம் சொல்லியது. இன்னும் சொல்ல மாட்டானா என ஏங்கியது.

அருளரசனின் ஒவ்வொரு அசைவினையும் தனது கடைக்கண்களால் அளவிட்டுக் கொண்டேயிருந்தாள். அவளது அளவிடுதலை அவளுக்குத் தெரியாமலே கண்காணித்துக் கொண்டிருந்தாள் அவளின் தோழி அமுதவல்லி.

இடைவேளை நேரத்தில் அமுதவல்லியும் சித்திரச்செந்தாழையும் சிற்றுண்டிச்சாலைக்குச் செல்லும் போது "அம்மாடி அருளரசன பாத்திற்றே இருக்கிறியேடி" என அமுதவல்லி சொல்ல "இல்லயே" என செந்தாழை மறுக்க "போடி நீ பாத்தத எல்லாம் நான் பாத்திற்றுத் தான் இருந்தனான் சரியா" என அமுதவல்லி சொல்ல தோழியிடம் தொடர்ந்தும் பொய் சொல் முடியாமல் உண்மையை ஒத்துக் கொண்டாள் சித்திரச்செந்தாழை.

இரு வாரங்களின் பின்னர் அமுதவல்லிக்கு நூலகத்தில் அருளரசனை தனியாக சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. மெதுவாக தன் தோழிக்காக தோழியின் மனநிலையினை அருளரசனிடம் சொன்னாள்.

அவன் பதிலெதுவும் சொல்லவில்லை. "ஓகோ அங்கயும் எனது நிலைதானா" என நினைத்து மகிழ்ந்தான்.

சித்திரச்செந்தாழையின் நிலை கடந்த நாள்களில் அருளரசனுக்கும் இருந்தது. பள்ளித்தோழர்கள் கிண்டலடிப்பார்கள். முறைத்துப் பார்ப்பான். ஆனால் அவர்கள் இன்னும் அவ்வாறு கிண்டலடிக்க வேண்டும் என மனம் சொல்லும்.

சித்திரச்செந்தாழை மீது ஈர்ப்பு அதிகரித்துக் கொண்டே வந்தது. அருளரசன் - சித்திரச்செந்தாழை என தனது குறிப்புப் புத்தகத்தின் கடைசிப் பக்கத்தில் உள்ள தாளில் எழுதுவான்.

அ அ – சி செ என எழுதுவான். ஆங்கிலத்திலும் எழுதுவான். AA – SS. அருள் அரசன் - சித்திரச் செந்தாழை. A2 – S2

இப்படி பல வடிவங்களாக பல தடவைகள் எழுதி எழுதிப் பார்ப்பான்.

படிக்கும் நேரத்தில் கூடுதலான நேரம் சித்திரச் செந்தாழையின் பெயரையும் தனது பெயரையும் எழுதுவதிலேயே கழிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவளது பெயரை எழுதிவிட்டு அதன் மேல் மீண்டும் மீண்டும் எழுதுவது. வேறு நிறப் பேனைகளால் எழுதுவது என அவனது மனது அவனை மகிழ்ச்சிப் படுத்தியது. மூன்று மாதங்களாகியும் இருவரும் எதுவும் கதைக்கவில்லை. முன்பு கதைத்து வந்ததும் நின்றுவிட்டது. இருவரிலும் குற்ற உணர்வு உள்ளது போல் ஒருவித உணர்வு.

நாகதம்பிரான் வேள்வி வைகாசியில் நடைபெற்றது. வெள்ளைநிற வேட்டியில் அருளரசன் வந்திருப்பதை வெள்ளை நிற பாவாடை சட்டை அணிந்து வந்திருந்த செந்தாழையின் கண்கள் கண்டு அவள் மனதை மகிழ்வித்தன.

அவன் அவளைக் காணவில்லை. கோயிலில் இருக்கும் அன்னதான மடத்திலே சாப்பிட்டு முடித்தவர்களின் வாழை இலைகளை எடுத்துக்கொண்டு போய் இலையில் எஞ்சியிருந்த சோறு கறிகளை வேலியருகில் வைத்திருந்த பெரிய பாத்திரத்தினுள்ளும் இலையினை இலைகள் போடுவதற்கென வைக்கப்பட்டிருந்த பெட்டியினுள்ளும் போட்டுக்கொண்டிருக்கும் போதுதான் செந்தாழையின் கண்கள் அவனைக் கண்டன. அவனது பணி அவளுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அலுவலகத்தில் அர்ச்சனை செய்வதற்காக பணம் செலுத்துவதற்காக மக்கள் வரிசையில் நின்றார்கள். அவளும் வரிசையோடு சேர்ந்துகொண்டாள். அந்த இடத்தில் நின்றால் அருளரசனைப் பார்த்துக் கொண்டிருக்கலாம். மெதுமெதுவாக வரிசை நகர்ந்தது. அர்ச்சனை செய்வதற்கு இருபது உருபா செலுத்த வேண்டும். பணம் கட்ட வேண்டிய இடத்திலிருந்த இருவர் பின்னால் அவள் நின்றாள். முன்னால் இருக்கும் இருவரும் பணம் கட்டிவிட்டால் தனது தவணை வந்துவிடும். பின்னர் அந்த இடத்தில் நிற்க முடியாது என்பதை எண்ணியவள் பின்னால் திரும்பிப் பார்த்தாள். நல்ல வேளையாக தனது தோழி அமுதவல்லி பின்னால் நின்றுகொண்டிருந்தாள். தனது இடத்திலிருந்து தனது தோழிக்கருகில் போய் நின்று கொண்டாள்.

அமுதவல்லியும் மகிழ்ந்தாள். தனக்காக இவ்வளவு நேரமும் நின்றதையெல்லாம் விட்டுவிட்டு தன் தோழி தன்னுடன் வந்துவிட்டாள் என்று எண்ணி மகழ்ந்தாள். அந்த நினைப்பு பிழை என்பது சில நிமையத்தில் அவளுக்குப் புரிந்தது. அருளரசனைப் பார்ப்பதற்காகவே பின்னால் வந்ததாக செந்தாழையே சொல்லி விட்டாள். சரி சரி நடக்கட்டும் நடக்கட்டும் என்றாள் சிரித்துக்கொண்டே அமுதவல்லி தன் தோழியிடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தற்போது அவள் பேசிக்கொண்டே அவ்னைப் பார்க்கும் சுகம் தன் தோழியால் கிடைத்தது. இருவரும் சிரித்துக் கொண்டிருக்கும் போது இலையைக் பெட்டியில் போடுவதற்காகச் சென்ற அரசன் தற்செயலாக தோழிகள் இருவரையும் கண்டான்.

மனம் எங்கெல்லாமோ சென்று வந்தது. "போவோமா ஊர்கோலம்..." என அவனது மனது தன்னையறியாமல் பாட்டு பாடியது. கைகளில் உள்ள உரோமங்கள் சிலிர்த்து நின்றன. கண்கள் அடிக்கடி அவளைப் பார்ப்பதற்கு முயற்சித்தன. இவை அவ்வளவும் அவளுக்கும் ஏற்பட்டது.

இன்று நல்ல நாள் தானே அவளுடன் கதைப்பமா என்று உள்மனது கூறியது. வாய்ப்புக்கிடைத்தால் பார்ப்போம் என்றது மற்றைய மனது. வாய்ப்பு வந்திருக்கிறது. முயற்சித்துப் பார் என்றது உள்மனது. சரி முயற்சிப்போம் என்றது மற்றைய மனது. இப்படியாக கையில் இலையுடன் பல நிமையங்கள் மனதில் போராட்டம் தொடர்ந்தது.

நாகதம்பிரான் கோவிலில் தோழி அமுதவல்லியின் உதவியுடன் இருவரும் தங்கள் மன விருப்புங்களை பரிமாறிக்கொண்டார்கள்.

அன்று இருவரிடையேயும் தொடங்கிய காதல் உயர்தரம் படிப்பதற்கோ பல்கலைக்கழகப் படிப்பு நிறைவு செய்வதற்கோ தடையாக இருக்கவில்லை. தடையாக இருக்காதவாறு இருவரும் பார்த்துக் கொண்டார்கள். ஏறத்தாள பத்து ஆண்டுகள் திருமணம் வரை அவர்களது காதல் தொடர்ந்தது.

'காதலித்தால் ஒருவரைக் காதலிக்க வேண்டும். திருமணம் முடித்தால் காதலித்தவரைத் திருமணம் முடிக்க வேண்டும்' என ஜெயவீரசிங்கம் ஐயா அடிக்கடி கூறும் வாசகம் அவர்கள் இருவரையும் திருமணம் வரை நகர்த்திச் சென்றது என்பதே உண்மை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உனக்குள் நீ

'வணக்கம்'

'வணக்கம் ஐயா'

"நான் இலங்கை வங்கி முகாமையாளர் கதைக்கிறன். ரெண்டு காசோலை வந்திருக்கு. ஒண்டு ஐம்பத்தையாயிரம் மற்றது இரண்டு லட்சத்தி முப்பதாயிரம். பத்தரை மணிக்கு முதல்ல காசப் போடுங்க சிவா" என்றவர் பதிலுக்காகக் காத்திராமல் அழைப்பினைத் தாமாகவே துண்டித்துவிட்டார்.

குரலில் கண்டிப்புத் தெரிந்தது.

காலையிலேயே நிம்மதி போய்விட்டதாக உணர்ந்தான் சிவா என்றழைக்கப்படுகின்ற சிவாநந்தன்.

"எத்தன நாளைக்குத் தான் இப்பிடி வாழ்றதோ தெரியாது. யாவாரமும் சரி வருகுதில்ல. இத விட்டுத் தொலைக்கலாம் எண்டா காசு உழைக்கிறதுக்கு வேற வழியும் தெரியல்ல." நண்பன் ரவியிடம் அலுத்துக் கொண்டான் சிவா.

"இதுக்குத் தான்டா சொன்னனான் அரசாங்கத்தில ஒரு வேலயப் பாரு பாரு எண்டு. நீ கேக்கல்ல. உனக்கு என்னடா குற. உயர்தரத்தில நல்ல பெறுபேறு. வர்த்தகப் பிரிவில் படிச்சனீ. ஆங்கிலமும் நல்லா கதைப்பா உனக்கு வேல கிடைக்கிறதாடா மச்சான் சிக்கல்" ரவி உசுப்பேற்றிக் கொண்டிருந்தான்.

எரியிற நெருப்பில நீர் ஊற்றுவது போல் தெரிந்தது ரவியின் கதை சிவாவிற்கு.

சிவா, ஆசிரியர் போட்டித் தேர்வினை ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் எழுதியவன். மாவட்டத்தில் ஆறாம் இடம். நேர்முகத் தேர்வில் வேலை உறுதியாகி விட்டது.

தேவையில்லை என்று கூறிவிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானாக உழைத்து முன்னுக்கு வர வேண்டும் என்பது சிவாவின் நிலைப்பாடு. அவன் அப்பாவும் சிவாவின் கொள்கைக்கு பச்சைக் கொடிதான் காட்டுவார்.

ஆனால் அம்மாவோ அழுது புலம்புவாள். "வீட்டிற்கு வந்த சீதேவிய காலால மிதிச்ச மாதிரி செய்து போட்டியே தம்பி" என்று நாளும் புலம்புவாள்.

அம்மாவின் நச்சரிப்புத் தாங்காமல் வீட்டில் இருப்பதையே சில நேரங்களில் சிவா தவிர்ப்பான்.

அப்பா மீது சிவாவிற்கு நல்ல மரியாதை இருந்தது. அப்பா இராமச்சந்திரன் ஒரு கிராம அலுவலர். நேர்மையானவர். "எந்த அதிகாரத்திற்கும் அச்சமடையாதவர், அடிபணியாதவர்" என்ற பெயரை தன்வசம் வைத்திருப்பவர்.

பிரதேச செயலாளர்கள் கூட அவரிடம் மரியாதையாகத் தான் பழகுவார்கள். மக்களிடத்தில் அன்பாக அதே நேரத்தில் சரியாக அனைத்தையும் செய்ய வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பார்.

மூத்த மகன் விடுதலைப் போராட்டத்தில் இராணுவத்தினருடன் இடம்பெற்ற நேரடிச்சமரில் மேஜர் அருள்நம்பியாக வீரச்சாவடைந்து விட்டார்.

இரண்டாவது சிவா. அடுத்தது தங்கை நகைச்செல்வி. கடைக்குட்டி தம்பி வரதன் எனும் வரதராசா.

பிள்ளைகளிடத்தில் மிகுந்த அன்பு இராமச்சந்திரனுக்கு உண்டு. அனைவரையும் முடியுமானளவு படியுங்கள் என்பார். எவரையும் கட்டாயப்படுத்த மாட்டார். ஆனால் ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரமாவது விளையாட வேண்டும் என்பது கண்டிப்பான கட்டளை. சாப்பிடாமல் விட்டாலும் பரவாயில்லை. படிக்காமல் விட்டாலும் பரவாயில்லை. ஆனால் ஒவ்வொரு நாளும் விளையாடியே ஆகவேணும் என்பார்.

"இவர் ஒரு புதினமான அப்பா. மற்றவர்களற்ற அப்பாமார் படி படி என்றாங்க. இவர் என்னடா எண்டா விளையாடு விளையாடு என்றார்" என்பான் வரதன்.

இராமச்சந்திரன் "தொழில்நுட்பம் வளரும் அதே வேளை அதன் மூலமாக சோம்பேறித் தனமும் வளர்ந்து வருகின்றது என்பதனை நடைமுறையில் கண்டவர். உடல்நலமும் பாதிப்படைந்து கொண்டு வருகின்றது என்பதனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருத்துவர் வாயிலாக அறிந்துகொள்பவர்". ஆகையினால்தான் பிள்ளைகளிடத்தில் விளையாட்டு தொடர்பாக மட்டும் கண்டிப்பு.

சிவாவை எப்படியாவது நல்ல நிலைக்குக் கொண்டு வரவேண்டும், மற்றைய இளையோர்களுக்கு எடுத்துக் காட்டானவனாக மிளிர வைக்க வேண்டும் என்பதே இராமச்சந்திரனின் யாரிடமும் கூறாத கனவு. மகனிடம் தனது ஆசையினை நேரிடையாகவே கூறியுமிருக்கிறார். அப்பாவின் கனவை நனவாக்குவதே சிவாவின் இலட்சியமும் கூட.

இரண்டு இலட்சத்து எண்பத்தையிரம் இன்று மூன்று மணியின் முன்னர் வங்கியிலிட வேண்டும். காலை ஒன்பது மணிக்கு இரண்டு இலட்சம் ரூபாய் கையிலிருக்கிறது. மிகுதியில் வியாபாரம் மூலமாக நாற்பதாயிரம் வரலாம். நாற்பத்தையாயிரம் தேவை. அதற்கு வழிபார்க்க வேண்டும்.

அவனது கடைக்கு முன்னால் உள்ள பலசரக்கு கடையின் உரிமையாளர் சந்திரனிடம் கேட்டான். அவர் முகத்தைச் சுழித்துக் கொண்டார்.

கடந்த வாரம் வாங்கிய பத்தாயிரம் உருபா இதுவரை கொடுக்கவில்லை. மீண்டும் அவரிடம் கேட்டது தனது தவறுதான் என தன்னையே நொந்து கொண்டான்.

உந்துருளியை எடுத்துக் கொண்டு தனது நண்பன் ரவியிடம் கடையினைப் பார்த்துக்கொள்ளுமாறு கூறிச்சென்றான்.

சரியாக பத்து நிமையத்தில் மரக்கடை வாசலில் நின்றான். புறப்படும்போதே சலீம் நானாவிடம் கைப்பேசி ஊடாக பேசிவிட்டே வந்திருந்தான்.

'சிவா நாளைக்கு காலயில எட்டு மணிக்கெல்லாம் எனக்கு மரம் வரும். ஒருநாளும் நீ என்னட்ட இதுவரை எதுவுமே கேக்கல்ல எண்டதால தாறன். ஆனா தந்திடோணும்' என்றார்.

"நானா சரியா எட்டு மணிக்கு நான் கொண்டு வந்து தருவன்" உறுதி வழங்கிவிட்டு தேவையான முழுப் பணத்தையும் பெற்றுக்கொண்டு வங்கியில் வைப்பிலிட்ட போது மணி சரியாக மூன்று ஐந்து.

ஒருவாறு இன்றைய நாளை சமாளித்துவிட்டோம் எனும் மனத்திருப்தியுடன் திரும்பினான். ரவியை அவனது வீட்டிற்கு அனுப்பிவிட்டு மறுநாள் எப்படி சலீம் நானாவிற்கு கொடுப்பது என்பது பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான். வழி எதுவுமே தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரன் அண்ணனும் "என்ர பத்தாயிரம் நாளைக்கு தேவை தம்பி. சந்தைக்குப் போகோணும். தேங்காய் எடுக்க வச்சிருந்த காசத் தான் உனக்குத் தந்தனான். இண்டைக்குத் தாறன் எண்டு சொன்னனீ. தரல்ல. ஆனா நாளைக்கு ஆறு மணிக்கு நான் போகோணும். இரவைக்கு தந்துவிட வேணும்" என்று கொஞ்சம் வெறுப்புடன் கூறியது சிவாவிற்கு மனதை என்னவோ செய்தது.

'எத்தனை தடைவ இந்தாளுக்கு நான் காசக் கொடுத்துப்போட்டு கேக்காமலே இருந்திருக்கிறன். எத்தின தரம் சந்தையில சாமான வாங்கிற்று என்ர உந்துருளியில சும்மா கொண்டு வந்து கொடுத்திருப்பன். இப்பிடி இப்பிடி எத்தன உதவிகள் செய்திருப்பன்.." என செய்தவைகளை ஒவ்வொன்றாக நினைத்தான்.

சில மாதங்களாக தனது வியாபாரம் சரிவை நோக்கிச் சென்று கொண்டிருப்பதை சிவா உணர்ந்திருந்தான்.

'தெரிந்தவர்களுக்கு அதிகளவில் கடனுக்கு பொருட்கள் கொடுப்பதனால் நடைமுறைக்குத் தேவையான பணம் இல்லாது வட்டிக்கு வாங்கி பொருட்கள் வாங்கி வியாபாரம் செய்யும் நிலை, உனது வளர்ச்சிக்குத் தடையாக வரும்' என்று கடந்த ஆண்டு அப்பா எச்சரித்தது இந்த நேரத்தில் நினைவுக்கு வந்தது.

பாசத்திடம் மூன்று இலட்சங்கள் ஏழு சதவீத வட்டிக்கு வாங்கி பத்து மாதங்களாகி விட்டன. மாதாந்தம் இருபத்தோராயிரம் உருபாவினை வட்டியாக செலுத்திக் கொண்டிருக்கிறான்.

கடந்த மாத வட்டி இன்னும் செலுத்தவில்லை. செலுத்த பணம் இல்லை.

இரவு எட்டு மணிக்கு வியாபார நிலையம் மூடப்படும் போது சந்திரன் அண்ணன் வந்தார். மாலை நேர வியாபாரத்தில் எட்டாயிரம் வந்திருந்தது. அதனை கொடுத்து விட்டு நாளை மிகுதியை தருவதாகச் சொன்னான். "அப்பாவின் பெயரை காத்தில விடப்போறா. கவனமா பாத்துக்கொள்" என கூறிச் சென்றார்.

இரவு முழுவதும் நித்திரை வரவில்லை. எப்படி எட்டு மணிக்கு சலீம் நானாவின் பணத்தைக் கொடுப்பது. மனம் உடைந்தே போனான். பாசத்தின் வட்டிக் காசும் நாளைக்குக் கொடுக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனைக்கு பொருட்கள் வாங்க வேண்டும். கையில் பணமில்லை. எப்படிச் சமாளிக்கிறது என்பது தெரியாமல் திண்டாடினான்.

நித்திரையின்றிய இரவாக கழிந்தது அன்றைய இரவு. அதிகாலையில் வியாபார நிலையத்தைத் திறந்தான். பொருட்கள் வாங்க வந்தவர்கள் அநேகர் பொருட்கள் இன்றியே திரும்பினர்.

'நாளைக்கு வரும் நாளைக்கு வரும் எண்டு எத்தனை நாளைக்கு சொல்லப் போறா' என்று சண்முகத்தார் முகத்திற்கு நேராகவே கேட்டுவிட்டுப் போனார்.

ஏழரை மணியாகியது. கைப்பேசி ஒலித்தது. எதிர்பார்த்தது போல் சலீம்நானா தான். பதிலளிக்கவில்லை. உண்மையில் பதிலளிக்க முடியவில்லை என்பது தான் பொருத்தம்.

சத்தமற்ற நிலைக்கு கைப்பேசியினை மாற்றினான். ஒன்பது தடவைகள் அழைப்பினை ஏற்படுத்தியிருப்பார்.

பின்னர் நிலையான தொலைபேசி அழைத்தது. அவன் அழைப்பிற்குப் பதிலளிக்கவில்லை. வாடிக்கையாளர்கள் முன்னால் அவமானப்பட அவன் விரும்பவில்லை.

எனினும் அந்த நேரத்தில் அங்கு வந்த அவன் நண்பன் ரவி அழைப்பினை தெரியாமல் எடுத்து விட்டான். சலீம் நானா தான். சிவாவிடம் கொடுத்தான். 'நானா இப்ப கொஞ்ச நேரத்தில வாறன். இஞ்ச சரியான சனம். ஏன்ர கைப்பேசி வீட்ட கிடக்கு' தெரியாத பொய்களை எல்லாம் துணைக்கழைத்தான்.

ரவிக்கு தன் நண்பன் மீது கோபமும் எரிச்சலும் வந்தது.

எப்படியோ இருக்க வேண்டியவன் சும்மா எல்லாரிட்டையும் பொய்யும் சொல்லிக் கொண்டு அவர்களையும் ஏமாற்றி தன்னையும் ஏமாற்றிக் கொண்டு வாழ்வது சுத்தமாகப் பிடிக்கவில்லை.

சலீம் நானாவிடம் பேசி முடித்த பின்னர் 'ஒரு ஈ காக்கா கூட கடையில இல்ல. சரியான சனம் என்றதும் கைப்பேசிய பக்கத்திலயே வச்சிற்று வீட்டில எண்டு சொல்றதும் எப்பிடிடா? உனக்கு இதெல்லாம் வேணும். சொன்னாலும் கேக்க மாட்டா. ஆனா நான் இனி இஞ்ச வரமாட்டன்' என்றவன் கோபத்துடன் வெளியேறினான். உண்மையில் அன்று போனவன்தான், பின்னர் கடைக்கு வரவேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாபார நிலையத்தினைப் பார்த்துக்கொள்வதற்கு ஆள் எவரும் இருக்கவில்லை. உதவிக்கு வைத்திருந்த அவனது உறவுப் பெண்ணான சங்கவை கடந்து போன மூன்று மாதங்களாக அவளுக்கு கொடுக்க வேண்டிய சம்பளம் கொடுக்காமையினால் நின்றுவிட்டாள்.

இடையிடையே அவன் நண்பன் ரவிதான் உதவியாயிருந்தான். அவனும் இன்று சலீம் நானாவிற்கு சொன்ன பொய்யினால் சென்றுவிட்டான்.

வேறு வழியின்றி வியாபார நிலையத்தினைப் பூட்டிவிட்டு வெறும் கையுடன் பத்து மணியளவில் சலீம்நானாவின் கடைக்குப் சென்றான்.

சலீம்நானா கூறியது உண்மைதான் என்பதனை அங்கு சென்ற போது கண்டுகொண்டான்.

மரம் வந்திருக்கிறது. மரத்தினை சலீம்நானாவின் கடையில் இறக்கி விட்டார்கள். ஆனால் கொடுப்பதற்கு பணம் போதுமானதாக இருக்கவில்லை. சிவாவினை எதிர்பார்த்து பல அழைப்புகளை ஏற்படுத்திக் களைத்து வெறுப்படைந்து அவர் இருந்த நிலையில் தான் சிவா அவர் முன்னால் போய் நின்றான்.

சலீம் நானாவிற்கு சிவாவைக் கண்டதும் மனதில் நிம்மதி ஏற்பட்டது. யாரிடமும் பணம் கேட்டுப் பழக்கப்படாதவர். அதனால் யாரிடமும் பணம் கேட்கவில்லை.

சிவா தயங்கித் தயங்கி அவர் அருகில் சென்று தன் நிலையினை வார்த்தைகள் வராத நிலையில் விக்கி விக்கி தவித்து தவித்து ஒவ்வொரு சொல்லாகக் கூறினான்.

சலீம் நானாவிற்கு அப்படிக் கோபம் வரும் என்று சிவா நினைத்திருக்கவில்லை. செந்தமிழ் சொற்கள் சலீம்நானாவின் வாயிலிருந்து கட்டுப்படுத்த முடியாதளிவிற்கு பறந்தன. இறுதியாக 'நீ எல்லாம் ஒட்டச் சிரட்டைக்குள்ள தண்ணிய ஊத்திற்று சாவுடா. இருக்கிறதே பூமிக்குத் தான் பாரம்டா' என்று ஒருமையில் திட்டினார். தலையைக் குனிந்து கொண்டானே தவிர பதிலளிக்கவில்லை அவன்.

வாழ்க்கையில் முதல் தடவையாக பலருக்கு மத்தியில் அவமானம் என்ன என்பதை சந்தித்திருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனம் உடைந்தே போனான். ஆனால் அழவில்லை. தனது தவறு என்பதை அவனது மனம் ஏற்றுக் கொண்டது. தன்னால் சலீம் நானாவிற்கு பெரும் அவமானம் ஏற்பட்டிருக்கிறது என்பதை உணர்ந்தான்.

மெதுவாக அவர் அருகில் சென்று " எனது நிலை மிக மோசமாகிவிட்டது. உங்கட பணத்தை விரைவில் தாறன்" என்று கூறிவிட்டு நகர்ந்தான்.

சலீம்நானா முதல் தடவையாக மரம் ஏற்றி வந்தவர்களிடம் தன் மானத்தை அடகு வைப்பதாக உணர்ந்து கொண்டார். சிவாவிற்கு திட்டடியதை எண்ணி கவலை கொண்டார்.

மாலை வரை சிவாவின் வியாபார நிலையம் பூட்டியே இருந்தது. வியாபார நிலையத்தினை மாலை ஆறு மணிக்கு வந்து திறந்தான். இருப்பு மிகவும் குறைவாகவே இருந்தது. வியாபாரத்திற்குப் போதுமானதாகவோ வியாபாரம் செய்யக் கூடிய பொருட்களோ இருப்பில் இல்லாதிருந்தது.

எட்டு மணிவரை தனியாக இருந்து தனது தவறுகளையும் வியாபாரம் கீழ்நிலை நோக்கி நகர்வதையும் பற்றி ஆராய்ந்தான். ஒவ்வொன்றாக பட்டியலிட்டான்.

தனது வியாபாரத்தினையும் முறைமையினையும் மாற்ற வேண்டும் என எண்ணினான். இருப்பில் இருக்கின்ற பொருட்களை எப்படி சந்தைப்படுத்துவது எனச் சிந்தித்தான்.

அப்பா வியாபார நிலையத்திற்கு வந்தார். தனது மகனை வாடிக்கையாளர்கள் யாருமற்ற நிலையில் கண்டார். அவனது தொழிலில் அவர் எந்தத் தலையீடும் செய்வதில்லை. ஆலோசனைகள் எதுவும் சொல்வதும் இல்லை. ஆனால் கடன் தொடர்பாக மாத்திரம் தனது கருத்தினை சொல்வதோடு நிறுத்திக் கொள்வார்.

சிவா தனது முயற்சியினால் முதலீட்டினை உருவாக்கி தனது வியாபாரத்தைப் பெருக்கியவன். அவனால் எந்த சூழ்நிலையினையும் தனியாக அவனாகவே சமாளிக்க வேண்டும் என இராமசந்திரன் கூறுவார்.

"நல்லா யோசித்து செயற்படு. சலீம் நானா விடயம் கேள்விப்பட்டேன். அதனால் துவண்டு விடாத" அப்பாவின் வார்த்தைகள் அவனுக்கு புதியதோர் தெம்பைக் கொடுத்தன. தற்போது அவனுக்கு தேவையான வார்த்தைகள் அவை என்பதனை அப்பா தெரிந்தே சொல்லியிருக்கிறார் போலும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த நாள் சந்தை வீதியில் இருக்கும் சிவாவின் நண்பன் இபாதுள்ளாவின் வியாபார நிலையத்திற்குச் சென்றான். தனது நிலையினைச் சொன்னான். தனது பொருட்களை எடுத்துக் கொள்ளும்படியும் பணத்தில் கால்வாசியினை தருமாறும். மிகுதிப் பணத்தை மாதா மாதம் தருமாறும் கோரினான்.

நண்பனின் கோரிக்கையினை ஏற்றுக் கொண்டதோடு நாற்பது வீதமான பணத்தினை இபாதுள்ளா சிவாவிற்கு பொருட்களை பெற்றுக்கொண்ட பின் கொடுத்தான்.

கிடைத்த பணத்தினை சலீம்நானாவிற்கும் சந்திரன் அண்ணனிற்கும் சங்கவைக்கும் கொடுத்தான். மிகுதியாக இரண்டாயிரம் இருந்தது.

ஆடம்பரமாக தொடங்கப்பட்ட தொழில் மூடப்பட்டு விட்டது என்பதனை ஊரில் உள்ளவர்களில் சிலர் எள்ளி நகையாடினர். சிலர் கவலையடைந்தனர். பலரும் பலவாறான கருத்துக்களைத் தெரிவித்தனர். அத்தனையையும் தனக்கான பட்டறிவாக எடுத்துக் கொண்டான்.

எப்படிச் செய்ய வேண்டும் என்பதை விட எப்படிச் செய்யக் கூடாது என்பதனை படித்திருந்தான்.

என்றாலும் மனதில் கவலை நிலை கொண்டிருந்ததனை அவனது அப்பாவைத் தவிர யாரும் அறிந்திருக்க வாய்ப்பில்லை. தன் பிள்ளையின் மனம் எப்படி இருக்கும் என்பது ஓர் அப்பாவிற்குத் தான் தெரியும்.

ஒரு கிழமை வரை எதுவித வேலைகளும் செய்யாது ஓய்வாக இருந்தான். நண்பன் ரவியையும் போய்ப் பார்க்கவில்லை. பார்க்கவும் அவனுக்குத் தோன்றவில்லை. தோல்வியடைந்து விட்டோம் என்ற மனநிலை இருந்தது என்னவோ உண்மை தான்.

அடுத்த கிழமை விவசாயத் திணைக்களத்திற்குச் சென்றான். விவசாய பிரதிப் பணிப்பாளரைச் சந்தித்தான். இயற்கைவழிப் பயிர்ச்செய்கை பற்றி கலந்துரையாடினான்.

அவரது கருத்துக்களும் அவரது அறிவுரைகளும் சிவாவை வெகுவாகக் கவர்ந்து விட்டன.

விவசாயப் பிரதிப் பணிப்பாளருக்கு சிவாவின் ஆர்வம் வெகுவாகக் பிடித்திருந்தது. ஆர்வமுடனிருந்தவனை சிவா வசிக்கும் பகுதிக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பான விவசாயப் போதனாசிரியரிடம் அறிமுகம் செய்து வைத்தார். நம்பிக்கையுடன் வீடு சென்றான் சிவா.

தனது அப்பாவின் சிற்றப்பாவின் காணி பற்றை நிறைந்து இருந்தது. அந்த இடத்தினை தனக்கு இரண்டாண்டுக்கு பயிர் செய்வதற்கு தருமாறு கோரினான். சாதகமான பதில் கிடைத்தது. டெங்குத் தொல்லைக்கு நிரந்தர தீர்வாகவாவது இருக்கும் என உரிமையாளர் எண்ணினார். 'குத்தகை எதுவும் தேவையில்லை. ஒழுங்காகப் பராமரித்துக் கொள்' என சிற்றப்பா ஆலோசனை கூறினார்.

சம்புக்களி மண் பயிரச்செய்கைக்கு உகந்த வளமான மண். எந்தப் பயிரும் சிறப்பாக வளரும். மறுநாளே துப்பரவாக்கத் தொடங்கினான். வெட்டிய பற்றைகளை ஒரு கிழமையின் பின் ஓரிடத்தில் சேர்த்தான். புற்களை நிலத்தைத் தோண்டி அதனுள் போட்டு மூடினான்.

எட்டாவது நாள் நல்ல இன பப்பாசிக் கன்றுகள் கும்புறுப்பிட்டியில் இருக்கிறது என விவசாய போதனாசிரியர் கூற அங்கு புறப்பட்டான்.

கும்புறுப்பிட்டியில் வசிக்கும் இராசமாணிக்கம் பப்பாசி விதைகளை நாற்றுமேடையில் நன்கு பராமரித்து சிறந்த கன்றுகளை தொடர்ச்சியாக விற்று வந்தார். அவரது வீட்டிற்குச் சென்றான். அவருடன் பேசினான். அவரும் இன்னும் பதினைந்து நாள்களில் தருவதாக உறுதியளித்தார்.

அவருடன் கதைத்துக் கொண்டிருந்த போது இறக்கக்கண்டியிலிருந்து வந்த இருவர் இராசமாணிக்கத்தாரின் வளவினுள் இருக்கும் தென்னையிலிருந்த தேங்காய்களை வாங்க வந்தார்கள். இருபத்தாறு தேங்காய்கள் இருப்பதாகக் இராசமாணிக்கத்தார் கூற ஒரு தேங்காய் முப்பத்துநான்கு உருபா வீதம் பெற்றுச் சென்றுவிட்டனர்.

சிவாவிற்கு பொறி தட்டியது. திருக்கோணமலை நகரத்தில் தேங்காய் ஒன்று அறுபது உருபாவிற்கு விற்கப்படுகிறது. நாமும் வாங்கி விற்றால் என்ன என்ற சிந்தனை உருவானது.

இராசமாணிக்கத்தாரிடம் கேட்டுப் பார்த்தான். தாராளமா செய்யுங்க தம்பி. இந்த ஊரில உள்ள பெடியனுவளுட்ட நானும் சொல்லிப் பாத்திற்றன். ஆரும் செய்யிற மாதிரி இல்ல. உங்களால ஏலுமெண்டா செய்யுங்க. இஞ்ச ஊரில ஆக்கள் ஒவ்வொரு நாளும் பத்தோ பதினைஞ்சோ தருவாங்க. எல்லாற்ற வீட்டயும் தென்ன இருக்கு" என்று நிறுத்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தேங்காயில் இருபது உருபாவிற்கு கூடுதலாக இலாபம் கிடைக்கும் என்பதை உணர்ந்தான்.

இராசமாணிக்கத்தாரின் உதவியுடன் எண்பது தேங்காய்கள் முப்பது உருபா வீதம் பெற முடிந்தது.

திருக்கோணமலையில் உள்ள மணிஸ்கபே,சரவணபவன் ஆகிய இரு உணவகங்களின் உரிமையாளர்களிடமும் பேசினான். இருவருமே அனைத்தையும் மலிவாகக் கிடைத்ததனால் பெற்றுக்கொண்டனர். ஐம்பத்திரண்டு உருபாவிற்கே விற்பனை செய்தான். மணிஸ்கவே உரிமையாளர் சதீஸ் கூடுதலாக தேங்காய்களை கொள்வனவு செய்ததுடன் புதிய கடைக்காரர்களையும் அறிமுகப்படுத்தி உதவினார்.

நிகர இலாபமாக ஆயிரத்தி எண்ணூறு உருபா கிடைத்தது மகிழ்ச்சியளித்தது. அன்று அவன் வீடு செல்லவில்லை. கும்புறுப்பிட்டிக்கே சென்று இராசமாணிக்கத்தாரின் வீட்டிலேயே தங்கினான். அவர்தான் அவனை தனது வீட்டில் வந்து தங்கும்படி கூறியிருந்தார்.

வீட்டிற்கு ஒரு கிழமைக்கு வரமுடியாது என்பதனை அலைபேசியூடாகத் தெரிவித்தான்.

ஒவ்வொரு நாளும் தேங்காய்கள் நூறுக்கும் அதிகமாகப் பெறக் கூடியதாக இருந்தது. தனது கொண்டா 90 வகை உந்துருளி பாரமேற்றுவதற்கு வசதியாக இருந்தது. ஒரு கிழமையில் திருக்கோணமலையில் பல உணவகங்கள் சிவாவின் வாடிக்கையாளர்கள் ஆனார்கள். தேங்காய்ப் பற்றாக்குறை ஏற்பட்டது.

அளம்பில், செம்மலையில் நிறையத் தேங்காய் இருப்பதாக இராசமாணிக்கத்தார் கூறியதுடன் கடந்த கால சண்டைகளினால் தான் இடம்பெயர்ந்து போய்த் தங்கியிருந்த வீட்டுக்காரரிடம் தென்னந் தோட்டம் இருப்பதாகவும் அவரிடம் அறிமுகப்படுத்தி விடுவதாகவும் கூறியதுடன் அவ்வாறே செயற்படவும் செய்தார்.

அளம்பிலிலிருந்து தேங்காய்கள் திருக்கோணமலை நகரத்திற்கு உந்துருளியில் இறக்குமதியாகின.

ஒரு நாளைக்கு இருநூறு தொடக்கம் முந்நூறு தேங்காய்கள் வரை கடும் சிரமத்துடன் கொண்டு வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டிலிருந்து வந்து பதினைந்து நாள்கள் ஆகிவிட்டது என்பதனை உணர்ந்தவன் வீட்டிற்குச் சென்றான். செல்லும் போது பப்பாசிக் கன்றுகளுடன் சென்றான். கையில் தேங்காய் விற்ற பணமாக அண்ணளவாக எழுபத்தியிரண்டாயிரத்தினையும் கொண்டு சென்றான்.

வீட்டில் கூறிய போது அம்மா அழுதாள். "தம்பி இப்பிடி கஸ்ரப்படுறதுக்கா நீ படிச்சனீ. இப்பயும் ஒண்டும் கெட்டுப் போகல்ல. ஒரு வேல எடு தம்பி" கண்களில் நீர் நிரம்ப சொன்னாள்.

பெற்றவளுக்குத் தான் தெரியும் பிள்ளை படும் வேதனைகள் என்பதனை சிவா உணர்ந்தான். "இப்பத்தான் நீ சரியான வழியில பயணிக்கத் தொடங்கியிருக்கிறா. மகிழ்ச்சியா இருக்கிடா உன்ன நினைக்க" அப்பா கூற. அம்மாவிற்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

ஆனாலும் அம்மா என்ன நினைத்தாளோ தெரியவில்லை. அதனை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. என்ர பிள்ள மட்டும் இல்லையே அவன். அவருக்கும் பிள்ளை தானே. பிள்ள கஸ்ரப்படுறது அவருக்கு என்ன மகிழ்ச்சியாவா இருக்கப் போவுது? ஏதோ நல்லதுக்குத்தான் அவர் சொல்லுவார் என நினைத்துக்கொண்டாள்.

மறுநாள் பப்பாசியை நட்டவன். ஐந்து நாள்கள் தொடர்ந்து யாரின் உதவிகளும் இன்றி தனியாளாகவே நீர் ஊற்றினான்.

அதன் பின் வேலையாள் ஒருவரை பணிக்கமர்த்தினான். அதற்கடுத்த நாள் செம்மலைக்கு புறப்பட்டான். ஆனால் மாலையில் திரும்பி வீட்டிற்கு வந்து விட்டான். ஆதிகாலையில் செம்மலை, அளம்பில், கும்புறுப்பிட்டி என மூன்று இடங்களிற்கும் மாறி மாறி பயணித்து மாலையில் வீட்டிற்கு வந்து பப்பாசியினை பார்வையிடுவதுமாக காலம் கழிந்தது.

நான்கு மாதங்களில் ஒரு சிறிய நான்கு சில்லு வாகனமொன்றினை குத்தகை அடிப்படையில் பெற வேண்டிய தேவை ஏற்பட்டது. அவ்வாறே செய்தான்.

தற்போது சிலாவத்தையிலிருந்தும் நாயாற்றிலிருந்தும் இறாலும் தேங்காயுடன் வந்து சேர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணைக்கு ஒருவரை பணிக்கமர்த்தியிருந்தான். கிண்ணியாவில் இறாலினை அதிக விலைக்குக் கொடுக்கக் கூடியதாக இருந்தது. சிலவேளைகளில் திருக்கோணமலைச் சந்தையிலும் கொடுத்தான்.

திருக்கோணமலையில் தற்போது அவனுக்கு பலர் வியாபார நண்பர்களாகியிருந்தனர். மட்டிக்களி, இலிங்கநகர், மட்கோ, சாம்பல்தீவுப் பாலம், தில்லைநகர், நாலாம்கட்டைச் சந்தி, உவர்மலை ஏற்றம் என ஏழு இடங்களில் தனக்கு அறிமுகமானவர்களை தரகு அடிப்படையில் பணிக்கமர்த்தி மீன், இறால் என்பவற்றை விற்பதற்கு மாலைநேர அங்காடிகளை உருவாக்கினான்.

மக்களுக்கும் ஏனைய இடங்களைவிட குறைந்த விலையில் பொருட்கள் கிடைத்தன. விற்பனை கூடியது.

அவ்விடங்கள் தேங்காயும் விற்பனை செய்கின்ற இடங்களாகின.

வருகின்றவர்கள் மரக்கறிகளும் இந்த இடங்களில் விற்பனை செய்யுமாறு கூறினர் என்பதனை விட கோரிக்கை முன்வைத்தனர் என்று கூறலாம்.

ஆறு மாதங்களில் பப்பாசிகளிலிருந்து காய்கள் பறித்து தம்புள்ளைச் சந்தைக்கு அனுப்பினான். அனுராதபுரத்தில் பப்பாசிப் பானங்கள் தயாரிக்கும் தொழிற்சாலைக்கும் அனுப்பினான். இயற்கை உரமிட்டு வளர்க்கப்பட்ட பப்பாசிப்பழங்கள் என்பதனால் அதிக விலை அனுராதபுரத்தில் கிடைத்தது.

விவசாயப் போதனாசிரியர் மூலமாக பழங்கள் ஏற்றுமதி செய்பவர்களின் சம்மேளனத் தலைவரின் தொடர்பு கிடைத்தது. அவர் மூலமாக தற்போது கிடைக்கும் விலையின் மூன்றுமடங்கு விலைக்கு கொழும்பு யாஎலவில் கொடுப்பதற்கும் ஒழுங்கு செய்து கொடுத்தார்.

அடுத்த ஆண்டு சம்புக்களியில் பலர் பப்பாசிச் செய்கையில் ஈடுபட்டனர்.

இயற்கை முறையில் செய்கின்ற வழிகாட்டியாக சிவா உருவானான். பலரும் அவனது மதியுரைகளுக்காக காத்திருந்தனர். பல இடங்களுக்குச் சென்று பல்வேறு தகவல்களை தன்னகத்தே பெற்று வைத்திருந்தான்.

ஓராண்டின் பின்னர் பப்பாசிப் பழங்களை தானே ஏற்றுமதி செய்வதற்கான முழுமையான அறிவினையும் தொடர்பினையும் பெற்றிருந்ததனால் பழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுமதியினைத் தொடங்கினான். எதிர்பார்த்ததனை விட அதிக இலாபம் கிடைத்தது.

இயற்கை முறையில் தயாரிக்கப்பட்டதனால் மத்தியகிழக்கு மற்றும் ஐரோப்பிய நாடுகளில் கூடுதலான கேள்வி சிவாவின் பழங்களுக்குக் கிடைத்தது. அதிகளவான கோரிக்கைகள் வரத்தொடங்கின.

தன்னை கடந்த ஆண்டு எள்ளி நகையாடியவர்கள் எல்லாம் அவனுடன் உறவானார்கள். ஆனால் அவன் நண்பன் ரவி மாத்திரம் அவனிடம் வரவேயில்லை. கரணியம் தெரியவில்லை. தன் நண்பனை தற்போதைக்குப் பார்ப்பதில்லை என்று சிவாவும் நினைத்துக் கொண்டான்.

இரண்டாண்டுகள் சென்றன. ரவி சிவாவின் வீட்டிற்கு வந்திருந்தான். சிவாவின் வீட்டில் எதுவித மாற்றங்களும் இல்லை. முன்னர் இருந்ததை விட ஒரு கிடுகினால் வேயப்பட்ட ஐம்பதடி நீளமான மண்டபம் என்று சொல்லக்கூடிய கட்டடம் இருந்தது. சுற்றிவர அரை மட்டத்திற்கு களி மண்ணினால் ஆக்கப்பட்ட சுவர் இருந்தது. தரை ஆற்று மணலால் நிரப்பப்பட்டு அழகாக இருந்தது. காற்றோட்டமாகவும் இருந்தது.

அப்பா ரவியை ஓலை மண்டபத்தினுள் அழைத்துச் சென்றார். அங்கு நுழையும் போது அப்பாவின் அலைபேசி அலறியது.

மகன் அழைப்பதாக ரவியிடம் கூறிக்கொண்டு மகனுடன் பேசினார். 'அப்பா நான் துபாயிலிருந்து நேற்று லண்டனுக்கு வந்திற்றன். நோர்வேக்கு நாளைக்கு போயிற்று நாலு நாள்ள கொழும்புக்கு வந்திருவன். நகைச்செல்வியிட்டச் சொல்லி தயாரா இருக்கச் சொல்லுங்க. ரவி வீட்ட போறதுக்கு' என்று மறு முனையிலிருந்து சிவா பேசினான்.

அதனை அவன் நண்பனும் கேட்டுக் கொண்டே இருந்ததை சிவா அறிந்திருக்கவில்லை.

நகைச்செல்வியை தன் உயிர் நண்பனுக்கு திருமணம் செய்து வைப்பதற்கு அப்பாவிடமும் அம்மாவிடமும் ஏன் தங்கச்சியிடமும் ஏற்கனவே விருப்பம் வாங்கியிருந்தான் என்ற விபரத்தை பக்குவமாக ரவியிடம் எடுத்துக் கூறிக்கொண்டிருந்தார் ரவியின் மாமனாராகப் போகும் இராமச்சந்திரன் என்ற ஓய்வுநிலை கிராம அலுவலர் தன் மகனை உயர்வாக நினைத்து பெருமிதமடைந்தவராக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதனம் தேடும் உறவுகள்

சூரியன் தன் கதிர்களின் வெட்கையைக் குறைத்துக்கொண்டு செந்நிறமாகி மறைவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தான். பறவைகள் தங்கள் இருப்பிடங்களை நோக்கி அன்றைய நாளில் தம் உணவுத் தேவையை நிரப்பிய மகிழ்ச்சியில் திரும்பிக்கொண்டிருந்தன. சூரியனின் சிவப்புநிறக் கதிர்களையும் பறவைகள் வானவூர்தி இறக்கைவடிவிலான வடிவமைத்து பறந்து சென்றுகொண்டிருப்பதையும் பறவைகள் பறக்கும் போது எழுப்பிக்கொண்டிருக்கும் ஒலியினையும் கண்களாலும் காதுகளாலும் இரசித்துக்கொண்டு எருமைகளின் பின்னால் கையில் துவரம் தடியுடன் எருமைகளை அடைக்கும் பட்டி நோக்கி அடிஅடியாக நகர்ந்து கொண்டிருந்தான் இருபத்தெட்டு அகவை நிரம்பிய சந்திரகுலசிங்கம்.

சந்திரகுலசிங்கம் நான்கு உடன்பிறப்புகளுடன் பிறந்தவன். மூன்று அக்காக்களுடன் ஒரு தங்கை அவனது உடன்பிறப்புகள். அப்பா சின்னத்தம்பி, சந்திரகுலசிங்கத்திற்கு நான்கு வயதாக இருக்கும் போது குருதிப்புற்றுநோயால் சாவடைந்துவிட்டார்.

தங்கை கமலினிக்கு அப்போது அகவை ஒன்றரை. அக்கா மகிழினிக்கு அகவை ஆறு, சின்னக்கா என்று செல்லமாக அழைக்கப்படும் செல்வந்தினிக்கு அகவை எட்டு. பெரியக்கா மதுவந்திக்கு அகவை பத்து. மதுவந்திக்கு ஐந்தாம் தர புலமைப்பரிசில் தேர்வுக்கு நாள்கள் நெருங்கிக்கொண்டிருக்கும் போதுதான் அப்பா தவறிவிட்டிருந்தார்.

தந்தையின் பிரிவினால் பெரியக்காவால் படிக்கமுடியவில்லை. அப்பா பெரியக்கா மீது 'பொண்ணு பொண்ணு' என்று பாசத்தைப் பொழிந்தவர். முதற்பிள்ளை என்பதாலும் திருமணமாகி ஐந்தாண்டுகளின் பின்னர் பிள்ளை இல்லையே என்ற ஏக்கத்தின் பின்னர் பிறந்திருந்ததாலும் பொண்ணு மீது என்னவோ அப்பாவுக்கு அன்பு அதிகம்தான். கூலி வேலை செய்வதற்குச் செல்லும் போது கூட பொண்ணுவின் முகம் பார்க்காமல் போனது கிடையாது. சின்னக்கா செல்வந்தினி ஒருநாள் அப்பாவிடம் கேட்டேவிட்டாள்" பெரியக்காவிலதானா உங்களுக்கு விருப்பம்" என்று. கேட்டவளை ஒருவாறு சமாளித்தவர், தான் மற்றப் பிள்ளைகளிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிக்கொள்ளாமல் நடக்கத் தலைப்பட்டார். அன்பான குடும்பம். அப்பா சாவடையும் போது மூன்று அக்காமாரும் பள்ளியில் படித்துக்கொண்டிருந்தார்கள்.

அப்பாவின் இழப்பு குடும்பத்தை நடுத்தெருவில் விட்டிருந்தது. அக்காமார் மூன்று பேரும் பள்ளிக்கூடம் செல்வதை நிறுத்தவேண்டியதாயிற்று.

"சாப்பாட்டிற்கே வழியில்லாத நிலையில் படிப்பு ஒரு கேடா" என மூத்தவளிடம் அடிக்கடி கோபப்படுவாள் அம்மா. மூத்தவளுக்கு பள்ளிக்கூடம் செல்வதற்கு விருப்பம். அம்மாவிடம் பள்ளிக்கூடத்திற்கு அனுப்பும்படி நச்சரித்துக்கொண்டேயிருப்பாள். புலமைப்பரிசில் தேர்வின் பெறுபேறுகள் வெளியானது. வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெறவில்லை. அதன்பின் பள்ளிக்கூடம் செல்வதற்கு மூத்தக்காவும் விரும்பவில்லை. அம்மாவிடமும் கேட்கவில்லை. ஆனால் தம்பியை பள்ளிக்கூடம் அனுப்பி படிக்க வைப்பம் என்றாள். அம்மா தலையசைத்தாள். அம்மா தோட்டத்தில் கூலி வேலைகளுக்குச் சென்றாள். மதுவந்தி கடைக்குட்டியைப் பார்த்துக்கொள்வதுடன் மற்றைய இரு தங்கைகளுடனும் விளையாடுவாள். காலையில் அம்மா வேலைக்குப் போவதற்கு முன்னர் சமைப்பதற்கு உதவுவாள். படிப்படியாக ஓராண்டிற்குள்ளாக ஓரளவு வாய்க்கு சுவையாக சமைப்பதற்கு பழகியும் விட்டாள்.

மதுவந்தி குடும்பப் பொறுப்புள்ள பிள்ளையாக வளர்ந்தாள். அப்பாமாதிரி இருக்கிறாள் என்று வீட்டிற்கு வரும் உறவினர்கள் சொல்வார்கள். அப்பாவை நினைக்க மூத்தவளுக்குப் பெருமையாக இருக்கும். அப்பாவும் குறிப்புணர்ந்து வேலைகளைச் செய்பவர் என்று ஊர் முழுவதும் நல்ல பெயர் அவருக்கு இருக்கிறது என்பது மதுவந்திக்குத் தெரியும்.

காலையில் ஏழு மணிக்குச் செல்லும் அம்மா பாக்கியவதி மாலை ஆறு மணிக்கு வருவாள். வரும் நேரத்தில் தேநீர் தயாரித்து வைத்திருப்பாள். தாய் பிள்ளைகள் எல்லோருமாக தேநீர் குடிப்பார்கள். பிள்ளைகளை எப்படி வளர்க்கப் போகிறேனோ தெரியாது என கவலைப்படுவாள் அம்மா. வெள்ளி தோறும் வேலைக்குப் போகும் போது காலையிலே வெள்ளைப் பிள்ளையார் கோவிலுக்குப் போய் "என்ர பிள்ளைகள் வளரும் வரைக்குமாவது எனக்கு ஒண்டும் வராம காப்பாத்து பிள்ளையாரே" என வார்த்தை தவறாத வேண்டுதல் செய்வாள். கடின உழைப்பாளியாக வேலைக்குச் செல்லுமிடங்களில் தொழில்தருநர்களின் நன்மதிப்பினைப் பெற்றிருந்தாள். கொடுக்கப்படும் வேலைகளை திறம்படச் செய்வாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் பாக்கியவதிக்கு வேலை கிடைப்பதில் என்றும் சிக்கலிருந்ததில்லை. ஏனையவர்களைவிட கூலி சற்று கூடுதலாகவே பாக்கியவதிக்குக் கிடைக்கும்.

கடைசி இருபிள்ளைகளையும் படிப்பித்து ஐந்து பிள்ளைகளுடன் ஆறாவது உருப்படியான தனக்கும் சேர்த்து வயிறு நிரப்ப பாக்கியவதியின் உழைப்பு போதுமானதாக இருந்தது. பண்டிகை நாள்களில் தொழில் தருநர்களினால் பிள்ளைகளுக்கு உடைகள் வாங்கிக்கொடுக்கப்படும். அதனை விருப்பமில்லாவிட்டாலும் வாங்கிக்கொள்வாள். பிள்ளைகளின் மனம் மகிழ்ச்சியாக இருக்கட்டுமே என்பது தாயின் எண்ணம். புதிய உடைகளை உடுத்தும் போது பிள்ளைகளின் முகத்தில் தோன்றும் மகிழ்ச்சியை பார்த்து மகிழ்வாள்.

காலங்கள் உருண்டோடின. சந்திரகுலசிங்கம் ஐந்தாம்தர புலமைப்பரிசில் தேர்வில் வெட்டுப்புள்ளியிலும் கூடுதலாக ஒரு புள்ளியினைப் பெற்றிருந்தான். பெறுபேற்றினை வீட்டில் தெரிவித்து வெற்றியை மகிழ்ச்சியாய் இரவு சவ்வரிசிக் கஞ்சியுடன் கொண்டாடினார்கள்.

சொக்கநாதர் ஐயா சந்திரகுலசிங்கத்தின் வகுப்பாசிரியர். மாலை ஆறரை மணிக்கு சந்திரகுலசிங்கம் வீட்டிற்கு வந்தார். சந்திரகுலசிங்கத்திற்கு நேரில் சென்று வாழ்த்துத் தெரிவித்து அவனைப் பாராட்ட வேண்டும் என்பது சொக்கநாதரின் விருப்பம். வந்தவர் அவனை அழைத்து உச்சி தடவி நெற்றியில் முத்தமிட்டு கட்டியணைத்தார். "உன்னுடைய பெறுபேறுதான் மகன் எனக்கு மகிழ்சியான பெறுபேறு" என்றார். "மதுவந்தி படித்திருந்தால் இப்ப சாதாரண தரத்தில் ஒரு கலக்குக் கலக்கியிருப்பாள். நல்ல கெட்டிக்காரி. என்ன செய்யிறது. காலம் எப்பிடியெல்லாம் எல்லாற்ற வாழ்க்கையிலயும் விளையாடுது" என்று கூறியவாறு அவர்கள் வசித்துக்கொண்டிருக்கும் வளவினை கண்களால் நோட்டமிட்டார். வேலி ஓரத்தில் ஐந்தடிக்கு ஒன்றாக தேக்குமரங்கள் நல்ல உயரத்தில் வளர்ந்திருந்தன. "ஐயா மதுவந்திய பள்ளியல சேர்க்க வரக்கொள்ள இவரிட்ட நீங்க குடுத்த தேக்க மரக்கன்றுகள் தானய்யா இதெல்லாம். அஞ்சு கண்டுகள் பட்டுப்போச்சி. மற்ற எண்பத்திஅஞ்சு கண்டுகளும் இப்ப பத்து வயதில இருக்குதுகள்" என கண்களின் ஓரத்திலே கசிந்து கொண்டிருந்த நீர்த் துளிகளைத் கூந்தல் சேலையால் துடைத்தவாறு கூறினாள் பாக்கியவதி. சொக்கநாதர் மனதால் மகிழ்வடைந்தார். வனபரிபாலனத் திணைக்களம் அரை மானியத்தில் வழங்கிய தேக்கம் கன்றுகளை விருப்பத்துடன் வாங்கிய மகான் சந்திரகுலசிங்கத்தின் அப்பா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தேக்குமரம் நிண்டா பசளையெல்லாம் இழுத்தெடுத்திரும். பயிர் ஒண்டும் செய்ய ஏலாது" என ஏனையவர்கள் மறுத்துவிட தொண்ணூறு தேக்கம் கன்றுகளையும் தானே வாங்கி தனது கால் ஏக்கர் காணியின் வேலி ஓரத்தில் நட்டு தேவையானளவு நீரை வாரத்தில் ஒரு நாள் ஊற்றியும் வந்தார். அவரின் மறைவிற்குப் பின்னர் தாயும் மூத்தவளும் அந்தப் பொறுப்பினை ஏற்றிருந்தார்கள்.

மதுவந்தி சவ்வரிசிக் கஞ்சியை குவளையில் ஊற்றி கொண்டுவந்து சொக்கநாதரிடம் நீட்டினாள். "என்ன இது? ஆ பாயாசம். ம். மகன்ர வெற்றி பாயாசத்துடன் கொண்டாட்டம் என. நல்லது .நல்லது. நடக்கட்டும்" என மகிழ்ச்சியுடன் சிரித்த முகத்துடன் தெரிவித்தார்.

மகனின் படிப்பில் எப்படி கவனம் செலுத்த வேண்டும் உள்ளிட்ட சந்திரகுலசிங்கத்தின் மேம்பாட்டு விடயங்களை சிறிது பேசி விட்டு சொக்கநாதர் புறப்பட்டுவிட்டார்.

"அம்மா இது தானா பாயாசம்? சவ்வரிசிக் கஞ்சி தானே இது. இதென்ன ஐயா பாயாசம் என்றார்" என்றான் மகன். அம்மா சிரித்துவிட்டு "நாம இத சவ்வரிசிக் கஞ்சி எண்டுதான் சொல்ற. ஆனா இது தான் பாயாசம்" என்றார். "பாயாசம் வைக்க வேணும். பானையிலோ அரிசியில்லை, முற்றிய நெற்கதிரே கொஞ்சம் அரிசி தருவாயோ எண்டு தானே நான் முதலாம் வகுப்பில படிச்சனான். எனக்கு பாயாசம் குடிக்க எண்டு ஒரே ஆச அம்மா. எப்பிடி கேக்கிற எண்டு இருந்தனான். இப்பதான் தெரியுது நம்மட சவ்வரிசிக் கஞ்சிதான் பாயாசம் எண்டு" என்று கூற பாயாசம் குடித்துக்கொண்டிருந்த வீட்டிலிருந்த அனைவருமே வாய்விட்டுச் சிரித்து விட்டனர். சந்திரகுலசிங்கத்திற்கு வெட்கமாகிவிட்டது.

சாதாரணதரப் தேர்வுப் பெறுபேறு பள்ளியில் எதிர்பார்த்தது போலவே சந்திரகுலசிங்கத்திற்கு கிடைத்தது. உயர்தரத்தில் கணிதத் துறையில் படிக்குமாறு நண்பர்கள் ஆலோசனை கூறினர். கலைத்துறையையே அவன் தேர்ந்தெடுத்தான். பல்கலைக்கழகம் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அந்நேரத்தில் பெரியக்காவின் திருமணத்திற்கான பேச்சுக்களும் நடைபெற்றன. மூன்று இலட்சம் சீதனம் கேட்டார்கள். "மூன்று இலச்சத்துக்கு நான் எங்க போற? வாழ்க்கய ஓட்ட நாங்க படுற பாட்டில லச்சத்துக்கு நாங்க எங்க போற" என்று அம்மாவின் அண்ணனிடம் அம்மா கூறினாள். சீதனம் ஒண்டும் இல்லாம எண்டா சொல் அண்ண, முடிச்சு வைப்பம். இல்லாட்டி இதுகள் குமருகளாகவே கிடந்து சாகட்டும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கண்ணீர் மல்க அண்ணனிடம் வெம்பினாள். "சீதனம் இல்லாட்டி எப்பிடிம்மா. இவளுக்கு இஞ்ச கட்றதே விருப்பமில்ல. நான் தான் சொன்னனான். தங்கச்சியிர பிள்ளய கட்டி வைப்பம் எண்டு. எனக்கும் உன்ர நில விளங்குது. நான் என்னம்மா செய்யிறது?" என்றவாறு படலை நோக்கிச் சென்றவரிடம்" மாமா கொஞ்ச நாள் பொறுங்க. நான் காசுக்கு ஏதாவது செய்றன்" முதன்முதலாக குடும்ப விடயத்தில் தலையிட்டான் சந்திரகுலசிங்கம். "உனக்கென்ன விசரா பிடிச்சிற்று? உன்ன எப்பிடி மேல படிப்பிக்கிற எண்டு எனக்குத் தெரியல்ல. அதுக்குள்ள இவங்களுக்கு காசு குடுக்கப்போறன் என்றா" அம்மா சற்று கோபத்துடன் சொரிந்தாள். " அம்மா நம்மட அக்கா வாழ்க்கைக்கு நாம தான் ஏதாவது செய்யோணும். நீ பொறு நான் ஏதாவது பாக்கிறன். நீங்க போயிற்று வாங்க மாமா" என படலைவரை வந்து அனுப்பி விட்டு வந்து அம்மாவிடம் பேசினான்.

மறுநாள் நகரத்திலுள்ள மரக்காலைக்குச் சென்றான். "தேக்கு மரம் மூண்டடி சுற்றளவில முப்பத்தைஞ்சடி உயரமா இருக்கு என்ன வில தருவீங்க?" என கேட்டான். முதல்கடைக்காரர் பதினைஞ்சாயிரம், இண்டாவது பன்னிரண்டாயிரம். மூன்றாவது இருபத்தைஞ்சாயிரம். இப்படி ஆறு மரக்காலைகளை விசாரித்தான். பேரம் பேசினான். "பத்தொன்பது வயது மரம். நல்ல உறுதியான மரம். முப்பதாயிரம் எண்டா சொல்லுங்க. தாறன்" என்றான். இருபத்தியேழாயிரத்திற்கு விலை முடிவானது.

மறுநாள் அம்மா வேலைக்குப் போக தயாரான போது "அம்மா இனி நீங்க வேலைக்குப் போக வேணாம். நம்மட வளவுக்குள்ள தோட்டம் செய்வம்" என்றான் மகன். "அதுக்கு முதலுக்கு எங்கடா போறது" அம்மா. "அத நான் ஒழுங்கு செய்யிறன்" எனும் போது அவர்களின் வீட்டினை நோக்கி முன்னால் ஒரு சிற்றூர்தியும் பின்னால் இரு பாரஊர்திகளும் வந்தன.

"அம்மா இந்த தேக்க மரத்த விலை பேசிற்றன். இண்டைக்கு குடுப்பம். ஒரு மரம் இருபத்தேழாயிரம்" என்றான் " இருபத்தேழாயிரமா" அம்மா ஏங்கியே போனாள்.

எல்லா மரத்தையும் வெட்டச்சொன்னான். "தம்பி இவற்ற நினைவா இந்த மரம் மட்டும் நிக்கட்டும்." என முதலாவதாக தனது முதல் மகளின் கையால் நட்ட மரத்தைக் காட்டினாள் அம்மா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்பத்திநான்கு மரங்களும் அறுக்கப்பட்டன. பக்கத்து வீட்டுக்காரர்கள் எல்லாம் வந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். மூக்கில் விரலை வைத்தார்கள் என்று சொல்வார்களே அது போல் எல்லோரும் வியந்து போய் நின்றார்கள்.

"இருபத்தியிரெண்டு இலட்சத்தி அறுபத்தெட்டாயிரம் வருது கணக்கு. ஆனா உங்கட அம்மாவ பாக்கக்கொள்ள அந்த மரத்த மட்டும் விடுங்க எண்டு சொல்லக்கொள்ள எனக்கு என்ர அம்மாட நினைவு தான் தம்பி வந்துது. இந்தாங்க இதில இருபத்தி மூன்று இலட்சம் இருக்கு " என்று எண்ணிய பணத்தை சந்திரகுலசிங்கத்திடம் நீட்டினார். "பெரியக்கா இத வாங்கு" என அழைத்தான். வந்தவர்களுக்கு தேநீர் கொண்டு வந்த மதுவந்தி தேநீரைக் கொடுத்து விட்டு பணத்தை வாங்கிக் கொண்டாள். "எண்ணுங்க தம்பி" என்றார் பணத்தைக் கொடுத்தவர் "நீங்க என்ன தவறாகவா கொடுக்கப் போறீங்க? குறைந்தா பரவாயில்ல. கூடினா எங்களுக்கு" என்றான். வந்தவர் சிரித்தவாறு " நல்லா இருப்பீங்க தம்பி நீங்களும் உங்கட குடும்பமும்" என்றவாறு புறப்பட்டார் மரக்காலை உரிமையாளர்.

அன்று அம்மாவும் அவர்கள் வீட்டாரும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. மழைக்காலத்தில் பெய்யும் மழையில் ஒழுகும் நீருக்கு சட்டிகளை எடுத்து வைத்து நிம்மதியில்லா நித்திரையுடன் காலத்தைக் கழித்த ஓலை வீட்டு சந்திரகுலசிங்கத்தின் கையில் இருபத்திமூன்று இலட்சங்கள். மனம் மகிழ்ச்சியில் துள்ளியது.

அப்பாவை நினைத்து முதன் முறையாக அமைதியாக தனிமையில் நள்ளிரவில் எழுந்து அழுதான். மகன் அழுவதை எதேச்சையாகப் பார்த்த அம்மா எழுந்து "என்னடா என்ன நடந்துது" என்றாள். "இல்ல அம்மா அப்பாவை நினைச்சு அழுறன் அம்மா" எனக் கூற அம்மா மகனை கட்டியணைத்து யாருக்கு யார் ஆறுதல் கூறுவது என்று தெரியாத நிலையில் இருவரும் அழுதார்கள். அப்பாவின் தூரநோக்கினை எண்ணி வியந்தார்கள்.

மறுநாள் "மாமா வீட்ட போவம்" என்றான் மகன். "இல்லத் தம்பி முதல்ல சொக்கநாதர் ஐயாட்ட போகோணும். அவருக்கு இத சொல்லோணும்" என்றாள் அம்மா. பணம் அனைத்தையும் வங்கிக் கணக்கில் வைப்புச்செய்வதென புதிதாக கணக்கொன்றினை தனது பெயரில் திறந்து வைப்பிலிட்டான் சந்திரகுலசிங்கம். வங்கியால் வந்தவுடன் ஆறு பேரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேருந்தில் ஏறி சொக்கநாதர் வீடு சென்றார்கள். கையில் பைநிறைய பழங்கள் வாங்கிச் சென்றார்கள்.

"வாங்க வாங்க" என்ற சொக்கநாதர் ஐயாவை பார்க்க கவலையாக இருந்தது வந்தவர்களுக்கு.

வயது போயிருந்தது. தலை நரைத்திருந்தது. "கேள்விப்பட்டனான். பல்கலைக்கழகம் கிடைச்சிருக்கு. நல்ல மகிழ்ச்சி தம்பி" என்றார்.

வந்த விடயத்தை சுருக்கமாகக் கூறினான் சந்திரகுலசிங்கம். மகிழ்வடைந்தார் ஐயா. "ஐயா இத மறுக்காம வாங்கோணும்" என ஒரு பொதியை நீட்டினான்." "என்ன இது" என்றவாறு கையை நீட்டினார். உள்ளே திறந்து பார்த்தார் மூன்று இலட்சம் பணம் இருந்தது. கோபமானார். "இதுக்குத் தானா வந்தனீங்க. இத எடுத்திற்றுப் போங்க " என்றார் உரத்த தொனியில். இதனை அனைவரும் எதிர்பார்த்தே வந்தமையினால் யாரும் குழப்பமடையவில்லை. " ஐயா. இத நீங்க வாங்க வேணும். இவர் தந்ததாக நினைச்சுக்கொள்ளுங்க. இத வாங்கினாத்தான் ஐயா நாங்களும் மகிழ்ச்சியா இருப்பம்" என்றாள் அம்மா.

பல தடவைகள் மறுத்தாலும் பின்னர் அவர்களின் கோரிக்கையில் நியாயம் இருப்பதை உணர்ந்தவராக மனவெறுப்புடன் வாங்கிக்கொண்டார். "நல்லாப் படிச்சு நல்ல பிள்ளையா வந்து ஊருக்குப் பாடுபடோணும்" என வாழ்த்தி அனுப்பினார்.

பெரியக்காவிற்கு மூன்று இலட்சம் சீதனத்துடன் இரண்டு இலட்சத்தில் சிறிய ஒரு வீடும் கட்டிக் கொடுத்து திருமணம் செய்துவைத்தார்கள்.

பன்னிரண்டு எருமைகளும் ஒரு கடாமாடும் ஐந்து இலட்சத்திற்கு வாங்கினான் சந்திரகுலசிங்கம். மிகுதி பணத்தில் ஒன்பது இலட்சத்தை நிரந்தர வைப்பிற்கு மாற்றினான்.

வீட்டுக் காணியில் அம்மாவும் பிள்ளைகளும் தோட்டம் செய்தார்கள். கால் ஏக்கரிலும் புசிற்றா நட்டார்கள். நாற்பத்தைந்து நாள்களில் அறுவடை கண்டார்கள். சரியான முறையில் பயிர்ச்செய்கையினைச் செய்தமையால் மிகை கூடுதலாகக் கிடைத்தது. புசிற்றா அறுவடை முடிந்ததும் மிளகாய் நட்டார்கள். "இந்தக் காலத்தில் நட்டால் மழையில் அழுகிவிடும்" என அயலவர்கள் சொன்னார்கள். அவன் கேட்கவில்லை. "இம்முறை மழை குறைவு. அதனால் சிக்கலில்லை" என்று கூறி மிளகாய் பயிரிட்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிலோ அறுநூறு உருபா வரை விலை போனது. கூடுதல் விளைச்சல் கிடைத்த மகிழ்ச்சி வீட்டாருக்கு.

தொடர்ச்சியாக பயிர்ச்செய்கையில் ஈடுபட்டார்கள். அவர்களது வீட்டுச் செலவிற்கு கூடுதலாக வருவாய் கிடைத்தது. காலையில் மாடுகளை மேய்த்து விட்டு மாலை வந்து தோட்டத்திற்கு நீர் இறைப்பது சந்திரகுலசிங்கத்தின் பணியானது. நீர் இறைக்காவிட்டால் புல் பிடுங்குவது என்று ஏதாவது வேலையை தோட்டத்தில் செய்வான்.

அடுத்த ஆண்டு எட்டு எருமைகள் கன்று ஈன்றன. ஒவ்வோர் எருமையும் நான்கு அல்லது ஐந்து போத்தல் பாலைக் கொடுத்தன. போத்தல் முப்பது உருபாய்க்கு நாள்தோறும் முப்பத்தைந்து போத்தல் பால் விற்பனையானது. அடுத்த மாதத்தில் பால் யோக்கட்டாக விற்பனையானது. சின்னக்காவும் அவனும் எம்பிலிம்பிட்டிய சென்று யோகட் தயாரிப்பதற்கான பயிற்சி பெற்று வந்தார்கள். வருமானம் இரட்டிப்பானது. யோகட்டுடன் ஓர் உருபாக்கு விற்கக்கூடிய யோக்கற்றும் உற்பத்தியானது. அது சிறுவர்களிடத்தில் நல்ல வரவேற்புப் பெற்றது. அது பள்ளிச் சிறார்களுக்கு விருப்பமான உணவானது. ஊர் மக்கள் வீடு தேடி வந்து வாங்கிச் சென்றார்கள்.

இரண்டாண்டில் சந்திரகுலசிங்கம் பல்கலைக்கழகம் செல்ல வேண்டியதாயிற்று. மாடுகளை மேய்ப்பதற்கு பெரியக்காவின் துணைவர் இணங்கினார். படிப்பு முடிந்து வரும் வரையில் எருமைகள் ஈனும் கன்றுகள் எல்லாம் அவருக்கு உரிமையாகும். இதுவே அவருக்கான கூலி என எழுதாத ஒப்பந்தம் உடன்பாடானது.

நான்காண்டுகளில் பொருளியல் சிறப்புப் பட்டத்துடன் வீடு திரும்பினான் சந்திரகுலசிங்கம். பதினைந்து உருப்படிகளுக்கு உரிமையாளரானார் பெரியக்காவின் துணைவர். வேலைக்குச் செல்லும் உத்தேசம் எனக்கில்லை என்றான். அம்மாவுக்கு வருத்தமாக இருந்தது. அம்மாவிற்காக ஆறு மாதகாலம் பணியாற்றலாம் என எண்ணினான். ஆனால் அது ஒருவரின் வாழ்க்கையை வீணாக்கும் செயல் என்பதனால் அதனை அம்மாவிற்கு உணர்த்தினான். அம்மாவும் புரிந்து கொண்டாள்.

தனது எருமைப்பாலை பெறுமதி சேர்க்கப்பட்ட பொருட்களாக மாற்றுவதற்கான முயற்சியில் ஈடுபட்டான். அவனது பட்டமும் படிப்பும் நிறையவே துணை நின்றன. வைப்பகங்கள் நிதியுதவியளிக்க முந்தியடித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சின்னத்தம்பி பாற்பொருளகம்" எனும் தொழிற்சாலையின் வரவேற்பறையில் வரவேற்பாளராக சின்னக்கா பணியாற்றினாள். பெரியக்கா , அம்மா, அக்கா மகிழினி ஆகியோர் மேற்பார்வையாளர்கள். பதினாறு பேர் தொழிற்சாலைத் தொழிலாளர்கள்.

அத்தான் பொன்னுரங்கம் மாடுகளை மேய்ப்பார். ஞாயிறு அவருக்கு விடுப்பு. அன்று சந்திரகுலசிங்கம் மாடுகளை மேய்ப்பான்.

தொழிற்சாலையில் வண்டிச் செலுத்துநராக இருந்து உற்பத்திப் பொருட்களை சந்தைப் படுத்தி வந்த தருமேந்திரன் சின்னக்காவின் துணைவரானார்.

அக்கா மகிழினி பக்கத்து வீட்டு சனகனை விரும்பி அம்மாவின் விருப்பத்தினைப் பெற்று சனகனுக்கு துணைவியானாள்.

இருபத்தைந்து வயதில் சந்திரகுலசிங்கம் அருள்மணிக்கு துணைவரானான். இன்று அகவை இருபத்தொன்பதில் இரண்டு குழந்தைகளுக்கு தந்தை.

கடைக்குட்டி பல்கலைக்கழக படிப்பை முடித்துக் கணித ஆசிரியராக பிரபாகர் என்ற ஆசிரியர் ஒருவரை காதலித்துக் கொண்டிருக்கிறாள். அடுத்த ஆண்டு தமிழ்முறைப்படி திருமணம் நடப்பதற்கான ஏற்பாடுகள் நடந்துகொண்டிருக்கின்றன.

இவ்வாறான நிலையிலேதான் ஒரு ஞாயிற்றுக்கிழமை மாலை நேரத்தில் தன் குடும்பத்தின் பழைய நிலையை எண்ணி எண்ணி மகிழ்ந்தவனாக பட்டியை நோக்கி மாடுகளைத் துரத்திக்கொண்டு மெதுவாகச் சென்றுகொண்டிருக்கிறான் சந்திரகுலசிங்கம் எனும் வரலாற்று நாயகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் அமைதி கலைகிறது

தமிழரசி குடும்பத்தில் இரண்டாவதாகப் பிறந்த பெண்பிள்ளை. அகவை நாற்பத்தொன்று நடந்துகொண்டிருக்கிறது என பிறப்புச் சான்றிதழ் கூறுகிறது.

மூத்தவள் அக்கா. மூன்றாவது தம்பி. கடைசி தங்கை. அம்மா, அப்பா இதுதான் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் அவளது குடும்பம்.

இன்று வீட்டில் அம்மா, தமிழரசி இருவரும் தான். தமிழரசி பிரதேச செயலகத்தில் முகாமிப்பு உதவியாளராகச் சேர்ந்தாள்.

இருபது ஆண்டுகளில் அலுவலகத்தில் பணியாற்றியவாறே வெளிநிலையாக பட்டம் பெற்று இலங்கை நிருவாக சேவை தேர்வு எழுதி தேர்ச்சியடைந்து பணி உயர்வு பெற்று தற்போது பிரதேச செயலாளராகப் பணியாற்றுகிறாள்.

நடக்க முடியாத அம்மாவை ஒவ்வொருநாளும் வந்து பார்த்து பணிவிடைகள் செய்யும் தயாநிதி அன்று காலை வரவில்லை. தனக்கு உடனலமில்லை என ஏழரை மணியாகும் போதுதான் செல்லிடப்பேசி மூலமாக அறியத்தந்திருந்தாள்.

தனது காலைக் கடன்களை முடித்த தமிழரசி, அம்மாவிற்கு இஞ்சி போட்ட தேநீரைக் கொடுத்துக் கொண்டே "தயாநிதிக்கு உடல் சரியில்லையாம், இன்று வராமாட்டாளாம் என்ன செய்வதென்றே தெரியவில்லை. அலுவலகத்திலும் வேலை நிறைய கிடக்கு. இல்லாவிட்டால் விடுப்பு எடுக்கலாம்" என கூறினாள்.

"பிள்ள பக்கத்து வீட்டு தங்கராணியக் கொஞ்சம் கேட்டுப் பாரன்" அம்மாவின் கூற்று அந்நேரத்தில் அவள் மனதை மகிழ்ச்சிப்படுத்தியிருக்க வேண்டும். "ஓம் அவவ கேட்டுற்று வாறன்" என பக்கத்து வீட்டுக்கு விரைந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குப் பின்னாலிருந்த வேலிக்கம்பியின் கீழ்ப்பட்டுக் கம்பியை சற்றுக் கீழே அமர்த்திப் பிடித்து தலையை முன்னால் விட்டு உடல் முழுவதையும் மறுபுறத்திற்குச் சென்ற பின்னர் பிடித்திருந்த கம்பியிலிருந்து கையை எடுத்தவள் வேகமாக தங்கராணி வீட்டு முற்றத்திற்கு வந்தாள்.

தங்கராணி முற்றத்தின் ஓர் ஓரத்திலிருந்த நெல்லி மரத்தடியிலிருந்து வீட்டுப் பாத்திரங்களைப் தேய்த்துக் கொண்டிருந்தாள். வீட்டுக் குந்திலிருந்து மயில்வாகனம் தங்கராணியுடன் கதைத்துக் கொண்டிருந்தான்.

வீட்டுத் திண்ணையை குந்து என்றுதான் அவர்கள் அழைக்கிறார்கள்.

விரைவாகச் சென்ற தமிழரசி மயில்வாகனத்தைப் பார்த்தாள். வைத்த கண் வாங்காமல் தங்கராணியைப் பார்த்துக் கொண்டிருந்ததனைக் கண்டாள்.

தங்கராணியின் தொங்கல் சேலை சற்று சரிந்திருந்தது. அவளது மேல்சட்டை தளர்வாகி கீழிறிங்கி உயர்ந்த இடத்தில் இறுக்கமடைந்திருந்தது. அதனையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான் மயில்வாகனம்.

தமிழரசியைக் கண்டவுடன் அவனது பார்வை சட்டென அவ்விடத்தை விட்டகன்றது. அதனை தமிழரசி அவதானித்தாள். தங்கராணியும் அவதானித்தாள். மயில்வாகனத்தின் பார்வை தமிழரசியை என்னவோ செய்தது அந்தக் காலை வேளையிலும்.

வந்த கரணியத்தை தங்கராணியிடம் கூற 'தான் உதவுவதாக ஒத்தக்கொண்டாள் தங்கராணி'.

வீடு திரும்பிய தமிழரசி தனது பணிகளைக் கடகடவென செய்தாள். வீட்டு வேலைகளும் முடிந்துவிட வாகனம் வீட்டு வாசலில் நின்றது. அலுவலகம் சென்று விட்டாள்.

அலுவலக வேலைகளை விரைவாக செய்து கொண்டிருந்தாலும் காலையில் கண்ட மயில்வாகனத்தின் கண்கள் அவளது கண்களில் வந்து வந்து போனது. மனதை மீண்டும் மீண்டும் என்னவோ செய்துகொண்டிருந்தது.

பணிகளை செய்ய முடியாது ஒருவித தவிப்பு அவளின் மனதில் உருவாகியது. பணிகளை நிறுத்திவிட்டு அவளது இருப்பிடத்திற்கு அருகில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த மண்பானையில் இருந்த குளிரான தண்ணீரில் ஒரு குவளை குடித்தாள். இன்னுமொரு குவளையும் குடித்தாள்.

வந்து இருக்கையில் அமர்ந்தவள் கதவின் வெளியே நின்ற சிற்றூளியரை அழைத்து யாரையும் உள்ளே வர விடவேண்டாம் என உத்தரவிட்டாள்.

மேசையிலிருந்த தாள்களின் மேல் பாரத்திற்காக வைத்திருக்கும் பளிங்கு உருண்டையினை கையிலெடுத்து மேசை மீது போட்டிருந்த கண்ணாடி மீது சுழலவிட்டுக் கொண்டே தனது வாழ்நாளின் இருபதாண்டுகளை பின்நோக்கிப் பார்த்தாள்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழரசிக்கு பிரதேச செயலகத்தில் வேலை கிடைத்தது என்ற சேதியை வயலில் வேளைண்மைக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருக்கும் அப்பாவிற்கு தம்பி பிறழாநாவன் ஓடி வந்து கூறினான்.

மகிழ்ச்சியில் தத்தளித்த அப்பா கந்தையா மண்வெட்டியை வயலில் இருக்கும் கிடுகினால் வேயப்பட்ட குடிசையினுள் வைத்த பின்னர் பக்கத்து வயல் உரிமையாளரான சந்திரனிடம் முதலாவதாக மகிழ்ச்சிச் செய்தியைக் கூறிவிட்டு மகனையும் அழைத்துக்கொண்டு வீட்டுக்கு விரைந்தார்.

கோணேசர் கோவிலுக்கு அண்மையில் இருந்த கடையில் இனிப்பு மிட்டாய்களை கடனுக்கு வாங்கி உமலில் போட்டுக்கொண்டு வீதிக்கு மறு பக்கத்தில் இருந்த ஈருருளியை எடுப்பதற்காக அவசரத்தில் சென்றவரை கிண்ணியாவிலிருந்து கந்தளாய் நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்த பேருந்து மோதிவிட "ஐயோ அப்பா" என மகன் அலற அடிபட்டு தெருவில் குருதிதோயக் கிடந்தவரை கடையில் நின்றவர்கள் தூக்கிக் கொண்டு அருகில் இருந்த தம்பலகமம் சுற்றயல்கூறு மருத்துவமனைக்கு ஓட மருத்துவர் இப்றாகிம் உடனடியாக திருக்கோணமலை பெரிய மருத்தவமனைக்கு அனுப்பி வைத்தார்.

பாலம்போட்டாறை தாண்டும்போது மூச்சு அந்தா இந்தா என்ற நிலையிருக்க நோயாளர் அதிவிரைவு வண்டி பேரிடர் நேர ஒலியை எழுப்பி தன் முழு வேகத்தில் சென்றும் பலன் கிடைக்கவில்லை.

திருக்கோணமலை மருத்துவமனைக்கு கொண்டு சென்று தள்ளுவண்டியில் தூக்கி வைக்கும் போதே கந்தையா அண்ணையின் உயிர் அவரது உடலில் இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்வியுற்ற அம்மா தங்கரெத்தினம் அழுதழுது திருக்கோணமலை மருத்துவ மனைக்குச் சென்றவள் உயிரற்ற கந்தையா அண்ணையின் உடலைப் பார்த்தவுடன் என்ன செய்வதென்றே தெரியாது மாடிமேல் ஏறி கீழே பாய்ந்துவிட்டாள்.

போதாத காலத்திற்கு கீழ் தளத்திலே சிற்றூழியர் ஒருவர் தள்ளு வண்டியொன்றினை தள்ளி வந்து கொண்டிருந்தார். தங்கரெத்தினம் கீழே விழும்போது சரியாக தள்ளுவண்டியில் விழுந்து அதிலிருந்தும் தரையிலே விழுந்தவளுக்கு இரண்டு கால்களும் உடைந்து விட்டது.

பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பது தமிழரசி குடும்பத்திற்கு அன்று சரியாகவே பொருந்தியது. மகிழ்சியான நாளை குடும்பமே கண்ணீருடன் கழிக்க வேண்டியதாயிற்று.

அம்மாவை மருத்துவமனையில் அதிதீவிர மருத்துவப் பிரிவில் சேர்த்துவிட்டு அப்பாவைக் கொண்டு போய் புதுக்குடியிருப்பு இடுகாட்டில் புதைத்தார்கள்.

அக்காவின் சமையல் தம்பி தங்கையின் பள்ளிக்கூடப் படிப்பு தமிழரசியின் பிரதேச செயலக பணி என அவர்களது வாழ்க்கை ஓடிக்கொண்டிருந்தது.

அப்பா சாவடைந்து மூன்றாண்டுகள் ஓடிக் கடந்து விட்டன.

அம்மா இரண்டு கால்களும் இழந்த நிலையில் படுத்த படுக்கை.

அம்மாவிற்கான பணிவிடைகளை காலையில் அக்காவும் மாலையில் தமிழரசியும் செய்தார்கள். நாள் போகுதோ இல்லையோ அம்மாவின் கண்ணீர் மட்டும் ஒவ்வொரு நாளும் கண்களால் வழிந்து கொண்டு தான் இருந்தது.

மகனைத் தவிர பெண் பிள்ளைகள் அம்மாவை அருகில் இருந்து அன்பாகக் கவனித்துக் கொண்டார்கள்.

அம்மாவிற்குக் கால் நடக்க முடியாது என்பதைத் தவிர எந்தக் குறைகளையும் தமிழரசியும் சகோதரிகளும் வைக்கவில்லை. அந்தக் கவனிப்பே அம்மாவை மேலும் சங்கடமாக்கும்.

தனது மோட்டுத்தனமான செயலை எண்ணி நாளும் வருந்துவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்தரத் தேர்வு எழுதிய இரண்டு மாதங்கள் கடந்த நிலையில் பிறழாநாவன் தன்னுடன்படித்த கள்ளிமேட்டுக் கனகசிங்கத்தாரின் மகளை கூட்டிக் கொண்டு ஓடிவிட்டானாம் என்ற தகவல் பிரதேச செயலகத்தில் பணியிலிருக்கும் போது தமிழரசிக்குக் கிடைத்தது.

பிரதேச செயலாளரிடம் சென்று அரைநாள் விடுப்பு எடுத்துக் கொண்டு வீட்டுக்கு வந்த தமிழரசி சகோதரிகளிடம் விபரம் தந்தாள்.

அம்மாவுடன் சகோதரிகள் மூவரும் சேர்ந்து அழுதார்கள்.

ஒரேயொரு ஆண்பிள்ளை. தங்களுடன் ஒத்தாசையாக இருந்து தங்களைக் கரை சேர்ப்பான் என நம்பியிருந்த தம்பி தங்களை விட்டுப் போனாலும் பரவாயில்லை. ஓடிப்போய்விட்டான் என்பதனை குடும்பத்தில் எவராலும் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

பிரதேச செயலாளரிடம் நடந்தவைகளைக் கூறி விடுப்பினை மேலும் இரு நாட்கள் கூட்டிக் கேட்க மறுப்பின்றி விடுப்புக் கிடைத்தது. காரி(சனி), ஞாயிறு போக திங்கள் பணிக்குப் போனாள்.

தம்பி இல்லை என்றாகி விட்டது. எங்கு இருவரும் போனார்கள் என்ற தகவலும் தெரியவில்லை. அறியவும் முயலவில்லை அவர்கள்.

கனகசிங்கத்தார் வீட்டாருடன் வந்து தமிழரசிக்கு வாயால் கூற முடியாதளவிற்கு வார்த்தைகளால் திட்டி விட்டுப் போயிருந்தார்.

தம்பியால் தமிழரசி குடும்பத்திற்கு கனகசிங்கத்தாரின் திட்டுக்களைத் தவிர வேறு எதுவுமே கிடைக்கவில்லை.

அக்கா, தமிழ்ச்செல்வியிலும் இரு வயது மூத்தவள். இருபத்தைந்து வயதாகி விட்டது. அக்காவிற்கு யாரையாவது பார்த்துக் கட்டிவைக்க வேண்டும் என்பது தமிழரசியின் எண்ணம். தனக்குத் தெரிந்தவர்களிடம் சொல்லி வைத்திருந்தாள்.

தங்கை தமிழ்நாயகிக்கு பத்தொன்பது அகவை நடக்கிறது. உயர்தரம் எழுதிவிட்டு பெறுபேற்றுக்காகக் காத்திருக்கிறாள். "குஞ்சுப் பிள்ள நீயும் ஆரயாவது பாத்து வச்சிருந்தா. சொல்லிப்போடு. புறகு குஞ்சுப்புள்ள ஓடிற்றாள் எண்டு யாராவது சொல்ல நாங்க கேக்கிற நிலக்கு வச்சிராதடியம்மா" அக்கா தமிழ்ச்செல்வி கூற "சும்மா போக்கா, அண்ணாச்சி செய்தமாரி நான் செய்ய மாட்டன். தமிழரசி அக்கா படுற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்ட நினைக்க எப்பிடித்தான் அண்ணாச்சிக்கு ஓடுறதுக்கு மனசு வந்துச்சோ தெரியாது" என்ற பதில் அக்காமார் இருவருக்கும் குஞ்சுத் தங்கச்சிமேல் நம்பிக்கையை வரவைத்திருந்தது.

அப்ப தங்கைக்கும் தான் தான் மாப்பிள்ளை பார்க்க வேண்டும் என்பதனை உணர்ந்து கொண்டாள்.

"நாவலப்பிட்டியில் உள்ள ஒரு பெடியன் இருக்கிறானாம். இப்ப திருக்கோணமலையில தான் வேலயாம். ஏதோ நிறுவனத்தில விற்பன முகவராக இருக்கிறானாம்" என்ற தகவல் தன்னுடன் பணியாற்றும் சக பணியாளர் கூறும்போது அக்காவிற்கு வயது முப்பதாகியிருந்தது.

அக்காவிடம் தமிழரசி கதைத்தாள். "சீதனம் பெரிதாக எதுவுமில்லை. திருக்கோணமலையில இல்லாட்டி நாவலப்பிட்டியில ஒரு வீடு மட்டும் போதுமாம்" அக்கா கவலையடைந்தாள். சீதனம் பெரிதாக இல்லை. ஆனால் திருக்கோணமலையில் வீடு வேணுமாம் மனதில் எண்ணிக் கொண்டே "நடக்கிறதக் கதயிடியம்மா" தமிழ்செல்வி கூற "இல்லயக்கா நான் வீடு ஒண்டு பாத்திற்றன். இருபது இலட்சம் சொல்றாங்க. அலுவலகத்தில கடன் எடுக்கலாம் . நீ ஓம் எண்டா செய்வம். வயசும் போகுது தானே அக்கா. வேணாம் எண்டு மட்டும் சொல்லிராத. நம்மட பக்கம் இனிப் பாக்க ஏலா அக்கா. நிலமயப் புரிஞ்சு கொள் அக்கா"

திருமணமாகிப் போன அக்கா ஆண்டில் இரு தடவைகள் அம்மாவையும் உடன்பிறப்புக்களையும் பார்க்க வருவாள்.

"அம்மா அம்மா " என அலுவலக சிற்றூழியர் அழைக்க திடுக்கிட்டு மூடியிருந்த கண்களைத் திறந்து தன்னிலைக்கு வந்தாள்.

திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் வந்திருக்கிறார் என்றான் அலுவலக சிற்றூழியன்.

'வரச்சொல்' என கூறிவிட்டு அலுவலகப் பணிகளில் பரபரப்பானாள்.

பணி முடிந்து வீடு வந்தவள் குழியலறை சென்று நன்றாகக் குளித்தாள். குளிரான நீர் இதமாக இருந்தது. ராணி சந்தன சவர்க்காரத்தின் நறுமணம் மனதிற்கு மேலும் ஆறதலளித்தது.

குளித்து வந்தவளுக்கு தமிழ்நாயகியின் சூடான பால்மா கலக்காத தேநீர் என்றுமில்லாதவாறு சுவையாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனது மனதை முதன்முதலாக தொலைத்த நாள் அது. மனது ஊசலாடிய நாளும் அதுதான்.

மேல்மாடிக்குச் சென்று உயரப்பார் என்ற குறுங்கதைப் பொத்தகத்தை திறந்து தட்டினாள். 'உயரப்பார்' என்ற குறுங்கதையைப் படித்தாள்.

அந்தக் கதையை அவள் பலமுறை படித்திருக்கிறாள். எனினும் அன்றும் படித்தாள். அன்றும் அந்தக் கதை அவளது மனதுக்கு புதுத் தெம்பை ஊட்டியதாக உணர்ந்தாள்.

மேல்மாடி கட்டுவதற்காக எடுத்த கடன் முடிவடைந்த போது அக்காவின் திருமணத்திற்கான கடனை அலுவலகத்தில் பெற்றுக் கொண்டாள்.

வாழ்நாள் முழுவதும் கடனாளியாகத்தான் இருப்போமோ தெரியாது என மனதில் அடிக்கடி நினைத்துக்கொள்வாள்.

மேல்மாடியில் நின்று கொண்டே தங்கராணியின் வீட்டை நோக்கினாள். முற்றத்து வெளிச்சம் தெரிந்தது. வேறு எதுவும் தெரியவில்லை. தமிழரசி மனது மட்டும் ஏதோ புரியாத ஏக்கம் ஏற்பட்டிருப்பதனை சொல்லத் தெரியாமல் தவிப்பதை உணர்ந்தாள்.

இரண்டு கிழமை சென்றிருக்கும். மேல்மாடியில் சாய்மனைக் கதிரையில் இருந்து அரைவாசி படுத்தவாறே இரவு ஒன்பது மணிக்கு வானொலியில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனச் செய்தியினைக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

செய்தி அரைவாசி போயிருக்கும் தங்கராணியின் வீட்டின் பின் பக்கத்தில் மின்சூழ் ஒளி தெரிந்தது. உற்றுப் பார்த்தாள் தமிழரசி. வெளிச்சம் தெரியவில்லை. பார்த்துக் கொண்டேயிருந்தாள். பத்து நிமையங்கள் சென்றிருக்கும் தங்கராணியின் வீட்டின் மங்கலான வெளிச்சத்தில் இரு உருவங்கள் செல்வதைக் கண்டாள்.

கண்ணைக் கசக்கிவிட்டுப் பார்த்தாள். மயில்வாகனம் போல்தான் தெரிந்தது அவளுக்கு. அப்ப மற்றது தங்கராணியா என்ற ஐயம் தமிழரசிக்கு மனதில் தோன்றியது.

தமிழரசியின் மனது சஞ்சலப்பட்டது. எழுந்து சென்று குழியலறையில் நன்றாக தலையில் நீர் படும்படியாக முழுகினாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னடி சாப்பிட்ட பிறகு குளிக்கிறா பிள்ள" அம்மாவின் சத்தம் அவள் காதுகளில் கேட்டாலும் பதில் சொல்லும் நிலையில் தமிழரசி இருக்கவில்லை.

கட்டிலில் படுத்தவளுக்கு நித்திரை வரவில்லை.

தனது வாழ்க்கையை எண்ணிப் பார்த்தாள். தன் குடும்பத்திற்காக தன்னையே ஒப்படைத்தவளை தன்குடும்பத்தில் யாருமே எண்ணிப் பார்க்கவில்லையே என எண்ணிக் கவலைப்பட்டாள்.

தங்கை தமிழ்நாயகி பல்கலைக்கழகம் சென்றவள் அங்கு மட்டக்களப்புப் பெடியன் ஒருவன் விரும்புவதாக கூறுகிறான் என்பதை அறிந்து அவனையே திருமணம் முடித்துக் கொடுத்தாள் தமிழரசி.

தமிழ்நாயகியை பிடித்துப்போன காரணியம் வேடிக்கையானது. தமிழ்நாயகியின் குடும்பத்தில் உள்ள பெண்களின் பெயர்கள் எல்லாமே தமிழ் என வருகிறதாம். அதனால் நல்ல குடும்பமாக இருப்பார்களாம்.

என்ன சொன்னாலும் தன் குடும்பப் பொறுப்பிலிருந்து தமிழரசி பிறழவில்லை. மாப்பிள்ளையை விசாரித்தறிந்தாள். நல்லவர்கள் என்பது பதிலாகக் கிடைக்க தமிழ்நாயகிக்கும் செய்ய வேண்டியதையெல்லாம் செய்து திருமணமும் செய்துவைத்தாள்.

பேச்சுக்குக் கூட அக்காவிடம் "நீ மூத்தவள் இருக்கக்கொள்ள நான் எப்பிடி அக்கா திருமணம் முடிக்கிற" என்று கேட்கவில்லை என்பது தமிழரசிக்கு உள்ளூர கவலைதான்.

தமிழ்நாயகி திருமணம் ஆகி ஆறு ஆண்டுகள் கடந்து விட்டன. தமிழ்நாயகி திருமணம் முடித்தவுடன் அம்மாவிற்குப் பணிவிடை செய்வதற்காக தயாநிதியை தேடியெடுத்திருந்தாள் தமிழரசி.

தமிழரசி அலுவலகத்தினால் வரும்வரை தயாநிதி இருந்து அம்மாவிற்குத் தேவையானதை மனம் கோணாமல் இதுநாள் வரை செய்து வந்திருக்கிறாள்.

அப்பா சாவடைந்து இரண்டு ஆண்டுகளில் மேகநாதன் தமிழரசியுடன் பிரதேச செயலகத்தில் ஒன்றாகப் பணியாற்றியவன். பட்டிமேட்டைச் சேர்ந்தவன். நல்ல பண்பு. அலுவலகத்திற்கு வருகின்றவர்களோடு அன்பாகப் பேசி வருபவர்களுக்குத் தேவையானதை செய்து கொடுத்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் அலுவலகத்தில் அநேகமானவர்களுக்கு அவனைப் பிடிக்கும். ஏதாவது நிகழ்வுகள் செய்வதென்றாலும் மேகநாதனிடமே பொறுப்புகளை பிரதேச செயலாளர் ஒப்படைப்பது வழக்கம். கொடுக்கப்படும் பொறுப்புகளை திறமாகச் செய்து முடிப்பான்.

தமிழரசியை விட இரண்டு அகவை கூடியவன். கம்பீரமான தோற்றமுள்ளவன். எந்தப் பெண்ணும் அவன் தோற்றத்தில் மயங்குவார்கள். தமிழரசி மட்டும்தான் மயங்காமலிருந்த பெண்.

மேகநாதன் பல தடைவைகள் முயன்றும் பலனில்லாது போயிற்று. தன் குடும்பநிலையே தமிழரசிக்கு கண்முன்னால் இருந்த பணிகள். அதனைத் தவிர வேறு எதனையும் அவள் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. ஏன் அவள் தன்னைப் பற்றிக் கூட ஒரு நாளும் எண்ணியதே கிடையாது.

பிரதேச செயலாளரை அணுகிக்கூட மேகநாதன் உதவி கோரியும் எதுவித பலனும் கிடைக்காமல் போக காத்திருந்து விட்டு மூன்றாண்டுகளில் மேகநாதன் தன் வீட்டாரின் விருப்பப்படி திருமணம் செய்து இன்று உயர்தரத்தில் படிக்கின்ற பிள்ளைகளுக்கு அப்பாவாக இருக்கிறான்.

ஒவ்வொரு நிகழ்வுகளும் தன் எண்ணத்தில் ஒவ்வொன்றாக வரத் தொடங்கின.

'ஏன் இப்படி' என சிந்தித்தாள்.

தற்போதைய தன் மனநிலைக்கும் தனதுமனது கட்டுக்கடங்காது அலைபாய்வதற்கும் காரணியம் மயில்வாகனத்தின் கண்களின் பார்வைதான் என்பதனை ஏற்றுக்கொண்டாள்.

நெஞ்சம் மேலும் கீழும் ஏறி ஏறி இறங்கியது. வெளியே கூறமுடியாத சித்திரவதை என்று சொல்வார்களே, அதனை அவளும் அன்று அநுபவித்தாள்.

தமிழரசி தன் உடலைத் தானே கர்வத்துடன் பார்த்து மகிழ்ந்தாள்.

உண்மையில் தமிழரசி அழகானவள்தான். மாநிறம், ஐந்தடி நான்கு அங்குலம் இருக்கும் உயரம். குழி விழுந்த கன்னம். பார்ப்பவர்களைக் கவர்ந்திழுக்கும் கண்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலது கன்னத்திலே கண்ணுக்கு இரண்டு அங்குலம் கீழாக சிறியதொரு மச்சம். அது அவள் அழகை முகத்தில் கூட்டியிருந்தது. கம்பர் இருந்திருந்தால் இடையே இல்லாத பெண் உலகில் உண்டென்றால் அது தமிழரசி ஒருவளே என பா இசைத்திருப்பார். அத்துடன் சிறிய மெல்லிய பாதங்கள்.

கலீர் என்ற எந்நேரமும் குலையாத சிரிப்பு. எவரிடமும் சினந்து பேசாத பொறுமை. சுறுசுறுப்பான நடை.

இப்படி தன்னைத்தானே நினைத்து மகிழ்ந்தாள்.

அட நம்மை நாமே இழந்துதான் விட்டோம் என தனது மனதுள் அமைதிப்படுத்திக் கொண்டாள்.

எவ்வளவு உயர் அலுவலராக இருந்தாலும் தானும் ஒரு மனிதர்தானே. அதிலும் ஒரு பெண்தானே. என்னை என் வீட்டார்தான் பொருட்படுத்தவில்லை.

ஆனால் மேகநாதன் அலைந்து அலைந்து திரிந்தானே. நான்தானே கணக்கெடுக்காமல் இருந்துவிட்டேன். இப்ப யாரையும் குறை சொல்வதில் நேர்மையிருப்பதாக அவளால் நினைக்க முடியவில்லை.

தனது உணர்ச்சிகளை நாற்பத்தோர் ஆண்டுகள் அடக்கி ஆண்டுதானே இருக்கிறேன்.

ஏன் இப்ப இப்படி என்னால் அடக்கமுடியாமல் தவிக்கிறேன். விடைகளைக் கண்டுபிடிக்க அவளால் முடியவில்லை.

பொத்தகங்களை எடுத்துப் பிரட்டினாலும் இரண்டு பக்கங்களுக்கு மேல் படிக்க முடிவதில்லை. இப்படியே போனால் தனக்கு மனம் ஏதாவதாகிவிடுமோ என்றும் அச்சப்பட்டிருக்கிறாள்.

மயில்வாகனத்தின் கண்களை தங்கராணியின் முற்றத்தில் கண்டு நான்கரை மாதங்கள் கடந்திருக்கும்.

பிரதேச செயலகத்தில் தன் அலுவலகத்தில் கடமையில் இருக்கின்ற போது தன் அலுவலக அறையில் பூட்டப்பட்டிருக்கும் ஒளிப்படக் கருவியின் நேரடிப்படங்களைப் பார்த்தவள் மயில்வாகனம் காணிக் கிளையில் இருப்பதைப் பார்த்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலுவலக சிற்றூழியரை அழைத்தவள் மயில்வாகனத்தை அழைத்து வரும்படி பணித்தாள்.

சிறிது நேரத்தில் மயில்வாகனம் "அம்மா" என அழைத்த போது நிமிர்ந்தாள்.

அதே கண்கள் ஆனால் பார்வை வேறு. இருக்கச் சொல்லவில்லை.

"என்னத்துக்கு வந்தனீங்க?" தமிழரசி கேட்க

"என்ர காணிர ஒப்பத்த உறுதியா மாத்த விண்ணப்பம் குடுக்க வந்தனான் அம்மா" பதிலளித்தாள் மயில்வாகனம்.

"காணி உத்தியோகத்தர் மயூரனை அழைத்து "இவற்ற இந்த விண்ணப்பத்த உடனே செய்து குடுங்க" பணித்தாள்.

மயூரன் பின்னால் புறப்பட ஆயத்தமான மயில்வாகனத்தை "கொஞ்சம் நில்லுங்க மயில்வாகனம்" எனத் தடுத்தாள்.

மயூரன் அவனது கிளைக்குச் சென்றான்.

மயில்வாகனம் நின்றான்.

"இப்ப வேல ஏதாச்சும் செய்யிறீங்களா" தமிழரசி.

"இல்லம்மா, இவயும் சுகமில்லாம செத்தப்பிறகு சரியான சிக்கல் எனக்கு. வீட்ட சமைக்கனும். வேலயும் செய்யனும். தொழிலும் சரியா கிடைக்கிற இல்ல. மகனும் ஆறாம் வகுப்புப் படிக்கிறான். எங்கயாச்சும் பின்னேரத்தில செய்யிற மாரி வேல இருந்தா சொல்லுங்க அம்மா" என்றான்.

அக்கறையுடன் கேட்டதை எண்ணி மனதார மகிழ்ந்தான். நன்றியும் வாயால் கூறியும் கொண்டான்.

"எங்கட வீட்ட வேல செய்யிற தயாநிதிக்கு கொஞ்சம் சுகமில்ல. வீட்டத் துடைச்சு கூட்டுறது அவக்கு ஏலாம இருக்கு. பின்னேரத்தில வந்து அந்த வேலகளச் செய்ய ஏலுமா உங்களுக்கு" கூறிவிட்டு பதிலை எதிர்பார்த்தாள்.

"ஓம் அம்மா. அப்பிடியெண்டா எனக்கும் எளிதா இருக்கும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வீட்டுக்குப் பின்னால இருக்கிற இடத்தில தோட்டமும் செய்யணும்" என்றாள்.

"சரியம்மா. நான் செய்வன்" சொன்னான்.

"வீட்டுத் தோட்ட மரக்கறியால வாற வருமானமும் உங்களுக்குத் தான்" என்றாள்.

சிரிப்பால் மகிழ்வை வெளிப்படுத்தினான்.

"நாளயில இருந்து வாறீங்களா வேலைக்கு"

'ஓம்' என தலையாட்டினான்.

"போய் உறுதி அலுவல பாருங்க" என அனுப்பி வைத்தவளின் மனதில் ஏனோ பட்டாம்பூச்சிகள் சுற்றிச் சுற்றிப் பறந்தன.

அடுத்தநாள் காரி(சனி)க்கிழமை. வேலைக்குப் போகவில்லை. தயாநிதியுடன் சேர்ந்து வீட்டு சமையல் வேலைகள் செய்து முடித்து பகல் சாப்பாடு சாப்பிட்டுவிட்டு தொலைக்காட்சியில் துலாபாரம் திரைப்படத்தினைப் பார்த்துக் கொண்டிருந்தாள் தமிழரசி.

"அம்மா அம்மா" என மயில்வாகனத்தின் குரல் கேட்க நாற்காலியிலிருந்து எழுந்து வாசல்வரை சென்று வரவேற்றாள் தமிழரசி.

அம்மாவிற்கு வியப்பாக இருந்தது. ஒரு கூலி வேலைக்காரனை வாசல்வரைக்கும் போய் வரவேற்கிறாளே மகள் என்பதே வியப்புக்கான கரணியம்.

மகள் எல்லோரையும் மதிக்கும் பண்பு உள்ளவள்தானே என தனக்குத் தானே விடையும் தேடிக்கொண்டாள்.

மயில்வாகனம் செய்ய வேண்டிய வேலைகளைச் சொல்லிக் கொடுத்து வேலை செய்ய வேண்டிய இடங்களையும் காண்பித்தாள்.

தயாநிதியிடம் விபரமாகச் சொன்னாள். தயாநிதி தமிழரசிக்கு நன்றி சொன்னாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மையில எனக்கு ஏலாது தான் அம்மா. எப்பிடி சொல்ற எண்டுதான் இருந்தனான். சமைக்கிறது, அம்மாவ பாக்கிறது எண்டா ஏலும்." தயாநிதி மனதார நன்றியுடன் கூறினாள்.

"அத தெரிஞ்சுதான் மயில்வாகனத்த வேலைக்கு வரச்சொன்னனான். அவர் பின்னேரத்திலதான் வருவார். அவர் வந்து வீடெல்லாம் கூட்டுவார். நீங்க அதல்லாம் செய்யத் தேவல்ல சரியா"

"சரிம்மா"

பகல் உணவுடன் தயாநிதியை அவளது வீட்டுக்குப் போகச் சொல்லி விட்டாள்.

எனினும் தயாநிதிக்கான கொடுப்பனவில் குறைப்புச் செய்யமாட்டேன் என உறுதியும் வழங்கியதும் இரட்டிப்பு மகிழ்ச்சியாக வீட்டுக்குப் புறப்பட்டாள்.

மாலை ஐந்து மணியளவில் மயில்வாகனத்திற்கு தேநீர் போட்டுக் கொடுத்தாள் தமிழரசி.

ஆறரை மணியளவில் வீட்டிற்குப் புறப்பட அணியமானான் மயில்வாகனம். அறுநூறு உருபா பணத்தை அவனிடம் நீட்டினாள்.

வேலைக்கு வந்த முதல்நாளிலேயே அரைநேரத்திற்கு மேலான கொடுப்பனவு என மனதில் நினைத்துக் கொண்டு தமிழரசி கொடுத்த பணத்தைப் பெற்றுக் கொண்டு வீடு திரும்பியிருந்தான் மயில்வாகனம்.

ஓவ்வொரு நாளும் மயில்வாகனம் பகல் மூன்று மணிக்கு வந்து ஆறரை, ஏழு, ஏழரை என ஆகி தற்போது எட்டு மணிவரை வேலை செய்வான். ஆயிரம் உருபா கொடுப்பனவாகக் கிடைத்து வந்தது.

மயில்வாகனம் வேலை செய்கின்ற போது மேல்மாடியிலிருந்து அவன் வேலை செய்வதைப் பார்ப்பது போல் அவனைப் பார்த்துக் கொண்டிருப்பாள் தமிழரசி. அது அவளுக்கு இன்பமாக இருந்தது. மனது மகிழ்சியாய் இருப்பதாக ஓர் உணர்வு அவளுள்.

தமிழரசி தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறாள் என்பதனை பல தடவைகள் மயில்வாகனமும் கண்டிருக்கிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கராணியில் முற்றத்தில் அவர்கள் இருவரது பார்வைகளும் மோதிக்கொண்டதை மயில்வாகனமும் நினைத்துப் பார்த்துக் கொள்வான்.

மயில்வாகனம் நல்ல வாட்டசாட்டமான ஆள். நாற்பத்தேழு அகவை நடந்துகொண்டிருக்கிறது. ஐந்தாண்டுகளுக்கு முன்பு அவனது துணைவி புற்றுநோயினால் சாவடைந்து விட்டாள். தன் மகனுக்காக வாழ்வதாக கூறிக்கொள்வான்.

பணம் சிக்கலாக இருந்தது. கடந்த இரு வாரங்களாக அவனுக்கு பணச் சிக்கல் தமிழரசி மூலமாக தீர்த்து வைக்கப்பட்டிருக்கிறது.

தமிழரசியின் ஏக்கம் அதிகரிக்கத் தொடங்கியிருந்தது.

இரண்டு கிழமை சமையலுக்குத் தேவையான பொருட்களை மொத்தமாக வாங்கி வைப்பது தமிழரசியின் வழக்கம்.

அன்று காரி(சனி)க்கிழமை. ஏழுமணியான போது " மயில்வாகனம் கடைக்குப் போய் சாமான்கள வாங்கித் தருவீங்களா. இண்டைக்கு வாங்க மறந்திற்றன். இனி வாகனத்த கூப்பிடுறது சரியில்லத்தானே" கெஞ்சுவது போல் தமிழரசி கேட்க, 'சரியம்மா" நான் வீட்டபோய் குளிச்சிற்று வாறன்" என பதிலளித்தவன் வீட்டிற்குப் பறப்பட்டான்.

அரை மணி நேரத்தில் குளித்துவிட்டு தோய்த்த கைலியையும் உடுத்தி நெற்றிநிறைய திருநீற்றுப் பூச்சுடன்வந்து "அம்மா அம்மா"என அழைத்தான்.

"மேல இருக்கிறாள் தம்பி. மேல போயப் பாருங்க" என்றாள் தமிழரசியின் அம்மா.

மேலே போனவன் வழக்கமாக இருக்கும் இடத்தில் தமிழரசியைக் காணவில்லை. மேல் மாடியிலுள்ள அறை திறந்திருந்தது. எட்டிப் பார்த்தான். கட்டிலில் கண்களை மூடி உறங்கிக் கொண்டிருந்தாள் தமிழரசி. "அம்மா அம்மா என அழைத்தான். அவள் எழவில்லை. நித்திரையா அல்லது வேறு ஏதாவது நடந்துவிட்டதா என சற்றுப் பயந்தவனாக அறையினுள் மெதுவாக காலடியெடுத்து வைத்தான்.

அப்போதும் "அம்மா அம்மா" என அழைத்தவாறே உள்ளே சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழரசி படுத்திருந்த கட்டிலின் அருகே மயில்வாகனம் வந்தான். அருகில் வந்தவுடன் சட்டென எழுந்த தமிழரசி, மயில்வாகனம் சற்றும் எதிர்பாராத விதத்தில் அறையின் கதவின் தாழ்ப்பாளைப் பூட்டினாள்..........

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை விடுமுறை நாளென்பதனால் தமிழரசி வேலைக்கு போயிருக்கவில்லை.

பகல் சாப்பாடு முடிந்ததும் தயாநிதி வீட்டிற்குப் புறப்பட்டு விட்டாள். அம்மாவிற்குச் சாப்பாடு கொடுத்துவிட்டு மண்டபத்தில் இருந்த நாற்காலியில் அமர்ந்திருந்து பொத்தகமொன்றை நீண்ட நாள்களின் பின்னர் எதுவித சலனமுமின்றி வாசித்துக் கொண்டிருந்தாள் தமிழரசி.

சரியாக மூன்று மணிக்கு வேலைக்கு மயில்வாகனம் வந்தான். கதவருகில் நின்று "தமிழரசி தமிழரசி" என அழைத்தான்.

"அம்மா அம்மா" என அழைக்கும் மயில்வாகனம் இன்று தன்னைப் பெயர் சொல்லி அழைக்கிறான் என வியப்பாகப் பார்த்தாள்.

மயில்வாகனத்தின் அழைப்பு ஒரு பக்கமாகச் சரிந்து ஒருக்களித்துப் படுத்திருந்த தமிழரசியின் அம்மாவின் ஓரக்கண்ணிலும் நீரைக் கசிய வைத்தது.

அம்மாவின் அந்தக் கண்ணீர் ஆயிரம் கதைகளைக் கூறி நின்றது.

"தனது இயலாமையை எண்ணிய வருத்தக் கண்ணீரா?"

"தன்னால் தனது பிள்ளை பட்ட, படுகின்ற வேதனையால் வந்த வேதனைக் கண்ணீரா?"

"தனது வாழ்க்கையை வீணாக்கியவள் நேற்று மகிழ்வாய் இருந்ததனால் வந்த மகிழ்ச்சிக் கண்ணீரா?."

"தன்னால்தானே தனது மகள் இப்படியெல்லாம் வேதனைக்குள்ளானாள் என எண்ணிய இயலாமைக் கண்ணீரா?..."

என்பதெல்லாம் தமிழரசியின் அம்மா சின்னத்தங்கம் மட்டும் தான் அறிவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலக்கமும் தெளிவும்

தெருவில் உள்ள பள்ளங்களில் நேற்றுப் பெய்த கலங்கிய மழைநீர் நிரம்பியே கிடந்தது. பெயருக்குத்தான் தார்த்தெரு.

ஊரில் இருக்கின்ற ஒன்றரைக் கிலோமீற்றர் தார்த்தெருவை பள்ளம் மேடெல்லாம் ஏற இறங்கி உந்துருளியில் கடந்து செல்வதற்கு ஏறத்தாள ஐந்து நிமையங்களாவது எடுக்கும். மகிழ்வுந்து என்றால் பதினைந்து நிமையங்கள் ஆகும். ஈருருளியில் செல்பவர்கள் உந்துருளியை முந்திச் செல்வது தான் ஊரில் எல்லாருக்கும் தெரிந்த உண்மை.

வீட்டிற்கு ஏதாவது மளிகைச் சாமான்கள் தேவையென்றால் யாரும் உந்துருளியில் செல்வதில்லை. ஈருருளியிலேதான் சென்று வாங்கி வருவார்கள். விரைவாக சென்று வாங்கி வருவதைவிட மன உழைச்சலில் இருந்தாவது தப்பிவிடலாம் என்பதே முக்கிய காரணியம்.

சேரலாதன் உந்துருளியை ஆமை வேகத்தில் பள்ளங்களில் விழுந்திடாதவாறு மெதுவாக தெருவின் ஓர் எல்லையில் இருந்து அடுத்த எல்லை வரை குறுக்காக வெட்டி வெட்டி செலுத்திக் கொண்டிருந்தான்.

இரண்டு நாள்களுக்கு முன்பு நகருக்குச் சென்று உந்துருளியை முழுமையாக கழுவி எண்ணெயும் போட்டு வந்தவன். பார்ப்பதற்குப் புதியது போன்றே இருந்தது. மழை வருமென்று தெரிந்திருந்தால் இன்னும் சில நாள்களின் பின்னர் கழுவியிருப்பான்.

ஆங்கிலேயர் காலத்தில போடப்பட்ட தெரு இன்னும் போடப்படவில்லையென்று கூறினால் யாரும் நம்பவா போறாங்க? ஆனால் அதுதான் உண்மை.

இப்படியான ஊர்களும் நம்நாட்டில் இருக்கின்றன என்பதனை எண்ணி எண்ணி எத்தனை தடைவை சேரலாதன் பெருமூச்சு விட்டிருப்பான்.

ஊரில் நடைபெறுகின்ற பொது நிகழ்வுகள் எதிலுமே சேரலாதன் கலந்து கொள்வதில்லை. எதற்குத் தேவையில்லாத வேலை என்பதே அவனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைப்பாடு. ஊரில் பொது வேலைகள் செய்பவர்களை யாரும் நன்றாகச் சொல்லி அவன் கேள்விப்பட்டதேயில்லை. நமது நேரத்தையும் செலவழித்து உழைப்பினையும் வீணாக்கி ஊருக்குச் செய்வதால் கெட்டபெயரைத் தவிர எஞ்சுவது எதுவுமில்லை என்ற எண்ணம் அவன் மனதின் அடியில் ஆழமாகப் பதிந்திருக்கிறது. இதனால் அவன் ஊரில் என்ன வேலை என்றாலும் போகமாட்டான். ஊரில் உள்ள முக்கியமானவர்கள் எல்லாம் அவனது வீட்டிற்குச் சென்று அழைத்துக் களைத்து விட்டார்கள். தற்போது யாரும் அவனை அழைப்பதில்லை. அவனும் போவதுமில்லை.

இப்படியாக இருபத்தியெட்டு ஆண்டுகள் சேரலாதன் திருமணமாகாமலும் கடந்து கழிந்திருக்கின்றன. அவனது நினைப்பிற்கேற்ற வகையில் பெண் அவன் கண்ணில் இதுவரை படவில்லை.

வீட்டார் பாரக்கின்ற பெண்கள் எதுவும் அவனுக்கு பிடிக்கவில்லையாம். நிறைவில் "நீயே யாரையாவது பார்த்து கூட்டிற்று வா" என அவனது விருப்பிற்கு விட்டுவிட்டார்கள்.

அவனது பள்ளித் தோழன் கொன்றைவேந்தன் மட்டுமே இன்றுவரை அவனது நண்பனாக அவனுடன் உடனிருக்கிறான்.

"கோயில் சிரமதானத்திற்குக் கூட வராதவனுடன் எதற்கு உறவு" என ஏனைய பள்ளித் தோழர்கள் சேரலாதனுடன் நெருங்கிப் பழகாததற்குக் கூறுகின்ற கரணியம்.

சேரலாதனின் உந்துருளி கொன்றைவேந்தன் வீட்டு வாசலில் நின்று அழைத்தது. தோய்த்து வைத்திருந்த உடைகளை மினுக்கி உடுத்தி வீட்டுக்குள் இருந்து வந்தவன் பின் இருக்கையில் ஏறி அமர உந்துருளி அதன் பயணத்தை ஆமை வேகத்தில் தொடர்ந்தது.

"வெள்ளக்காரன் நம்மட நாட்ட இன்னுமொருக்கா பிடிக்க மாட்டானா மச்சான்" சேரலாதனின் கேள்வி.

என்ன இவன் திடீரென்று இப்படிக் கேக்கிறான் என மனதில் நினைத்தவனாக "ஏண்டாமச்சி இப்பத்தான் ஒரு சண்டையே முடிஞ்சி நிம்மதியா இருக்கம். அதுக்குள்ள ஏண்டா உனக்கு வெள்ளக்காரன்?" கேள்வியுடன் நிறுத்தினான் கொன்றைவேந்தன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லடா இந்தத் தெருவை அவனுவள்தானேடா போட்டதாம். அதாலதான் இவனுவள் போடாம இருக்கானுவளோ தெரியாது. அவனுவள் வந்துதான் போடோணும் எண்டா அவனுவள் தானே மச்சான் வரோணும்" என்று கூற வாழ்நாளில் முதல் தடவையாக சிந்திக்கின்ற வகையில் ஒரு நகைச்சுவையைக் கூறியிருக்கின்றான் என்ற எண்ணம் மேலோங்க உண்மையிலேயே வாய் விட்டுச் சிரித்தான் கொன்றைவேந்தன்.

"மச்சி பாத்தியா உனக்கு பொட்டயப் பாக்கப் போக்கொள்ள தாண்டா நல்ல யோசனையெல்லாம் வருது. இவ்வளவு நாளும் இதப்பற்றி யோசிச்சிருக்கியா சொல்லு பாப்பம். உன்ர மனிசி ஆடாம குலுங்காம போகோணும் எண்டு நினைக்கிறா என்னடா?" மீண்டும் கேள்வியுடன் நிறுத்த "ஓ.. அப்பிடிப் போயிற்றா என்னடா நீ?. அடேய் நான் சும்மாதான்டா சொன்னனான்." என சிறிய வெட்கத்ததுடன் கூறினான்.

ஒருவாறு பள்ளம் நிறைந்த தெருவைக் கடந்து விட்டார்கள். உந்துருளி வேகமெடுத்து சென்றது. இரண்டு மணி நாற்பது நிமையங்கள் சென்ற பின்னர் சேரலாதன் உந்துருளியை நிறுத்தினான்.

கடற்கரையிலிருந்து இருநூறு மீற்றர் தூரத்தில் அந்த வீடு இருந்தது. கடற்காற்று குளிர்ச்சியுடன் மெலிதாக வீசிக்கொண்டிருந்தது. இருவருக்கும் இதமாக இருந்தது. சேரலாதனுக்கு இன்னும் கொஞ்சம் கூடுதல் இதமாக இருந்திருக்க வேண்டும்.

சூரியன் மேல் வானை நோக்கி ஊர்ந்து கொண்டிருந்த வேளை அது. வேப்ப மரங்கள் நிறைந்து சுற்றி வர இருந்தன. காற்று வேப்பமரத்தில் பட்டுத் தென்றலாகி அவர்கள் இருவரையும் தடவிச் சென்று கொண்டிருந்தது. வேப்ப மரநிழலில் அங்காங்கே ஊராக்கள் அமர்ந்திருந்திருந்து கதைத்துக் கொண்டிருந்தார்கள். சில மரங்களின் கீழே இளைஞர்கள் தாள்கூட்டம் விளையாடிக் கொண்டிருப்பதை இருவரும் கண்டார்கள்.

அவர்கள் போக வேண்டிய வீட்டைச் சுற்றிவர முட்கம்பியினால் கச்சிதமாக வேலி அமைக்கப்பட்டிருந்தது. வேலியின் மேற் பகுதியில் இரண்டரை அடி வரை கிடுகினால் மறைத்துக் கட்டியிருந்தார்கள். ஏன் மேற் பகுதியில் அப்படி மறைத்து கட்டுகின்றார்கள் என்பது சேரலாதனுக்குப் புரியவில்லை. கீழ்ப் பகுதியில் கட்டினால் பரவாயில்லை. கோழி,ஆடு, நாய் போன்ற உயிரினங்கள் வராது. இப்படி ஏன் என்று அவனுக்கு உண்மையில் புரியவில்லை. நண்பனிடமும் கேட்பதற்கு விரும்பவில்லை. சரி இங்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானே எப்படியும் இருக்கப் போறம். பிறகு பார்த்துத் தெரிந்து கொள்ளுவம் என எண்ணிவிட்டான்.

வேலியைக் கடந்து உள்ளே வீட்டிற்குச் செல்வதற்கு மூன்றடி அகலத்தில் ஒரு வழி இருந்தது. நான்கு தடிகள் குறுக்காக ஒவ்வொன்றும் ஒன்றரை அடி உயர இடைவெளியில் போடப்பட்டிருந்தன. ஒவ்வொன்றாக கொன்றைவேந்தன் கழற்ற இருவரும் உள்ளே போனார்கள்.

நுழைவிடத்திலிருந்து ஏறத்தாள அறுபதடி தூரத்தில் சிறிய ஆனால் அழகியதாக வீடு இருந்தது. நுழைவிடத்திலிருந்து வீடு செல்வதற்கு நான்கடி அகலத்தில் இருபுறமும் பப்பாசிகள் பத்தடி இடைவெளியில் நடப்பட்டு காய்த்துக் குலுங்கிக் கொண்டிருந்தன. இருபுறமும் தென்னை மரங்களும் நின்றன.

அனைத்தையும் இரு கண்களால் நோட்டம் விட்டுக் கொண்டு நகர்ந்தான் சேரலாதன்.

வீட்டு முற்றத்திற்கு இருவரும் வந்த போது நான்கரை மணியாகியிருந்தது. சூரியனின் சூடான கதிர்களின் வெப்பம் குறைத்த வேளையது. வீட்டு நிழல் முற்றத்தை முழுமையாகப் பற்றியிருந்தது.

வீட்டு முற்றத்தில் இரு பெண்கள் உரலிலே அரிசியைப் போட்டு மாவாக்கிக் கொண்டிருந்தார்கள். அதில் ஒருவர் இளம் பெண். மற்றயவர் நாற்பத்தைந்து நாற்பத்தாறு அகவையிருக்கும் என்பது கொன்றைவேந்தனின் அகவைக் கணிப்பு.

ஒரு கிழவி குற்றியொன்றில் அமர்ந்திருந்து அரிதட்டினால் இடித்த மாவினை அரித்துக் கொண்டு எஞ்சுகின்ற கப்பியை ஒரு பாத்திரத்தில் போடும் போது "தலைவர் இருக்காரா. எங்கள இண்டைக்கு வரச்சொன்னவர்" என்றான் கொன்றைவேந்தன்.

சேரலாதன் அரிசி இடித்த இளம்பெண்ணை ஒரு தடைவைதான் பார்த்தான்.

அவனது மனதில் ஏற்பட்ட மகிழ்ச்சியை, இன்பத்தை, பூரிப்பை அவன் என்றைக்குமே உணர்ந்ததில்லை. அதனை விபரிக்க அவனுக்கு வார்த்தைகளுமில்லை. வாழ்நாளில் முதல் தடைவையாக மெய்ம் மறந்து போனான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முற்றத்தில் தன்னை விசாரிக்கும் ஒலி கேட்டு வெளியே வந்த 'தலைவர்' என்ற பதவிக்குச் சொந்தக்காரரான 'நிலவன் அண்ணே' என்று ஊரில் அனைவராலும் அன்பாக அழைக்கப்படுகின்ற 'பால்நிலவன்' வாய் முழுமையாக பல் தெரிய "வாங்க தம்பி வாங்க" என அழைத்து உள்ளவாங்க என்றார்.

"அண்ண இதில இருப்பமே. வெளியில நல்ல காத்தாவும் இருக்கும்" என திண்ணையைக் காட்டினான் கொன்றைவேந்தன்.

அவன் கூறியதற்கு காற்று மட்டும் கரணியம் இல்லை. முற்றத்தில் அரிசி இடித்துக்கொண்டிருப்பவர்களைப் பார்த்துக் கொண்டும் சிறிது நேரம் தன் தோழன் இருக்கட்டுமே என்ற உண்மை நட்பு நலனும் ஒளித்திருந்தது.

"பிள்ள பாய் ஒண்டு எடுத்தவாம்மா" என்ற கட்டளை வருமுன்பே பால்நிலவனின் மூன்று பிள்ளைகளில் மூத்தவளான எழிற்கயல் துள்ளிச் சென்றாள்.

"மகள் போறனீ அப்படியே அடுப்பில தண்ணியையும் வச்சிற்று வாம்மா" அம்மா சந்தானலெட்சுமியின் அன்புக் கோரிக்கை. சரி என்பதற்கு மகளிடமிருந்து ஒரு தலையாட்டல் மட்டும் வந்தது. அதனை அம்மா பார்த்தாளோ இல்லையோ தெரியாது. ஆனால் மகள் செய்வாள் என்பது அம்மாவிற்குத் தெரியும்.

சுருட்டிச் சுற்றியிருந்த 'கற்பன் பாயினை' திண்ணையிலே விரித்தாள். "குந்தில இருங்க தம்பிகளா" அழைத்தார் தலைவர் நிலவன்.

"சொன்னமாதிரியே வந்திற்றீங்க. நான் வீட்ட சொல்லல்ல. நீங்களும் உறுதியாச் சொல்லல்ல தானே. கொஞ்சம் இழுவலா சொல்ல வரமாட்டீங்களோ என நினைச்சிற்றன்". தான் மறந்ததினால் வீட்டில் கூறாமல் விட்ட தன் தவறினை பக்குவமாக சமாளித்தார் பால்நிலவன்.

நிலவன் ஊரில் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டு பதினெட்டு ஆண்டுகளாகின்றன. வேறு ஒருவரால் அவரிடத்தை நிரப்ப முடியவில்லை. அவரும் பல தடைவைகள் கூறிவிட்டார் வேறு ஒருவரைத் தலைவராக தெரிவு செய்யும்படி. அவை செவிடன் காதில் ஊதுகின்ற சங்கொலிகளாக இன்றுவரை கேட்டுக் கொண்டிருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிடிக்கின்ற மீன் அனைத்தும் தலைவர் ஒப்புதலின்றி விற்பனைக்குச் செல்லாது. முறையான விலையினைப் பெற்றுக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் அவ்வூரில் உண்டு. அதனை ஒழுங்கமைத்தவர் பால்நிலவனே. அதனாலேதான் அவ்வளவு மதிப்பு அவ்வூரில் அவருக்கு. "கூறிய வார்த்தை மீளப் பெறமாட்டார். யாருக்காகவும் சார்ந்து பேசாத மனுசன்" என்ற பெயரே அவரின் மதிப்பினை கூட்டிய இன்னொரு காரணி.

பத்து நாள்களுக்கு முன்னர் கொன்றைவேந்தன் மீன் வாங்குவதற்காக வந்திருந்த போது அவனது உந்துருளியின் முன்சில்லுக் காற்றுப்போய்விட்டது. விரைவாகப் போகவேண்டும் என்ன செய்வதென்று அவதிப்பட்டுக் கொண்டிருந்தான் கொன்றைவேந்தன். தற்செயலாக அவ்விடத்திற்கு வந்த தலைவர் 'என்ன தம்பி ஏதும் சிக்கலா' எனக் கேட்டவருக்கு நிலை புரிந்து விட்டது. அருகில் இருந்த ஓர் உந்துருளியைக் கொடுத்து 'நீங்க போய் முதல்ல மீனக் குடுத்திற்று வாங்க. நான் இத ஒட்டி வக்கிறன்' என்றார்.

அவனுக்கு அவரது கூற்றை மறுக்க வேண்டும் என மனதில் தோன்றினாலும் மறுக்க முடியாத நிலையில் இருந்தான். அவர் கொடுத்த உந்துருளியைக் எடுத்துக் கொண்டு 'நாளை வருகிறேன்' எனப் புறப்பட்டவன் அடுத்த நாள் வந்து அவரது சங்க பணிமனையில் சந்தித்து கதைத்துக் கொண்டிருந்த போது மகளின் திருமணப் பேச்சு வந்தது. கொன்றைவேந்தன் திருமணமாகியவன் என்பதை அறிந்தவர் உங்கட ஊரில ஆராவது நல்ல பொடியனுவள் இருந்தா சொல்லுங்க தம்பி என்பது வரை பேச்சுவாரத்தை நீண்டிருந்தது.

'என்ர நண்பன் ஒருவன் இருக்கிறான். அவனக் கேட்டுப் பாத்துக் கூட்டி வாறன். பாத்திற்றுச் சொல்லுங்களன். நான் சொன்னா ஓரளவு கேப்பான்.ஓம் எண்டு சொன்னா வாற காரி(சனி)க்கிழமை வாறம்'. என முடிவாகியது.

நிலவன் மறந்தே போய் விட்டார். நல்ல வேளையாக அவர்கள் வருகின்ற போது வீட்டில் இருந்தார்.

அரிசி இடித்துக் கொண்டிருந்த தன் துணைவியை 'சாந்தகிளி இஞ்ச கொஞ்சம் வாவன்' என அழைத்தவர் வீட்டின் உள்ளே சென்றார். விபரத்தை பக்குவமாகச் சொன்னார்.துணைவியிடம்.

மறந்தமையினால் கூறவில்லை என்பதையும் கூறி பொறுத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொடியன் பாக்க நல்லாத்தான் இருக்கிறார். குணம், என்ன மாதிரியோ தெரியாது. என்ன செய்யிறார் எண்டும் தெரியாது என்றீங்க' என்றாள் அம்மா சாந்தகிளி.

'வயல்தான் செய்யிறதாம். ஒரு சோலி சுறட்டுக்கும் போக மாட்டாராம். நல்ல குணம் எண்டு மற்றப் பொடியன் சொன்னவன். பாக்கயும் நல்ல பிள்ளயாத்தான் தெரியுது' அப்பா தன்பக்கத்திற்கு சாதகநிலையைக் கூட்டினார்.

"சே மறந்திட்டீங்களே. அவளும் சட்டையோட வேற நிக்கிறாள். அரிசியும் இடிச்ச நடுவில கிடக்கு." என சற்று அலுத்துக் கொண்டவள் நீங்க போய் அவங்களோட கதைச்சிற்று இருங்க நான் எழிலிற்ற கதைக்கிறன்." அம்மா கூற கோயில் மாடு போல் தலையாட்டிக்கொண்டு மகிழ்ந்த மனதுடன் வீட்டினுள்ளிருந்து வெளியே வந்தார்.

வீட்டில் தான் கூறாமல் விட்டதையும் தற்போது தான் துணைவியிடம் கூறியதையும் வஞ்சகம் இல்லாமல் இருவருக்கும் ஒப்புவித்தார் நிலவன்.

'மாப்பிள பாக்கிறம் எண்டு பிள்ளைக்குச் சொல்லியிருக்கிறம். அதால சிக்கல் இல்ல. அவளுக்கு இப்ப அகவை இருபத்திநாலு. சாதாரணதரம் படிச்சவள். கொஞ்சம் படிப்பு ஏறாது. மூத்தவள். அம்மாக்கு துணையா இருக்காள். நல்ல குணம். அத நான் சொல்லக் கூடா தானே. எண்டாலும் நான் சொல்லாம என்ர பிள்ளயப் பற்றி வேற ஆரால எல்லாம் சொல்ல ஏலும். நீங்க ஊரில போய் விசாரிச்சும் பாருங்களன்' எனக் கூறிச் சிரித்தார்.

'நாங்க விசாரிச்சிற்றுத் தான் வந்திருக்கிறம்' என்றான் கொன்றைவேந்தன் புன்முறுவலுடன். 'அப்பாவைப் பாத்தா பிள்ளைய கேக்கயா வேணும்' என்றான்.

என்ன தம்பி வந்ததில இருந்து வாயே திறக்கக்காணோம் என்று நிலவன் கூற வெட்கமாகிப் போய்விட்டது சேராலாதனுக்கு.

என்ன கூறுவது என்று எண்ணி வாய் திறக்க முன்பே எழிற்கயல் தட்டில் மூன்று குவளை தேநீருடன் நின்றாள். அதற்கிடையில் முகம் கழுவி, தலைசீவி, போட்டிருந்த சட்டை மாற்றி அழகிய சிலையாக தோன்றினாள் கயல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரலாதனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அருகில் இருந்த தன் பள்ளித் தோழன் கொன்றைவேந்தனின் விரல்களின் மேலே தன் விரலை வைத்து மெதுவாக அமிழ்த்தினான். தன் தோழனின் மனக்கிடக்கையை உணர்ந்து புரிந்து கொண்டான்.

அம்மா இடதுபுறமாக இருந்த திண்ணையிலே அமர்ந்தாள். எழிலையும் வந்து அமருமாறு அழைத்தாள். வந்து அமர்ந்தாள்.

பலதும் பத்தும் உரையாடினார்கள். கேட்டுக்கொண்டு இருந்தாள் அமைதியாக. உரையாடல் நிறைவில் எழிற்கயல் வாய் திறந்தாள். யாரும் கேட்காமலே கூறினாள். 'எனக்கு அவரப் பிடிச்சிருக்கு. என்ன பெயர் உங்களுக்கு என்றாள்?. 'சேரலாதன்' பள்ளித் தோழன் கொன்றைவேந்தன்தான் பதில் சொன்னான். சேரலாதன் மெய்ம் மறந்து பேயறைந்தவன் போல் இருந்தமையினால் வார்த்தைகள் வாயிலிருந்து வர மறுத்தன அவனுக்கு.

அடுத்த கேள்வியைக் கேட்டாள் 'ஊரில என்ன என்ன சங்கத்தில இருக்கீங்க?'

முதல் தடைவையாக வாய திறந்தான் சேரலாதன். 'நமக்கு எதுக்கு தேவையில்லாத வேலை. நான் ஒரு சங்கத்திலயும் இல்ல. பொது வேல எண்டா அந்தப் பக்கம் தல வச்சிக் கூடப் படுக்கவே மாட்டன்" என்றான் பெருமையுடன்.

"உண்மையாவா" மீண்டும் கேட்டாள்.

ஏன் கேட்கிறாள் என்று அவனுக்குத் தெரியவில்லை. தெரிந்திருந்தால் பொய் சொல்லியிருப்பான். ஆயிரம் பொய்யாவது சொல்லி ஒரு திருமணம் நடத்தலாம் என கூறியிருக்கிறார்கள். ஒரு பொய் சொல்வதில் என்ன குறைந்துவிடப் போகிறது. ஆனால் அவனுக்கு ஏன் கேட்கிறாள் என்பது தெரிந்திருக்கவில்லை.

"உண்மையாக நான் ஊரில ஒரு சங்கத்திலயும் இல்ல. அதுமட்டுமில்ல ஊரில நடக்கிற ஒரு சிரமதானத்திற்குக் கூட இதுவரைக்கும் நான் போனதேயில்லை" என பதிலிறுத்தான்.

சட்டென எழும்பியவள் " அப்பா எனக்கு இவர் வேணாம். வேற ஆளப் பாருங்கப்பா" கூறியவள் வீட்டினுள் சென்றுவிட்டாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னால் ஓடினாள் அம்மா. அப்பாவும் பின் தொடர்ந்தார்.

சேரலாதன் பதற்றமானான். கொன்றைவேந்தன் ஆற்ற முடியாக் கவலைக்குள்ளானான்.

"அப்பா" அவர் ஊரோட ஒட்டாதவர் எப்பிடியப்பா நல்ல மனுசனா இருக்கேலும். ஒரு சங்கத்திலயும் இல்ல எண்டு எவ்வளவு பெருமையாச் சொல்றார் எண்டு பாத்தீங்களா? அதுவும் ஊரில ஒரு சிரமதானத்துக்கும் போறல்லயாம். எப்பிடியம்மா இவர் நம்மட ஆக்களோட பழகப் போறார்?" கொட்டித் தீர்த்தாள் எழில் சற்று உரத்த தொனியில். தெளிவாகவே பெண் பார்க்க வந்தவர்களுக்கும் கேட்டது.

அவளது வார்த்தைகளால் திக்கு முக்காடிப் போனான் மாப்பிள்ளை.

இதென்னடா ஓர் இடமும் இல்லாத சிக்கல். எந்தப் பொம்பிளயாவது சங்கத்தில இருக்கீங்களா என்று எந்த மாப்பிள்ளையிட்டயாவது கேட்டிருப்பாங்களா. புதுச் சிக்கல். கையாளத் தெரியாமல் விழித்துக் கொண்டிருந்தார்கள் பெண் பார்க்க வந்தவர்கள்.

அம்மா, அப்பாவினால் மகளை அமைதிப்படுத்த முடியவில்லை. தோல்வியுடன் வீட்டினுள்ளிருந்து வெளியே வந்தார்கள். மகள் வெளியே வரவில்லை.

கிழவி நாகம்மா மாத்திரம் முற்றத்தில் இடித்த அரிசியை அரித்து முடித்து குற்றியில் குந்தியிருந்து கொடுப்புக்குள் சிரித்துக் கொண்டு நடந்தவற்றையெல்லாம் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தாள்.

அப்பா நிலைமையை தெளிவுபடுத்தினார். மகளின் கருத்துக்களிலும் முடிவிலும் உள்ள நியாயங்களை விரிவாக எடுத்துரைத்தார்.

இருவராலும் பதிலுரைக்க முடியவில்லை.

சூரியன் கதிர்களை அன்றைய நாளில் அணைத்துக் கொண்டு மறையத்தொடங்கியிருந்தான். இருள் வரத்தொடங்கியது. சேரலாதனின் மனதும் இருளடையத் தொடங்கியது.

பல நல்ல கருத்துக்களை தலைவர் நிலவன் கதைத்ததைத் தவிர வந்த நோக்கம் நிறைவேறாத நிலையில் கவலையுடன் பெண்பார்க்க வந்தவர்கள் புறப்பட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி இஞ்ச வாப்பா எனக் கொன்றைவேந்தனை அழைத்தாள் கிழவி. வரக்கொள்ள அந்த தண்ணிச் செம்பயும் கொண்டுவாப்பா என்றாள். நீரால் அரைவாசி நிரம்பியிருந்த செம்பை எடுத்துச் சென்று கிழவியிடம் கொடுத்தான். "தம்பி இதெல்லாம் ஒரு சிக்கலுமில்ல. என்ர கைப்பேசி எண்ணத் தாறன் வீட்ட போன பிறகு எனக்கு அழைப்பு எடு சரியா. பொடியனுக்கு பெட்டயப் பிடிச்சிற்று எண்டது எனக்கு விளங்கிற்று. என்ன செய்யணும் எண்டு நான் சொல்லித் தாறன். நான் என்ன கதைச்ச எண்டு கேட்டா. எந்த ஊர். ஏன் வந்தனீங்க எண்டு கேட்டனான் எண்டு சொல் என்ன" என்றாள் கிழவி.

கிழவியின் தமிழால் அசந்து போன கொன்றைவேந்தன் அவள் கருத்துகளால் கொஞ்சம் மனநிம்மதியடைந்தான்.

உண்மையில் எழிற்கயல் கூறிவிட்டு உள்ளே போன போது சேரலாதன் மனமுடைந்து வெட்கிப் போனான். ஒன்றும் அவனுக்குப் புரியவில்லை. எதுக்கு எழில் ஊரில் உள்ள சங்கங்களில் இருக்கிறீங்களா எனக் கேட்டாள்? சங்கத்தில் இருப்பதற்கும் தங்களுடன் பழகுவதற்கும் என்ன தொடர்பு இருக்கிறது? என்ற வினாக்கள் அவனைக் குடைந்தன.

ஊரில் பல பெண் பிள்ளைகள் சேரலாதனை சுற்றிச் சுற்றி வந்திருக்கிறார்கள். ஆனால் அவனுக்கு யாரையும் பிடிக்கவில்லை.

சேரலாதன் நல்ல உடல்வாகு உள்ளவன். கவர்ச்சியான முகத்தோற்றம் உள்ள மா நிறமானவன். பார்த்தவுடன் பெண்களுக்குப் பிடிக்கும் அப்படி அழகானவன் என்று கூறலாம். ஆனால் எழிலும் பிடித்திருக்கிறது என்றுதான் சொன்னாள். ஆனால்....ஆனால்....... மனதை அடக்க முடியாது உள்ளுக்குள் வெதும்பினான். செய்வதறியாது தவித்தான்.

கிழவியிடமிருந்து திரும்பி வந்த கொன்றைவேந்தன் "அப்ப சரி நாங்க போயிற்று வாறம்" எனக் கூறி புறப்பட்டார்கள். வாசல்வரை வந்து அனுப்பி வைத்தார் பால்நிலவன். அவருக்கும் கவலைதான். அதனை வெளிப்படையாக வாசலில் வைத்துக் கூறினார்.

கொன்றைவேந்தனே உந்துருளியைச் செலுத்தினான். தன் தோழனின் மனநிலையினை அறிந்தமையினால் உந்துருளி ஓட்டும் பொறுப்பினைத் தனதாக்கிக் கொண்டான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீடு திரும்பும் வரை இருவரும் எதுவுமே கதைத்துக் கொள்ளவில்லை. என்னத்தைக் கதைப்பது என இருவருக்கும் திண்டாட்டம்.

கிழவி கூறியதை பள்ளித் தோழனிடம் கூறாமல் தவிர்த்தான்.

சேரலாதன் இரவு முழுவதும் நித்திரை கொள்ளவில்லை என்பதைவிட நித்திரை வரவில்லை என்றுதான் கூறவேண்டும்.

எழுந்து எழுந்து தண்ணீர் குடித்தான். அடிக்கடி கழிப்பறை செல்ல வேண்டி ஏற்பட்டதே தவிர நித்திரை வரவில்லை. மனது நடந்தவைகளை மீண்டும் மீண்டும் மீட்டுப் பார்த்தது. "எவ்வளவு அழகாகப் பேசுகிறாள். எவ்வளவு அழகானவள். அவளின் அப்பா அருமையாகப் பேசினார். எவ்வளவு பரந்த அறிவு இருக்கிறது அவருக்கு. அவரது செயற்பாடுகளை அவ்வூர் மக்கள் எவ்வளவு விரும்பி ஏற்றிருக்கிறார்கள். நடைபெற்றவை ஒவ்வொன்றாக வந்து போயின.

காலை ஐந்தரை மணியளவில் நித்திரையாகிப் போனான். மறுநாள் காலை பதினொரு மணிக்கு கொன்றைவேந்தன் வந்து எழுப்பும்வரை அவன் எழுந்திருக்கவில்லை.

வீட்டாருக்கும் எதுவும் புரியவில்லை. சேரலாதனும் கொன்றைவேந்தனும் சென்றுவந்தது தாய்க்குத் தெரியாது. இரண்டு தடைவை அம்மா எழுப்பிப் பார்த்தாள். முடியவில்லை. அவனாக எழுந்திருக்கட்டும் என விட்டுவிட்டாள்.

வீட்டிற்கு வந்த பின்னர் நாகம்மாக் கிழவியுடன் கதைத்ததை விரிவாகச் சொன்னான் தோழனிடம். "தம்பி அந்தப் பொடியன என்ர பேத்திக்கும் நல்லாப் பிடிச்சிற்று. ஆனா ஊர் ஆக்களோட ஒத்துப் போகாட்டி எப்பிடி மகிழ்ச்சியா வாழ்ற எண்டு கேக்கிறாள். அதில ஞாயம் இருக்குத்தானே மோன. அந்தப் பொடியன் சோலி சொறட்டுக்குப் போற இல்லையாம் எண்டு சொல்லிச்சுதுகள். அப்ப நல்ல பொடியனாத்தானே இருப்பான். ஊரில இருக்கிற ஒரு சங்கத்தில சேந்து மக்களுக்கு உதவிகளச் செய்யச் சொல்லன். வாற கிழம ஒருவரும் இல்லாத நேரமா பாத்து வா. இன்னும் சிலத நான் சொல்லித் தாறன்.அதெல்லாம் சரி வரும்" என கிழவி கூறியதை சேரலாதனிடம் கூறினான்.

புதியதொரு தெம்பு உருவாவது போன்ற உணர்வு சேரலாதனுக்கு ஏற்பட்டது. "மச்சான் பார் உனக்கு ஒரு நண்பன் எண்டா நான் மட்டும்தான் இருக்கன். வேற ஆரும் கிடையாது. ஏன்?. நீ ஊரோட ஒத்துப் போறல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்டது தானே குற. நீ போய் வயல்ல வேல செய்யிறாதானே. ஒரு சிரமதானம் நடக்கக்கொள்ள அதில போய் கொஞ்ச வேல செய்யிறதில என்ன குறைஞ்சா போயிருவா. நம்மட கோயில் தானேடாப்பா. கூட்டம் நடக்கக்கொள்ள அதில போய் குந்தி இருந்திற்று வாறதானே. உனக்கு என்ன நட்டம் வரப் போகுது." என கொன்றைவேந்தன் கூறக் கூற சேரலாதனின் மனது ஊரின்பால் எண்ணத் தலைப்பட்டது.

"மச்சி இன்னும் எட்டு நாள்ல சனசமூக நிலையத்துக்கு ஆண்டுப் பொதுக் கூட்டம் நடக்க இருக்கல்லோ. நானும் வாறன்" என்றான். பள்ளித் தோழனை மேலும் கீழும் பார்த்தான் கொன்றைவேந்தன். "மச்சான் டேய் இத நீதானாடா சொல்றா?" எனக்கூறிக் கட்டிப்பிடித்து தன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டான்.

நாலு நாள்களில் கிழவியிடமிருந்து அழைப்பு வந்தது. பின்னேரம் வீட்ட வருமாறு கூறினாள். சரி எனக் கூறிவிட்டு பின்னேரம் தனியாளாகவே போனான். கிழவி தனியத்தான் இருந்தார்.

உள்ளே போன போது வானொலியில் "மலையோரம் வீசும் காற்று மனசோடு பாடும் பாட்டு கேட்குதா கேட்குதா" என்ற பாடல் போய்க்கொண்டிருந்தது.

கிழவி கொஞ்சம் விவரமான ஆள் போலத் தான் கிடக்கு என எண்ணிக் கொண்டே 'ஆச்சி ஆச்சி' என அழைத்தான். 'வா தம்பி வா வா' என மலர்ந்த முகத்துடன் வரவேற்றாள். இருவரும் குந்தில் அமர்ந்தார்கள்.

'ஆச்சி நல்லா வானொலி கேப்பீங்க போல' என்றான் கொன்றைவேந்தன்.

"ஓம் தம்பி நான் நல்லா பாட்டுக் கேப்பன். இந்த அன்ரன் சனியோ வானொலி ஈரோஸ் பொடியனுவள் எண்பத்தி நாலாம் ஆண்டு தந்தது. பாரன் தம்பி எத்தின ஆண்டு எண்டு.முப்பத்தாறு ஆண்டுகளாயிற்று. ஒரு பழுதும் வாறல்ல."

'ஏன் ஆச்சி ஈரோஸ் பொடியனுவள் உங்களுக்கு தந்தவங்க?'

'தம்பி அவங்க படகில வந்து இஞ்சதான் இறங்கிறவங்கள். எங்கட வீட்ட தான் வருவாங்க. அப்ப நான் நல்லா புத்தகம் வாசிப்பன். எனக்கு தமிழ் மொழியிலயும் நல்ல விருப்பம். தர்க்கீகம் அவங்க வெளியிட்ட மாதஏடு. அவங்கட மாணவர் அமைப்பு கைஸ் வெளியிட்ட 'நாங்கள்' எண்ட மாத இதழ் எனக்குக் கொண்டு வந்து தருவாங்கள். நான் வாசிப்பன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர் பிள்ளைகளுக்கெல்லாம் அத விளங்கப்படுத்துவன். நல்ல பொடியனுவள் தம்பி. அனேகமா எல்லாரும் படிச்ச புள்ளகள்தான் தம்பி அவங்கள். அந்த ஈரோசால தானே என்ர மகனுக்கும் ஆக்களோட கதைக்கிறது எப்பிடி. எப்பிடி எல்லாத்தையும் கையாளோணும் எண்டெல்லாம் தெரிஞ்சுது. அவங்கள் எல்லாம் சொல்லிக் குடுப்பாங்கள் தம்பி. சரி அதவிடுவம். அதெல்லாம் ஒரு காலம்." என நிறுத்தினாள்.

"உனக்குத் தெரியுமா தம்பி இலங்கையில ஆர் முதல்ல வானொலிய தொடங்கின எண்டு"

"இல்லை என்பதற்கு தலையை இருபுறமும் கிடையாக ஆட்டினான். "1923 ஆம் ஆண்டு தொடங்கினவங்க. தெற்காசியாவிலயே முதல் வானொலி இலங்கை வானொலி தான். வானொலி ஆரம்பித்த மூவர் கொண்ட குழுவுக்கு ஐயம்பிள்ளை நடராசா எண்ட தமிழ் ஆள்தான் தலைவர் என்றது நமக்கெல்லாம் பெருமைதான். அவர் யாழ்ப்பாணத்தாள். கம்பி இல்லாத் தந்தியக் கண்டு பிடிச்ச மார்க்கோனியையும் இங்கிலாந்துக்குப் போய் பார்த்து அவரிட்ட பயிற்சியும் பெற்று வந்தவர் தெரியுமா?" எனக் கூற ஆச்சரியமாக கிழவியை நோக்கினான் கொன்றைவேந்தன்.

இவ என்ன கிழவி. நமக்குத் தெரியாத எவ்வளவு இவவிடம் இருக்கிறது என வியப்படைந்தான்.

"தம்பி நம்மட பொடியனத்தான் என்ர பேத்திக்கு கட்டி வைக்கோணும். அதுக்குத்தான் கூப்பிட்டனான். ஊரோட ஒத்து வாழ்றதில இருக்கிற மகிழ்ச்சி எப்பிடி இருக்கும் எண்டு என்ர பிள்ளைகளுக்கு நான் சொல்லி சொல்லி வளத்திருக்கிறன். அதத்தான் தங்கட பிள்ளைகளுக்கும் அதுகள் சொல்லி வளக்குதுகள். நம்மட பொடியனுக்கும் அத விளங்க வைக்கணும். அது உன்ர பொறுப்பு தம்பி." என இடைவெளி விட "ஓம் ஆச்சி உங்கட்ட இப்ப வந்த கணத்திலயே நான் தீர்மானிச்சிட்டன் சேரலாதன இந்த வீட்டுக்குத்தான் மாப்பிளயா அனுப்பிறது எண்டு." எனக் கூறியவன் கிழவியின் பல கருத்துக்களை உள்வாங்கி ஊர்திரும்பியவன் தன் தோழனிடம் ஒப்புவித்த போது எழில் வீட்டின் மீது ஈர்ப்பு கூடியதோடு தன் பள்ளித் தோழனை எண்ணியும் பெருமிதம் கொண்டான்.

சனசமூக நிலையக் கூட்டத்தில் சேரலாதனைக் கண்டவுடன் கூட்டத்தில் இருந்த ஊராக்கள் அனைவருக்குமே வியப்பு. சிலர் நையாண்டிக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வானத்தைப் பார்த்தார்கள் மழை வரப் போகுதோ என்று. அவற்றையெல்லாம் கவனித்துக் கொண்டுதான் இருந்தான் சேரலாதன்.

புதிய நிருவாகிகள் தெரிவின் போது செயலர் தெரிவு முதலாவதாக அறிவிக்கப்பட்டது. அவ்வேளை சேரலாதன் எழுந்து," தெரிவிற்கு முன்னர் இரு நிமையங்கள் நான் கதைக்க விரும்புறன்" என்றான். ஒப்புதல் வழங்கப்பட்டது. 'நான் இன்றுவரைக்கும் ஊர்ச் செயற்பாடுகள் எதிலயும் கலந்து கொள்ளல்ல. அத நினைச்சு வெட்கப்படுறன். நான் உயர்தரம் படிச்சிருக்கிறன். இப்ப இந்த சனசமூக செயற்குழுவில நான் செயலராக இருந்து பணியாற்ற விரும்புறன்.' என்றான். கூட்டத்தில் இருந்தவர்கள் ஒருமித்து கைதட்டி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்கள்.

சேரலாதன் செயலாளராக தெரிவுசெய்யப்பட்டான். இவ்வளவு நாளும் இவ்வாறான ஒரு மகிழ்ச்சியும் இருப்பதை தெரியாமல் இருந்திருக்கிறோமே என எண்ணிக் கவலையுற்றான்.

சேரலாதனின் செயற்பாடுகள் வேறுபட்டவையாக இருந்தன. துடிப்புடன் செயற்பட்டான். செயற்குழுக் கூட்டத்தில் ஊரின் முதன்மைத் தெருவினை சீரமைப்புச் செய்ய வேண்டியதன் தேவையை வலியுறுத்தினான்.

பிரதேச செயலாளர், அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர் எனப் பலருடனும் சங்கத்தின் சந்திப்புகளை ஒழுங்கு செய்தான்.

தெரு செப்பனிடலுக்குப் பொறுப்பான மாகாணசபை அமைச்சரை சந்தித்து தெரு தொடர்பாகப் பேசுவதற்கு நடவடிக்கை எடுத்தான். சந்திப்பின் போது தயாரித்து வைத்திருந்த கோரிக்கைக் கடிதத்தினையும் ஒப்படைத்தார்கள். அனைத்தையும் சேரலாதனே செய்தான். செயற்குழு இவ்வளவு காலத்தையும் விட திறமாக இயங்கியது.

இரண்டு மாதங்களில் செயற்பாட்டிற்குரிய பயன் கிடைத்தது. அமைச்சரினால் தெரு மீளமைப்புக்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்ற தகவலைத் தாங்கிய கடிதம் சேரலாதனின் கைகளுக்குக் கிடைத்தது. கடிதத்தைப் பார்த்தவனின் கண்களில் நீர் சுரந்தது. எழிற்கயலுக்கு மனதார நன்றி தெரிவித்தான்.

எத்தனை ஆண்டுகளாக பள்ளத்தினாலும் திட்டியினாலும் சென்று வந்திருக்கிறார்கள் நமது மக்கள். முயற்சிகள் செய்திருந்தாலும் தொடர் முயற்சி செய்யவில்லை என்பதே வெற்றியடையாமைக்கான விடை என்பதனைக் கண்டறிந்திருந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் ஊர்ச் செயற்பாடுகளுக்கு உந்தப்பட்டதற்கு எழில்தான் அடியெடுத்துக் கொடுத்தாள் என்பதனை அவன் மனது கூறிக்கொண்டே இருந்தது.

உள்ளே உறங்கிக் கொண்டிருந்த பூனையோ,சிங்கமோ தட்டி வெளியில் கொண்டு வந்தவள் எழில்தான். மீண்டும் மனதால் நன்றியினை தெரிவித்தான்.

அதனை வெளிப்படையாக பள்ளித் தோழனிடமும் கூறி மகிழ்ந்தான்.

தெரு வேலைகள் தொடக்க நிகழ்வினை விழாவாக ஏற்பாடு செய்வதற்கு செயற்குழு தீர்மானித்தது. அது அமைச்சருக்கும் உவப்பானதாக இருந்தது.

தெரு வேலைகள் விலைமனுக் கோரல் முடிவடைந்து ஒப்பந்தக்காரர் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தெரு வேலைகளுக்கான தொடக்க விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்நாள் அவ்வூர் கோயிலின் தேர்த்திருவிழா நடைபெறுகின்ற நாளாகவும் இருந்தது.

தேர் இழுத்து முடிந்தவுடன் தெருத் தொடக்க விழாவும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

ஊர் மக்களுக்கு சேரலாதன் மீது எதிர்பார்க்காத மதிப்பு ஏற்பட்டிருந்தது.

கொன்றைவேந்தன் நாகம்மாக் கிழவியுடன் அவ்வப்போது தொடர்பு கொண்டு கதைப்பான். தேர்த்திருவிழாவிற்கு வீட்டாரை அழைத்து வரும்படி கூறினான்.

அது நல்லது தான் என்பது நாகம்மாவின் மனதிலும் பட்டது. மகன் நிலவனிடம் கூற அவரும் மறுக்காமல் ஏற்றுக் கொண்டார்.

வீட்டார் அனைவருமே தேரோட்டம் பார்க்க வந்திருந்தார்கள். எழில் வீட்டார் வருவார்கள் என்ற சேதி சேரலாதன் அறிந்திருக்கவில்லை. தேர்த்திருவிழாவில் எழிலைக் கண்டான். அவளை நேர் கொண்டு பார்க்க அவனால் முடியவில்லை. அவளாலும்தான். ஆனால் சேரலாதனை அவளும் கண்டாள். மனதில் நெருடல் ஏற்பட்டது என்னவோ உண்மைதான். அப்பா சேரலாதனுடன் வழமைக்காகக் கதைத்துவிட்டு வந்தார்.

தேர் இழுத்து முடிவடைந்ததும் தெரு வேலைகளுக்கான தொடக்க விழா தொடங்கியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சரும் வந்திருந்தார். மேடையில் முக்கியமானவர்கள் ஏறி அமர்ந்தார்கள். சேரலாதனும் ஏறி அமைச்சரின் இடது கைப்புறமாக அமர்ந்திருந்தான். வலது புறத்தே தலைவர் இருந்தார்.

எழிற்கயலுக்கு வியப்பாக இருந்தது. ஓர் அமைப்பிலும் தான் இல்லை என்று சொன்னவர் இப்ப எப்பிடி மேடயில இருக்கிறார். அதுவும் அமைச்சருக்குப் பக்கத்தில இருக்கிறார். ஏதும் வேல செய்யிறாரோ? நம்மள பிடிக்காம பொய் ஏதும் சொல்லி இருப்பாரோ? என தன் மனது போன போக்கில் கேள்விகளைக் கேட்டுக் கொண்டேயிருந்தாள். அப்பாவும் அதே கேள்வியுடன்தான் இருந்தார். அம்மாதான் "என்னங்க அந்தத் தம்பி நம்மட்ட பொய் சொல்லி இருக்கோ" என கேட்க "அதுதாண்டி எனக்கும் குழப்பமா இருக்கு. கொஞ்சம் பொறு என்ன நடக்குது எண்டு பாப்பம்" என கூற விழா அக வணக்கத்துடன் தொடங்கியது.

விழா நிகழ்ச்சி நிரலின் படி செம்மைப்படுத்தப்பட்ட வகையில் நடைபெற்றுக் கொண்டிருந்தது.

அமைச்சரின் உரை நேரம் வந்தது. அமைச்சர் ஒலிவாங்கி அருகே வந்து பேசத் தொடங்கு முன்னர் சேரலாதனை தன் அருகில் வருமாறு ஒலிபெருக்கியினூடாக அழைத்தார். அவன் அருகில் சென்றதும் தான் கொண்டு வந்த பெரியதொரு பொதியை வழங்கினார். தன் அருகில் நிற்குமாறு கேட்டுக்கொண்டார். தனக்கு போடுவதற்காகக் கொண்டு வந்த மாலையை கையில் வாங்கி சேரலாதனுக்கு அணிவித்து அழகு பார்த்தார். இமை ஒரு கணமும் வெட்டாது எழில் குடும்பம் நடப்பவற்றைப் பார்த்துக் கொண்டிருந்தது. ஊராரின் கைதட்டல் வானுயரக் கேட்டுக் கொண்டிருந்தது. நாகம்மாக் கிழவி மட்டும் புன்முறுவல் பூத்த முகத்துடன் இண்டிருந்தாள்.

"சேரலாதன் போன்ற இளைஞர்கள் ஊரக அமைப்புகளில் சேர்ந்து செயற்பட வேண்டும். இன்று படித்த வாலிபர்கள் தங்கள் பாட்டில் இருக்கிறார்கள். பொது வேலைகளில் ஈடுபாடு காட்டுவதில்லை, ஈடுபடுவதுமில்லை. அப்படியிருந்தால் எப்படி நம் ஊர்களை நாம் மேம்பாடடைய வைப்பது? சங்கத்தின் செயலாளராகத் தெரிவாகி இரண்டு மாதங்களில் பல பத்து ஆண்டுகளாக செப்பனிடாமல் இருந்த தெருவை இன்று மீள்நிர்மாணம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்த முழுப் பொறுப்பும் சேரலாதன் உடையது என சனசமூக நிலையத்தின் தலைவர் உட்பட செயற்குழு உறுப்பினர்கள் அனைவருமே சான்று பகர்கின்றனர். இவ்வாறான செயற்பாடுகள்தான் இன்றைய தேவைகளாக இருக்கின்றன" என பாராட்டு மழையில் நனைத்தார் சேரலாதனை அமைச்சர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலையும் கழுத்துமாக வெள்ளை வேட்டி வெள்ளை மேலங்கியுடன் அழகாக அனைவருக்கும் காட்சிப் பொருளாக நின்று கொண்டிருந்தான் சேரலாதன்.

"சே இவ்வளவு நாளும் இந்த மகிழ்ச்சியையா நான் தொலைத்து நின்றேன்" எண்ணி எண்ணி வேதனையுடன் மகிழ்ந்தான்.

நன்றியுரை நேரம் செயலாளரான சேரலாதன் ஒலிவாங்கி அருகே சென்று உரையைத் தொடங்கியவன். யார் யாருக்கெல்லாம் நன்றி தெரிவிக்க வேண்டுமோ ஒருவரையும் தவறாது நன்றிகளைத் தெரிவித்தான். நிறைவு நன்றி தெரிவிக்க வேண்டிய நேரம்இது எனத் தொடர்தான். தனது பள்ளித் தோழன் கொன்றைவேந்தனை நினைவுகூர்ந்து அவனை தனது உரையில் இடைக்கிடை சேர்த்துக்கொண்டவன் தொடர்ந்தான். கடந்த மூன்று மாதங்களாகவேதான் நான் ஒருசங்கத்திலே இணைந்து கொண்டேன். அதற்குக் கரணியமாக இருந்தது ஒரு பெண் என்று சொன்னால் உங்களுக்கு வியப்பாக இருக்கும். உண்மை அதுதான். நான் எனது திருமணத்திற்காக பெண் பார்க்கப் போன போது அந்தப் பெண் கூறியதை வெட்கப்படாமல் அப்படியே உங்களுக்குக் கூறுகின்றேன்.

"என்னப்பா இவர் எல்லாத்தையும் சொல்லப் போறார் போல கிடக்கு" என வெட்கப்பட்டாள்." சொல்லட்டுமே அவர்தாண்டி இனி உனக்கு துணைவர்" என மகளின் கையைப் பிடித்துக் கொண்டே மகிழ்ச்சி ததும்பக் கூறினார். அம்மாவின் கடைக்கண்களில் நீர் துளிகளாய்ச் சுரந்தது.

"உங்களை எனக்குப் பிடித்திருக்கிறது. ஆனால் நீங்கள் உங்கள் ஊரில் எந்த சங்கத்திலும் இல்லை என்பதால் உங்களுடன் எனது வாழ்க்கை அமைந்தால் அது மகிழ்ச்சியாக இருக்காது. ஆகையினால் நீங்கள் எனக்கு வேண்டாம்" எனக் கூறி என்னை அந்தப் பெண் மறுத்து விட்டாள்.அவள்தான் அடைபட்டுக்கிடந்த எனது செயல்களை வெளிக்கொணர்ந்தவள். மூடிக் கிடந்த கண்களை திறந்தவள். அதன் பிறகே நான் இந்த சங்கத்தின் செயலராகப் பொறுப்பேற்றனான்.

அமைச்சர் அவர்கள் எனக்குத் தெரிவித்த பாராட்டுக்கள் அனைத்துக்கும் அந்தப் பெண்தான் உரித்துடையவள் என்பதனை எவ் வெட்கமுமின்றி உங்கள் அனைவருக்கும் கூறுகின்றேன் எனும் போது பார்வையாளர்கள் தமது மகிழ்ச்சியை கைதட்டல்களால் வெளிக்காட்டினார்கள். கையொலி குறைந்ததும் 'எதிர்பாராத வகையில் இன்றைய விழாவிற்கு அவர்கள் குடும்பத்துடன் வருகை தந்திருக்கிறார்கள்' என சேரலாதன் கூற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களைப் பார்த்தார்கள் யாராக இருக்கும் என்று. எழில் மனதால் மகிழ்ச்சியில் நிரம்பித் தழைத்து வெட்கி நாணிக் குறுகி நின்றாள். அவள் அப்பாவோ தனது மருமகனாக வரவேண்டியவனை உதறித் தள்ளிவிட்டோமே என எண்ணிக் கவலைப் பட்டார். அம்மாவும்தான். ஆனால் நாகம்மாக் கிழவியோ சும்மாவாடி இஞ்சபோவம் எண்டு சொன்னனான் என்பதை எண்ணிக் கொண்டே மலர்ந்த மகிழ்ச்சியுடன் இருந்தாள்.

அந்தப்பெண்ணின் பெயர் எழிற்கயல். அவரது அப்பா விரும்பினால் மகளுடன் இந்த மேடைக்கு வருகை தருமாறு அன்பாக அழைக்கிறேன் என அழைத்தான். சற்றும் எதிர்பாத்திராத அழைப்பு அனைவருக்கும் அது. உண்மையில் திக்கு முக்காடித்தான் போனார்கள் அம்மாவும் அப்பாவும். மகளை அழைத்துக் கொண்டு அம்மாவும் அப்பாவும் மேடையில் ஏறி நிற்கும் வரை கைதட்டல் தொடர்ந்தது. அவர்கள் அருகே சென்று தன் கழுத்தில் இருந்த மாலையினை கழற்றி "இந்த மாலைக்குச் சொந்தக் காரர் இவர்தான்" எனக் கூறி எழில் கழுத்தில் மாலையைப் போட்டான் சேரலாதன். அனைவரும் எழுந்து நின்று கைதட்டி வாழ்த்தினார்கள். ஒலிவாங்கியை தன் கையில் வாங்கிய அமைச்சர் " என் வாழ்நாளில் பார்க்காத மறக்க முடியாத மகிழ்ச்சியான நிகழ்வு இது. இருவருக்குமே விருப்பம் இருக்குமாக இருந்தால் இன்றே திருமணத்தை முடித்துக் கொள்ளலாமே என்றார். சேரலாதனின் அம்மாவும் அப்பாவும் மேடைக்கு அழைக்கப்பட்டனர். கொன்றை வேந்தன் நாகம்மாக் கிழவியை அழைத்து மேடைக்கு வந்தான். பலநூற்றுக் கணக்கான மக்கள் முன்னிலையில் இருவரதும் திருமணம் மாலை மாற்றலுடன் நடந்தேறியது. இருவரின் பெற்றோரின் கால்களில் விழுந்து வாழ்த்துப் பெற்றவர்கள் பாட்டியினதும் அமைச்சரினதும் கால்களிலும் விழுந்து வாழ்த்துப் பெற்றுக் கொண்டார்கள்.

செலவில்லாது திருமணம் முடித்த செம்மல் சேரலாதன் என்ற பெயருடன் இணையர்கள் ஊரில் வாழ்க்கையைத் தொடர்கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பச்சோந்தி வாழ்வும் பரவிக் கிடக்கிறது

நாலடி உயரக் கண்ணாடி முன் நின்று வளைந்த பிடியுடைய சீப்பினால் தன் தலையில் உள்ள முடிகளை ஒழுங்கமைத்துக் கொண்டிருந்தார் இராசமாணிக்கம்.

"அப்பா இண்டைக்கு கந்தளாதீவுக்கு வரச்சொல்லிருக்காங்க. போயிற்று வாறன் அப்பா" என்ற மகன் எழிலோனின் குரல் கேட்டுத் திரும்பிப் பாத்தவர் "ஆர் வரச்சொல்லியிருக்காங்க" என்றார் சற்று கலக்கத்துடன். "அவங்க தான் அப்பா, திலக் அண்ணனும், பாஸ்கரன் அண்ணனும், நீங்க தான் அண்டைக்குச் சொன்னீங்களே, என்ர பொடியனும் இப்ப படிச்சு முடிச்சிற்றான், இனி அவனையும் உங்களோட சேர்த்துவிடப் போறன் எண்டு, அதான் அவங்களைப் போய்ச் சந்திச்சனான். சாவாத்தில இருந்து இண்டைக்கு பின்னேரம் வருவாங்களாம். என்ர கூட்டாளி பாக்கியநாதனும் வாறன் எண்டவன்" என்றவனிடம் சற்று யோசித்தவர் " அடட முதலே சொல்லியிருக்கலாமே" என்றார்

"இண்டைக்கு நான் கந்தளாய்க்குப் போறன், உன்னையும் கூட்டிற்றுப் போவம் எண்டு இருக்கிறன். நீ போய் உன்ர கூட்டாளிய மட்டும் போகச் சொல்லு. அவசரமா கந்தளாய்க்கு அப்பா கூப்பிடுறார். நாளைக்கு நான் வாறன் எண்டு சொல்லிற்று வா" என்ற தன் தந்தையிடம் எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தான். தன் அப்பா சொன்னா சொன்னதுதான் என்பது எழிலோனுக்குத் தெரிந்திருந்தாலும் முயற்சி செய்து பார்த்துவிடலாம் என்ற நினைப்பில் செய்த முயற்சிகள் வீணாகின.

கூட்டாம்புளியில் இருக்கும் பாக்கியநாதன் வீட்டிற்குச் சென்று விபரமாக தான் வந்த நோக்கத்தை கூறிவிட்டு " நீ இண்டைக்குப் போய் சந்தி மச்சான், நான் நாளைக்கு வந்திடுவன். ரெண்டு பேருமா பயிற்சிக்குப் போவம்" என்றான். தனது உயிர் நண்பனின் வார்த்தைக்கு மறுப்பின்றி தலையசைத்து சம்மதம் தெரிவித்தான் பாக்கியநாதன். மறுகணமே தன் ஈருருளியில் பொற்கேணியில் இருக்கும் தன் வீட்டை ஏழு நிமையத்தில் வந்தடைந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகன் வந்து முன்னால ஏறு" என்ற அப்பாவின் கட்டளையை ஏற்று நான்கு மாதத்தின் முன்பு அறுபது இலட்சத்திற்கு வாங்கிய வண்டியின் முன்னிருக்கையில் ஏறி அமர்ந்து கொண்டான்.

அப்பா மீது மகன் எழிலோனுக்கு அளவுகடந்த அன்பும் மரியாதையும் இருந்தது. ஊரில் உள்ளவர்கள் அவருக்கு வழங்கும் மரியாதையைக் கண்டு பல தடவைகள் வியந்திருக்கின்றான். ஊரில் என்ன நிகழ்வாயினும் இராசமாணிக்கத்தாருக்குத் தெரியாது நடக்காது. அவரும் ஒரு முக்கிய விருந்தினராக கலந்து கொள்வதற்கு அழைக்கப்பட்டிருப்பார். அதற்கான முக்கிய கரணியம் அந்நிகழ்வின் அரைவாசிச் செலவிற்கான நிதியினை இராசமாணிக்கத்தார் வழங்கியிருப்பார் என்பதாகும். எதற்கெனவென்று சென்று கேட்டாலும் முகம் சுழிக்காது பணம் கொடுப்பார். ஊர் மக்களுடன் அன்பாகப் பேசுவார். யாருடனும் கோபிக்க மாட்டார். ஊரார் பிளைகளை தன் பிள்ளை போன்றே நடத்துவார். இவ்வாறான நிகழ்வுகள் எல்லாம் எழிலோன் மனத்திரையில் படமாக ஓடியது. தன் தந்தையை எண்ணி பெருமைகொண்டான்.

கடந்த மாதம் திலக் அண்ணனும் பாஸ்கரன் அண்ணனும் தன் வீட்டிற்குப் பின்னாலிருந்த தென்னந்தோட்டத்தில் அப்பாவைச் சந்தித்தார்கள். அப்பா தெளிவான குரலில் சொன்னார் "தம்பிகாள் நான் என்ர ரெண்டு கண்ணாலயும் கண்டனான். சேகுத்தம்பிதான் உங்கட ரமேசை காட்டிக்கொடுத்தவன். உங்களோட நல்ல பிள்ள மாதிரி இருந்துகொண்டு உங்கட ரகசியங்களெல்லாம் சொல்றது அவன்தான். சுரேஸ்காசிமோட கதைச்சிற்று நிக்கிறத நான் என்ர ரெண்டு கண்ணாலயும் கண்டனான். நான் மலைக்குப் போக்கொள்ள ராஜகுமார் கோப்பரேசனுக்குக் கிட்டத்தான் அவன் கதைச்சிற்று நிண்டதக் கண்டனான். நீங்களே சொல்லுங்க தம்பி அந்த ரமேஸ்தம்பி வாறது சேகுத்தம்பிய விட வேற ஆருக்கும் தெரியுமா? நெஞ்சு வெடிக்கும் போல இருக்குத் தம்பிகாள். ரமேஸ் எப்பிடியான பெடியன்?"

"நீங்க சொல்றது சரிதான் அண்ண, வேற ஆருக்கும் ரமேஸ் வாறது தெரியாதுதான். மலைக்குப் போயிற்று வந்தனான் எண்டும் சொன்னவன் தான். நீங்க சொல்லத்தான் உண்ம விளங்குது. இந்தச் சோனி எங்கட்டயும் காச வாங்கிற்று இதான் செய்திற்று இருந்திருக்கிறான். பாருங்க இப்ப போய் என்ன செய்யிறம் எண்டு அவன" திலக் கண்கள் சிவப்பாக கடும் தொனியில் கூற " அண்ண இனி என்ன ஆதாரம் வேணும் நமக்கு. உடனே இண்டக்கே போடனும் அண்ண. அங்க அறிவிச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேட்கத்தேவையில்ல அண்ண, வாங்கண்ண போவம்" என்றார் உணர்ச்சி வசப்பட்ட கோபத்துடன் பாஸ்கரன். இளிநீர் வெட்டிக்கொண்டே எழிலோன் உரையாடல்களைக் கேட்டுக்கொண்டிருந்தான்.

எழிலோனுக்கு சேகுத்தம்பி மீது இனம்புரியாத வெறுப்பு உண்டாகியது. 'அப்பா மலைக்குப் போகவே இல்லையே. ஆனா மலயில தன்ர கண்ணால எண்டு சொல்றார். ஏன் எண்டுதான் விளங்கல்ல' என நினைத்துக்கொண்டான்.

அன்று இரவே சேகுத்தம்பி தலையில் சுடப்பட்டு மின்கம்பத்தில் கட்டப்பட்டிருந்தான். மறுநாள் காலை சேகுத்தம்பியின் உறவினர்கள் செய்தி கேள்விப்பட்டு சேகுத்தம்பியின் உடலத்தை அழுதவாறே எடுத்துச் சென்றார்கள்.

"அவர ஆமிக்காரனுவள் தான் சுட்டுப்போட்டு பொடியங்கள் மேலே பழியப் போட்டிருப்பானுகள்" சேகுத்தம்பியின் துணைவி தன்தந்தையிடம் ஒரு மாதத்தின் பின் கூற இல்லப் புள்ள பெடியனுகள் சுட்டதாக நம்பகமாக தெரியுது என்றார்.

துணைவி நம்பவில்லை. "அவங்க இப்படிச் செய்யமாட்டாங்க. பொடியனுகள்ல நல்ல மதிப்பும் நம்பிக்கையும் இவருக்கு இருந்தது" என்று மறுத்துக் கூறியும் அப்பா மீண்டும் மீண்டும் கூற அழுதாளே தவிர வேறு எதுவும் கூறவில்லை.

நிகழ்வு அப்படியே எழிலோனின் மனதில் வந்து தொலைத்தது.

அன்றுதான் தன் மகன் எழிலோனையும் போராடுவதற்கு அனுப்பப் போவதாக அப்பா அவர்களிடம் கூறினார். வேறு எந்த அப்பாக்களுமே இப்படிச் செய்வார்களா?

தேவையான பணம் நிரம்பிக் கிடக்கிறது. வெளிநாட்டிற்கு அனுப்பி அங்கு வாழ வைக்கத்தான் வேறு யாரெண்டாலும் நினைப்பார்கள். ஆனால் தன் அப்பா அவ்வாறு செய்யவில்லை. தன்னை விடுதலை அமைப்புடன் இணைந்து என் இனத்தின் விடியலுக்காக போராடுமாறு கூறுகின்றார். அப்பாவை நினைக்க நினைக்க எழிலோனுக்கு அப்பா மீது சொல்லமுடியா பாசம் உண்டாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பாவின் அவசர அழைப்பு அவனைச் சங்கடப்படுத்தியிருந்தாலும் ஏதோ தேவைக்காகத் தான் அழைத்துச் செல்லுகிறார் என்று நினைக்கத் தொடங்கிய இருபது நிமையங்களில் கந்தளாயில் உள்ள விஜேவீரவின் வீட்டு முற்றத்தில் வண்டி நின்றது.

"எண்ட புத்தா, வாங்க ராஜா" என்று சிங்களத்தையும் கொச்சைத் தமிழையும் கலந்து வாய் நிறையப் பல் தெரிந்தவராக அழைத்தார். இருவரும் இறங்கியவர்களை வீட்டு விறாந்தையில் உள்ள இருக்கையில் அமரச்சொல்ல அதில் அமர்ந்தார்கள்.

தயாரான நிலையிலிருந்து சிற்றுண்டிகளும் பால்தேநீரும் முன்னால் இருந்த முக்காலியில் குந்தின. இருவரும் ஒவ்வொன்றைக் கடித்தனர். விஜேவீர அப்பாவை அழைத்து மாமரத்திற்கு கீழே சென்றுவிட்டார். தனியாக இருந்து தட்டில் உள்ள சிற்றுண்டிகளை ஒரு கை பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தோடு ஒவ்வொன்றாக வாயில் திணித்துக்கொண்டிருந்தான் எழிலோன்.

விஜேவீர இராசமாணிக்கத்தாரின் நீண்டகால நண்பர். மாதமொரு தடவையாதல் விஜேவீரவின் வீட்டிற்கு தன் குடும்பத்துடன் வருவதும் அவர்கள் வராவிட்டால் விஜேவீர பொற்கேணிக்கு வருவதும் வழமையான செயற்பாடு.

ஆனால் இம்முறை எழிலோனுடன் வந்திருப்பது அவ்வாறான வழமையான செயற்பாட்டிற்கு அல்ல என்பது வந்து பத்து நிமையங்களில் அங்கு வந்த வாகனத்தைக் கண்டவுடன் புரிந்தது எழிலோனுக்கு.

ஐந்து படைவீரர்கள் ஆயுதங்களுடன் வண்டியிலிருந்து குதித்து இறங்கினர். படைவீரர்கள் உள்ளே வரவில்லை. வெளியே நிலையெடுத்து நின்றனர். எழிலோன் தான் இருந்த இடத்திலிருந்தவாறே கவனித்துக் கொண்டிருந்தான். அப்போது நேரம் இரவு ஏழு மணியாகியிருந்தது.

வண்டியிலிருந்து இறங்கியவர் இடுப்பில் கைத்துப்பாக்கி இருப்பதைக் கண்டான். வந்திருப்பவர் ஒரு பெரிய படையதிகாரி என்பதை உணர்ந்து கொண்டான். அருகே வந்ததும் " எண்ட சுரேஸ் மாத்தயா" என்றார் விஜேவீர.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழிலோனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அச்சமும் ஏற்பட்டது. அப்பாவை கைது செய்யத்தான் வந்திருக்கிறாரோ என எண்ணியவாறு கவனிக்கலானான்.

அப்பா அருகே சென்றதும் அப்பாவைக் கட்டி அணைத்து கொஞ்சினார் வந்தவர். எழிலோனுக்கு உலகம் வேகமறியா வேகத்தில் சுழல்வதாகத் தோன்றியது. மூவரும் அமர்ந்தார்கள். முன்னால் இருந்த முக்காலியில் பெரிய போத்தல் வைக்கப்பட்டது. ஒவ்வொருவர் முன்னாலும் வைக்கப்பட்டிருந்த குவளைகளை நிரப்பியது போத்தலின் உள்ளே இருந்த பானம். புலால் பொரியல், அப்பிள் என பலதரப்பட்ட சாப்பாட்டுப் பொருட்கள் சுவைக்கப்பட்டன. அவர்களின் உரையாடல் தெளிவாகக் கேட்பதற்காக தொலைக்காட்சியின் ஒலியினை குறைத்து காதுகளை அவர்களிருக்குமிடத்தை நோக்கிக் குறிவைத்தான்.

"நல்ல தகவல். நம்மட பொடியன்கள் போயிற்றாங்க. இரவைக்கு நல்ல சேதி வரும். சேகுத்தம்பிய அவங்கள வச்சே நீங்க போட்டது எங்களுக்கே ஆச்சரியம். என்ர மேலதிகாரி கூட உங்கட கெட்டித்தனத்த பலமுற மெச்சினார்" சுரேஸ்காசிமின் வார்த்தைகள் எழிலோனின் நெஞ்சைப் பிளந்தன.

என் அப்பாவா, ஐயோ என் அப்பாவா இப்பிடி? ஊரே நல்லவரா நினைச்சிற்று இருக்கே. எப்பிடி, எப்பிடி தலை விறைத்தது. ஐயோ என்ர நண்பனும் முடியப்போறானா? என்னால முடியப்போறானா? என்று கலங்கியவாறு என்ன செய்வதென்றே தெரியாமல் மனதால் வெம்பிக்கொண்டிருந்தான் எழிலோன்.

வெளியே நின்ற படைவீரன் ஒருவன் முதுகில் தொலைத்தொடர்புக் கருவிகளைச் சுமந்தவாறு ஓடிவந்து சுரேஸ்காசிமிடம் கதைப்பதற்கு கொடுத்தான். கதைத்து முடிந்தது. " ஐயோ ராஜா அண்ண" என்று கூறியவாறே அப்பாவை தூக்கியே விட்டான் மகிழ்ச்சியில்.

"நாலுபேர் அந்த இடத்திலேயே சரி. பெரிய ஆக்களா இருக்கும் எண்டு என்ர பொடியனுகள் சொல்றாங்க. நான் போய்ப்பாத்திற்று வாறன். மகனை கூட்டிப் போறதுக்கு கொஞ்ச நேரத்தில ஆள் வரும் அனுப்பி வைங்க. சரியா. நான் ஒரு மணித்தியாலத்தில வருவன்" என்று மலர்ந்த முகத்துடன் விறுவிறு என வண்டியிலேறிச் சென்றான் சுரேஸ்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பாக்கியநாதன் போயிருக்கக் கூடாது" என்று கும்பிடாத கோயில்களையெல்லாம் நினைத்து வேண்டாத சாமியெல்லாம் நினைவிருத்தி கும்பிட்டுக் கொண்டிருந்தான். ஆனால் வேண்டுதல்கள் வேண்டுதல்களாக மட்டுமே இருந்தன.

எதுவுமே தனக்குக் கேட்காத மாதிரி அப்பாவும் விஜேவீரவும் உள்ளே சாப்பாட்டிற்காக வரும் போது எழிலோன் இருந்தான். "எப்பிடி மல்லி படம்" விஜேவீர கேட்க "பரவாயில்ல" என்று வராத சத்தத்தை வாயிலிருந்து வரவழைத்துப் பதிலளித்தான்.

இரவு உணவு பலவகைக் கறிகளுடன் பரிமாறப்பட்டன. எழிலோன் சாப்பிடவில்லை. வயிறு சரியில்லை என மறுத்துவிட்டான்.

அரை மணி நேரத்தில் இன்னுமொரு வாகனம் வந்தது. அதில் வந்த ஒருவர் எழிலோனை அழைத்துச் சென்றார். அவரிடம் ஒப்படைப்பதற்காகவே இராசமாணிக்கத்தார் நண்பர் விஜேவீர வீட்டிற்கு வந்திருந்தார். மகன் நீ வெளிநாட்டுக்குப் போய் படிச்சிற்று வா. அதுக்கு எல்லா ஒழுங்கும் செய்திருக்கிறன். இந்த அண்ணன் உன்ன கூட்டிப்போய் அனுப்பி விடுவார். உன்னட்ட முதல்ல சொன்னா நீ ஏலாது எண்டுவா. அதான் சொல்லல்ல. அம்மா தான் உனக்கு வீட்ட வச்சு சொல்லவேணாம் எண்டவ" என்றார்.

அவன் மறுப்பேதும் சொல்லாது போவதற்கு சம்மதம் தெரிவித்தான்.

கடறனையைத் தாண்டி வாகனம் செல்லும் போது "உங்களுக்குத் தமிழ் தெரியுமா" என்றான். "ஓம் தம்பி" என்றார் அழைத்துச் சென்று கொண்டிருப்பவர். நிம்மதியடைந்தவனாக அவருடன் உரையாடினான்.

"எனக்கு வெளிநாட்டில படிக்க விருப்பமில்ல. நான் நம்மட நாட்டு கல்வியத்தான் விரும்புறன். எதுக்கு வெளிநாடு போகணும். இங்கயே உழைச்சி என்ர காசில படிக்கோணும் என்றதுதான் என்ர விருப்பம். அப்பா நல்ல காசுக்காரர். அவர்ர காசில படிக்க எனக்கு விருப்பமில்ல. தயவுசெய்து எனக்கு கொழும்பில ஒரு வேல எடுத்துத் தாங்க. நான் உழைச்சுப் படிக்கிறன். இத அப்பாட்ட சொல்லாதங்க. நான் வெளிநாட்டில இருக்கிற மாரி ஏதாவது ஒழுங்கு செய்து வீட்டோட கதைக்கிறன்." என்ற எழிலோனின் வார்த்தைகள் அழைத்துச் சென்றவரின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். இதுவிடயமாக பலதரப்பட்ட கருத்துகள் இருவராலும் பரிமாறப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருநாகலில் காளான் உற்பத்தி செய்யுமிடமொன்றில் பயிற்சியாளனாக வேலை ஒழுங்கு செய்து கொடுத்தார். முதல் மாதச் சம்பளமாக பன்னிரெண்டாயிரம் உருபா கிடைத்தது. அதனைப் பெற்றுக் கொண்டு பேருந்திலே கிண்ணியா சென்றான். கிண்ணியாவிலிருந்து ஆலங்கேணி சென்று அங்கிருந்து சுங்கான்குழியில் வசிக்கும் குஞ்சிக்கண்டு சுங்கான்குழிக்குப் போவதற்கு தயாரான நிலையிலிருந்த போது அவருடன் தொடர்பு கொண்டு தானும் செல்வதற்கு ஏற்பாடு செய்தான். இருவரும் ஈருருளியில் சென்றார்கள்.

குஞ்சுக்கண்டர் வண்டியைச் செலுத்த ஈருருளிச்சட்டகத்தில் இருந்தவாறு தன்காலை உதவிக்கு கொடுத்து எளிதாகச் செல்வதற்கு துணைபுரிந்தான் எழிலோன்.

தனது விபரங்கள் எதனையும் குஞ்சுக்கண்டரிடம் தெரிவிக்கவில்லை. பச்சநூரிலிருந்து வருவதாக பொய் உரைத்தான். பட்டியனூற்றைத்தாண்டி சுங்கான்குழிக் குளத்தடியில் குஞ்சுக்கண்டர் "நில்லுதம்பி" எனக்கூறி தனது வயிற்றுக் கழிவுகளை இறக்கிவிட்டு குளத்தில் கழுவிவிட்டு வந்து அவனை ஏற்றிக் கொண்டு சுங்கான்குழிக்கு விரைந்தார்.

கபிலப்பாவிடம் கொண்டு போய் எழிலோனைச் சேர்த்தார். கபிலப்பா அவனுக்கு உணவு ஒழுங்கு செய்தார். தான் யாரென்ற விபரங்களை சொன்னான். கபிலப்பாவிற்கு மகிழ்ச்சி. "தம்பி சாப்பிட்டிற்று பேசுவம்" என்று வந்த சாப்பாட்டைப் பார்த்துக் கூறினார் கபிலப்பா.

"சொல்லுங்க தம்பி. அப்பா எப்பிடி இருக்கிறார் அவர போல ஊருக்கு ஓர் ஆள் இருந்தா காணும். அடுத்த ஆண்டே நம்மட நாட்டப் பிடிச்சிரலாம். திலக் அண்ணனோட ஒருக்கா வந்து அவரச் சந்திச்சனான். தங்கமான மனிசன். வீட்ட இருந்து எத்தின மணிக்கு வெளிக்கிட்டனீங்க?" என்று கேட்க.

தன்னை மறந்தவனாக " நிப்பாட்டுங்க அண்ண. அந்த துரோகிய தங்கமான மனுசன் என்றீங்க" என்று சுங்கான்குழியே அதிரும்வகையில் உரத்த சத்தத்தில் கத்தினான். கபிலப்பாவும் அதிர்ச்சியடைந்து தான் போனார்.

"என்ன தம்பி சிக்கல்? அமைதியாயிருங்க. என்ன நடந்து எண்டு ஆறதலா சொல்லுங்க." அமைதிப்படுத்தினார் கபிலப்பா,

திலக் அண்ணன் எவ்வாறு கொல்லப்பட்டார் என்று விபரமாக சொன்னான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசமாணிக்கம் திருக்கோணமலைக்கு சென்று சுரேஸ்காசிமை சந்திப்பதாகவே திட்டமிருந்தது. ஆனால் எழிலோனின் தகவல் அப்பாவிற்கு நற்செய்தியாக இருந்தது. உடனடியான தங்கமுட்டை பெறும் திட்டம் உதித்தது இராசமாணிக்கத்தாருக்கு. மகனை வெளிநாடு அனுப்புவதோடு பண உழைப்பினையும் பெறுவதற்குத் தீர்மானித்தார். மகனை அனுப்பி அவனது நண்பனை மட்டும் செல்லுமாறு கூறி அனுப்பியவுடன் சுரேஸ்காசிமிடம் தகவலைப் பரிமாறி வருபவர்களை அழிப்பதற்கான திட்டத்தினை போட்டுவிட்டார். மகன் வந்ததும் உடனடியாகவே கந்தளாய் சென்றுவிட்டார்.

நடந்தவைகளை ஒன்றுவிடாது ஒப்புவித்தான்.

"சேகுத்தம்பி உண்மையில் காட்டிக்கொடுக்கவில்லை. சேகுத்தம்பி அப்பாவிடம் வந்து ரமேஸ் இன்று வருவார். அவருக்கான இரவுச்சாப்பாடு ஒழுங்கு செய்து தருமாறு கேட்டார். அப்பா மறுக்காமல் ஓம் என்றார். சேகுதம்பியை மலயில போய் போத்தல் எடுத்துவரச்சொல்லி எங்கட வாகனத்தையும் கொடுத்து அனுப்பினதே எங்கட அப்பா தான். ஆனா திலக் அண்ணனும், பாஸ்கரன் அண்ணனும் வீட்ட வந்து அப்பாட்ட கதைக்கக்கொள்ள சேகுத்தம்பிதான் காட்டிக்கொடுத்த எண்டு பொய் சொல்லி சேகுத்தம்பிய சுடவைச்சுப்போட்டார். அதுக்கு நிறையக் காசு வாங்கியிருப்பார். இப்பிடி என்னவெல்லாம் செய்திருப்பாரோ தெரியாது" அழுதழுது கூறினான் எழிலோன்.

கபிலப்பா அஞ்சும் கெட்டு அறிவும் கெட்டு என்று சொல்வார்களே அந்த நிலையில் தான் இருந்தார். எதுவும் யாருடனும் பேசவில்லை கபிலப்பா. கபிலப்பாதான் தம்பலகமம் பிரதேசத்திற்குப் பொறுப்பாக இருந்தார். திலக் அண்ணனுடன் சென்று நடைபெற்ற சண்டையில் காயத்துடன் தப்பி வந்தவர் அவர் மட்டுமே. ஏனைய மூவருடன் பாக்கியநாதனும் பலியானான்.

இராசமாணிக்கத்தார் தனது மகனின் தொடர்பு மூன்று மாதங்களாக இல்லாததால் கவலையடைந்தார். சுரேஸ்காசிமுடன் தொடர்புகொண்டு விடயத்தைக் கூறினார். அனுப்பியவரைத் தொடர்பு கொண்டு விசாரிக்க வேண்டிய விதத்தில் விசாரித்ததில் உண்மையை அவர் சொன்னார். குருநாகல் சென்று பார்த்தார்கள். அங்கிருந்து இரண்டு மாதங்களுக்கு முன்னரே சென்றுவிட்ட விடயம் தெரியவந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மாவிடம் அப்பா உண்மையை சொல்லவில்லை. மகன் வெளிநாட்டில் படிப்பதாகவும் தன்னுடன் பேசுவதாகவும் பொய் கூறினார். "நீ முதலிலேயே உண்மையைச் சொல்லாததால் உன்னுடன் கோபமாக இருக்கிறான். உன்னுடன் பேசமாட்டானாம். வந்துதான் கதைப்பானாம்" என்று வாய்க்கு வந்த பொய்யெல்லாம் சொன்னார்.

எழிலோன் மூன்று மாதகாலமாக மூதூரிலே உள்ள பயிற்சி முகாமில் தீவிர பயிற்சி பெற்று நீதன் என்ற பெயருடன் கபிலப்பாவிடம் வந்தான். தம்பலகமம் பிரதேசத்திற்கான புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான்.

இருவரும் கலந்துரையாடினார்கள். "அப்பாவினால் இதுவரை முப்பதுக்கு மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்பதை எண்ணி வெட்கப்பட்டான். இப்படி எத்தனை பேர் உழைக்காமல் நல்ல மனிதர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்களோ தெரியாது அண்ணன்" எனும் போது நீதனின் கண்களின் ஓரத்திலே நீர் கசிந்தது.

நீதனின் வருகைக்காகவே காத்திருந்தவர்கள் அன்றிரவே பொற்கேணி நோக்கி புறப்பட்டனர். இரவு எட்டரை மணி இராசமாணிக்கத்தாரின் வீட்டுக்கதவு தட்டப்பட்டது. திறக்கவில்லை. நீதன் சாதாரண உடையிலேயே வீட்டிற்குச் சென்றிருந்தான்.

"யார், யாரது" என உள்ளே இருந்து அப்பாவின் குரல் கேட்டது. "நான் தான் அப்பா எழிலோன்" என்றவுடன் அம்மா கதவைத் திறந்து கொண்டு ஓடிவந்தார். கட்டிப்பிடித்து அழுதார். "ஏன் மகனே என்னுடன் கதைக்க மாட்டன் எண்டு சொல்லிற்றியாமே. மெய்தானா. நான் உன்ர நன்மைக்காகத்தானேடா செய்தனான்" என்று அழுகையுடன் கூறிக்கொண்டிருக்கும் போது கபிலப்பாவின் அணியினர் பதினொருபேர் வீட்டினுள் ஆயுதங்களுடன் உள்ளே சென்றனர்.

வாய் நிறையப் பல்லாக "வாங்க தம்பி வாங்க" என்றவாறு அருகே வந்தார் இராசமாணிக்கம். கன்னத்தில் 'பளார் பளார்' என கபிலப்பாவின் கைகள் பதம்பார்த்தன. "நீதன் என்ன செய்வம்" என்றார் கபிலப்பா. "என்னப்பா நடக்குது இஞ்ச?" அம்மா அலறினாள்.

நீதன் தன் அப்பாவின் செயற்பாடுகளை அம்மா, அண்ணன், தங்கை , மாமா ஆகியோரிடம் விவரித்துக் கூறினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாமா நீங்களே சொல்லுங்க என்ன செய்யலாம் இவர?" என்று கேட்டான்.

"தம்பி பிள்ளையார் கோயிலடியில வச்சு சனத்துக்கு முன்னால சுட்டுக்கொல்லோணும்" என்றார்.

அம்மா எதுவும் சொல்லவில்லை. "என்னங்க இதெல்லாம்" என்றார்.

அப்பாவின் கண்கள் குளமாகின. எதுவும் பேசவில்லை.

மாமா சொன்ன மாதிரியே செய்வம் என்றான் நீதன்.

பின்பக்கமாக இருகைகளும் கட்டப்பட்டன. பொற்கேணி பிள்ளையார் கோவிலடிக்கு அழைத்து வரப்பட்டார். ஊரில் முக்கியமானவர்கள் அழைக்கப்பட்டார்கள். நாற்பது பேர் இருப்பார்கள். அவர்கள் முன்னிலையில் நீதன் நடந்தவற்றைச் சொன்னான்.

பாக்கியநாதனின் அம்மா அப்பாவும், சேகுத்தம்பியின் வீட்டாரும் அழைக்கப்பட்டிருந்தனர்.

சேகுத்தம்பிக்கு கப்டன் சேகுத்தம்பி என பதவிநிலை வழங்கப்பட்டிருக்கிறது என நீதன் சொன்னான்.

யாரும் எதிர்பராத வகையில் திரும்பிய நீதன் தன் தந்தையின் தலையில் தனது கைத்துப்பாக்கியால் மூன்று சன்னங்களைச் செலுத்தினான். அப்பா மகன் கையால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

"மறுநாள் மாலை வரை யாரும் எடுக்க வேண்டாம்" என நீதன் சொன்னான்.

அம்மா மயங்கி விழுந்தாள். அம்மாவை கட்டியணைத்து "பொறுத்தருள வேண்டும்" எனக் கோரினான் நீதன். அம்மா அழுவதை நிறுத்திக் கொண்டாள். "நீ சரியானதைத்தான் செய்திருக்கிறா தம்பி" என்றார்.

என்ன நினைத்தாரோ தெரியவில்லை. பிள்ளைகளையும் தன் தம்பியையும் அழைத்துக்கொண்டு வீடு நோக்கிச் சென்றார்.

அனைவரையும் கலையும் படிகூறி வந்தவர்கள் அனைவரும் சுங்கான்குழி சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[redacted]

# கங்கையும் கடந்து போகும்

[redacted]

கீழ்வானில் சிறிதாக ஒளிவரத் தொடங்கும்போது கனகற்றசேனையைக் கடந்து இரண்டு மாட்டு வண்டில்களும் சென்று கொண்டிருந்தன. கனகற்றசேனையின் ஓரமாக நிலப்பகுதியை கடலுடன் இணைக்கும் ஏறத்தாள ஒரு கிலோ மீற்றர் கண்ணாக்காட்டிலுள்ள மரங்களில் இருந்து காகங்கள் தங்கள் இரவைக் களிப்புடன் கழித்து தங்களது இன்றைய வாழ்க்கைக்கான உணவுத் தேடலுக்காக செல்வதற்கு எழுந்து தமது உறவினர்களுடன் 'கா கா' என அவர்களுக்கே புரியும் மொழியில் கரைந்து கொண்டு ஒரு மரத்திலிருந்து இன்னொரு மரத்திற்கு மாறி மாறிப் பறந்து கொண்டிருந்தன.

கழுத்திலே கட்டியிருந்த சலங்கைகளின் 'சல் சல்' ஒலியும் முன்னால் செல்லும் மாட்டு வண்டியை ஓட்டிச் செல்லும் இருபத்திரண்டு அகவை பவளப்பிரியனுக்கு அதிகாலை வேளையில் இதமாக இருந்தது.

பின்னால் வருகின்ற வண்டியை பவளப்பிரியனின் அம்மாவின் அப்பா சின்னத்தம்பி ஓட்டிக்கொண்டிருந்தார். அவரை ஐயா என்றுதான் பவளப்பிரியன் அழைப்பான். தம்பலகமத்தில் அம்மாவின் அல்லது அப்பாவின் அப்பாக்களை ஐயா என்றுதான் அழைப்பார்கள்.

பத்தினிபுரத்தினைக் கடந்த வண்டில்கள் திருக்கோணமலை கொழும்பு முதன்மைச் சாலையைக் கடந்து கடவாணைக் காட்டிற்குள் புகும்போது ஏறத்தாள சூரியன் உலகுக்கு தன் அன்றைய பொழுதைக் காட்டுவதற்கு அரை மணி நேரம் இருந்தது.

காட்டினுள் உள்ள மாட்டுவண்டி சென்றுவரும் தடத்தில் தலையை ஆட்டி ஆட்டி வளைந்து சென்று கொண்டிருந்தன இரு வண்டிகளும். தேக்கு மரங்களில் இருந்த பறவைகள் சிறகடிக்கும் ஒலியும் வாய் மூலமாக எழுப்பும் ஒலிகளையும் இரசித்துக்கொண்டேயிருந்தான் பவளப்பிரியன். ஒவ்வொருநாளும் காலையில் இங்கு வந்து இருந்தால் என்ன என்று அவன் மனம் அவனுக்குச் சொல்லியது. அவ்வளவு இதமாக இருந்தது அவனுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடவாணைக் காட்டினுள் ஏறத்தாள மூன்றரைக் கிலோ மீற்றர்கள் வண்டில்கள் சென்றிருக்கும். சின்னத்தம்பி ஐயா கூறியிருந்த இடம் வந்தது. கையிலிருந்த இரு மாடுகளின் கயிறுகளையும் இழுத்துப்பிடித்து ஓஓஓ..ஓ. என்றான். மாடுகள் நகராது நின்றன. அதுதான் நகரும் வண்டிலை நிறுத்துவதற்கு மாடுகளுக்கும் மனிதர்களுக்குமான மொழி. 'த...த..' என்றால் விரைவாக செல்லு என்று பொருள்.

மாட்டு வண்டில் செலுத்துவதே ஒரு கலை. வண்டில் செலுத்துபவர்கள் அநேகமானோர் கையில் ஒரு துவரம் தடி (துவரம்கேட்டி என்று அழைப்பார்கள்) வைத்திருப்பார்கள். அதனால் மாட்டின் முதுகிலும் பின்சந்துப் பகுதியிலும் மெதுவாக அடிப்பார்கள்.. வண்டில் விரைந்து செல்லும்.

சிலர் துவரம் கேட்டியின் ஒரு முனையில் சிறிய ஆணியை உள்ளே புகுத்தி வைத்திருப்பார்கள். அதனை மாட்டின் தொடையில் குத்துவார்கள். வேதனையில் மாடுகள் விரைவாகச் செல்லும்.

இன்னும் சிலரோ வாலைப் பிடித்து மடித்து அமத்துவார்கள். அந்த வேதனையில் மாடு வண்டிலை இழுத்துக் கொண்டு ஓடும். இப்படியான காட்டு மிராண்டிகளும் வண்டில் செலுத்துபவர்களாக இருப்பார்கள்.

ஆனால் பவளப்பிரியனோ சின்னத்தம்பியரோ அவ்வாறானவர்கள் இல்லை. அவர்களது மாடுகளை தங்கள் பிள்ளைகள் போன்று பார்த்துக் கொள்பவர்கள்.

ஒவ்வொரு வண்டிலிலும் மூன்று பேர் காட்டுக்கு வந்திருந்தார்கள். மாடுகளை வண்டிலின் நுகத்துடன் இணைத்துக் கட்டியிருந்த பூட்டாங்கயிற்றினை அவிழ்த்தான் பவளப்பிரியன். சின்னத்தம்பி ஐயாவும் மாடுகளை பக்கத்தில் இருந்த மரங்களில் கட்டிவிட்டு பேரன் அருகே வந்தார்.

எல்லோரும் அந்த இடத்திற்கு வர 'இந்த இடத்தில தவிட்ட மரங்கள் கனக்க கிடக்கு. கொஞ்சம் கெதியா வெட்டுங்க. கொஞ்சம் பெரிய கம்புகளும் வெட்டுங்க. பிறகு கொள்ளியும் எடுத்திற்று போவம்' என்றார் சின்னத்தம்பி ஐயா. விறகினை கொள்ளி என்றுதான் கூறுவார்கள்.

ஒன்றரை மணியில் வெட்டிய தவிட்டை மரத்தடிகளை வண்டில் அருகே கொண்டு வந்து போட்டு பயன்படுத்துவதற்கு ஏற்ற வகையில் சீவினார்கள். நேரான நீளத் தடிகளாக தெரிவு செய்தே வெட்டியிருந்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுவந்த றோஸ்பாணையும் அம்மா கொடுத்துவிட்ட மாசி போட்டு இடித்த தேங்காய்ப்பூச் சம்பலையும் எல்லோருக்கும் பவளப்பிரியன் கொடுத்தான். அந்த நேரத்தில் அந்த உணவின் சுவையை என்னவென்று சொல்வது? கம்புகள் வெட்டி களைத்திருந்த நேரத்தில் சிறிதாக பசியும் வயிற்றைக் கடித்த நேரத்தில் அந்தச் சாப்பாட்டின் சுவையைச் சொல்ல வார்த்தைகளால் சொல்ல முடியாது.

சாப்பிட்டு முடிந்தவுடன் கொள்ளிக்கு காய்ந்த மரக்கட்டைகளை எடுத்து வந்தார்கள். தவிட்டங்கம்புகளை முதலில் வண்டிலில் ஏற்றினார்கள். அதன்மேலே மரக்கட்டைகளை ஏற்றியவர்கள் பகல் இரண்டு மணியளவில் சாப்பாட்டிற்கு வீட்டுக்கு வந்து சேர்ந்தார்கள்.

நாளை மறுநாள் ஆடி அமாவாசை. தம்பலகமத்திலிருந்து கோணேசர் நீராடக் கெங்கைத்துறைக்குச் செல்வது வழக்கம். சின்னத்தம்பியர் தன் நினைவு தெரிந்த நாளாலிருந்து கங்கைக்குப் போகாமல் விட்டதில்லை. பேரன் பவளப்பிரியனையும் ஒவ்வோர் ஆண்டும் தன்னுடன் கூட்டிச்சென்று விடுவார். பவளப்பிரியன் என்றால் சின்னத்தம்பியருக்கு உயிர்.

பகல் உணவை உண்டவர்கள் இரண்டு வண்டில்களிலும் கூடாரம் அமைக்கும் பணியில் ஈடுபட்டார்கள். காட்டில்வைத்தே கம்புகளைச் சீவிக் கொண்டு வந்ததனால் வீட்டில் வைத்து சீவுகின்ற வேலை இருக்கவில்லை.

வண்டிலின் கொட்டுக்கம்புகளில் கொண்டு வந்த தடிகளை வளைத்து கட்டினார்கள். அரை வட்டம் நீள் வட்டமாக வளைத்து வண்டிலின் மேலால் கூடாரத்திற்கு ஏற்ற வகையில் கட்டினார்கள். தடிகளைக் கட்டி முடித்தபின்னர் கிடுகினை, கட்டிய தடிகளின் மேலால் வைத்துக் கட்டினார். இரு வண்டில்களுக்கும் கூடாரம் ஆறரை மணியளவில் அணியமானது.

வண்டிலின் உள்ளே ஏறிப்பார்த்தான் பவளப்பிரியன். மகிழ்சியில் வாய்நிறையப் பல்லாக சிரித்துக்கொண்டே இறங்கினான்.

ஒரு வேலை செய்பவர்கள் அவ்வேலை முழுமையடையும் போது ஏற்படுகின்ற மகிழ்ச்சி அவரவர்களுக்கே தனியாக உணர்ந்து கொள்ள முடியும். வேறு யாராலும் அதனை விபரிக்கவோ எடுத்துச் சொல்லவோ முடியாமல் போய்விடுகிறது என்னவோ உண்மைதான் போலும்.

ஆடி அமாவாசையன்று தமது பெற்றோரை இழந்தவர்கள் கங்கைக் கரையில் கோணேசர் நீராடும் போது சேர்ந்து நீராடுவார்கள். அந்த ஆடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமாவாசையன்று நீராடச் செல்வதற்கே இன்று பவளப்பிரியனின் வீட்டார் அணியமாகிக் கொண்டிருக்கிறார்கள்.

பகல் உணவு அன்று அம்மாவும் அம்மம்மாவும் சேர்ந்து புளிச்சாதம் சமைத்திருந்தார்கள். சுவையாக இருக்கு என்று கூறி சின்னத்தம்பியர் மூன்று கோப்பை அடுத்தடுத்து வாங்கி வாங்கி உண்டார். சுவையான உணவு என்றால் ஒரு பிடி பிடிப்பது சின்னத்தம்பி ஐயாவின் வழக்கம். அம்மம்மாவுக்கு உள்ளுக்குள் மகிழ்ச்சிதான்.

குவளையில் தயிரும் அதனுள் சீனியும் போட்டு வீட்டில் இருந்த ஒன்பது பேருக்கும் அம்மா கொண்டு வந்து கொடுத்தார். ஐயா வேணாம் என்று கூறி மறுத்துவிட்டார். ஏற்கனவே புளிச்சாதம் வயிற்றை நிரப்பியிருந்ததால் தயிரை ஏற்ற இடமில்லை என்பதே மறுத்தமைக்கு கரணியம்.

'இளங்கன்றுத் தயிர் அந்தமாரி இருக்கு மாமா' என்று அரிமாவளவன் எனும் தன் மாமாவின் கருத்திற்கு வழிவிட்டான் பவளப்பிரியன். 'ஓண்டா தம்பி' என்றார் மாமா. பவளப்பிரியனை தம்பி என்றுதான் செல்லமாக மாமா அழைப்பார்.

மூன்று மணியளவில் பவளப்பிரியன் மாடுகளுக்கு தவிடு வைத்து தண்ணீர் காட்டி மாடுகளுக்குச் செய்ய வேண்டியதைச் செய்து கங்கைக்குச் செல்வதற்கு அணியமான நிலையில் ஐயாவின் கட்டளைக்காகக் காத்துக்கொண்டு இருந்தான்.

மூன்றேகாலுக்கு 'வண்டிலப் பூட்டுங்கடா' ஐயா கூறினார். பவளப்பிரியனும் அரிமாவளவனும் இரண்டு வண்டில்களிலையும் மாடுகளைப் பூட்டி முற்றத்தில் கொண்டு வந்து நிறுத்தினர். மறுநாளின் உணவுக்குத் தேவையான சமையல் பொருட்கள், சமையல் பாத்திரங்கள், வாழை இலைகள், நீராடியபின் உடுத்துவதற்கு அனைவருக்குமான உடைகள் என ஒன்றும் விடாது அம்மா சாந்தகிளி எடுத்து வைத்ததை வண்டிலில் ஏற்றினார்கள்.

ஒன்பது பேரும் இரு வண்டில்களிலும் ஏறினார்கள். சின்னத்தம்பி ஐயா வீட்டினைப் பூட்டிவிட்டு வந்தவர் திரும்பவும் போய் இழுத்துப் பார்த்து பூட்டி இருக்கிறது என்பதனை உறுதிப் படுத்தியவராக திரும்பி வந்து வண்டிலில் இறுதி ஆளாக ஏற வண்டில்கள் மெதுவாக நகர்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆவன்னா கடையில் சீனி, தேயிலை வாங்க வேணும் என ஐயா கூறியிருந்ததனால் கடைக்கு அருகில் வண்டில்கள் நிற்க அப்பா ஒப்பிலாமணி இறங்கிச் சென்று பொருட்களை வாங்கி வந்தார்.

வரும்போது தோடம்பழ மிட்டாய்களும் வாங்கி வந்தார். பவளப்பிரியனுக்கு தோடம்பழ முட்டாசி என்றால் உயிர். அவன் சின்ன வயதாக இருக்கும் போது கொட்டியாரத்திலிருந்து பாலசிங்கம் ஐயா, வர்ணகுலசிங்கம் மாமா இருவரும் வரும்போது தோடம்பழ மிட்டாய்கள்தான் வாங்கி வருவார்கள்.

அவர்களின் மடியில் இருந்து ஒவ்வொன்றாக வாங்கி வாயில் போட்டு உமிழும்போது அதன் இனிப்புச்சுவை பவளப்பிரியனை வேறுஉலகிற்கு அழைத்துச்சென்று மீண்டும் இவ்வுலகிற்குக் கூட்டிவரும்.

அவர்களால் அறிமுகமான பழக்கம் இன்றுவரை அவனிடம் தொடர்கிறது. அவனது தம்பிகள் இருவருக்கும் தோடம்பழ மிட்டாய்கள் விருப்பம்தான்.

வாங்கி வந்த தோடம்பழ மிட்டாய்களை வாங்கி வாயில் போட்டுக் கொண்டு புறந்திரி ஆற்றினைக் கடந்து இலங்கைநேசன் அரிசி ஆலை அருகில் வரும்போது நெல் ஊறவைத்த மணம் அம்மம்மாவின் மூக்கை கையால் பொத்த வைத்தது.

வெம்படியில் பட்டிமேட்டுச் சந்தியால் இடது பக்கமாகத் திரும்பி வயலில் குடலைப் பருவத்தில் இருக்கும் நெற்பயிர்களை முன்னால் இருந்து பார்த்து மகிழ்ந்து கொண்டு சென்றான். எவ்வளவு அழகான ஊர் இது. இந்த ஊரில் பிறந்தவர்கள் பெரும்பேறு பெற்றவர்கள். நானும்தான் என மனதில் எண்ணிப் பெருமிதம் கொண்டான் பவளப்பிரியன்.

வரப்புகளிலே வெள்ளைநிறக் கொக்குகளும், வக்கா என்று அழைக்கப்படுகின்ற இறக்கைகள் மெலிதான கபிலநிற பறவைகளும் தமது இரைக்காக பொறுமையாகப் பார்த்துக் கொண்டிருந்ததனைப் பார்த்து வியந்தான். எவ்வளவு நேரம் இந்தக் கொக்கும் வக்காவும் நின்ற நிலையிலேயே நிற்கின்றன. கால்கள் கடுப்பதில்லையா இதுகளுக்கு. அவற்றின் பொறுமையை எண்ணி வியப்படைந்தான். பட்டிமேட்டுப் பாலத்தடியில் தம்பலகமம் உபதபாலகத்தின் தபாலதிபர் சிரித்துக்கொண்டு 'போயிற்று வாங்க' என கை காட்டி அனுப்பினார்.

'கற்பூரம் வாங்க மறந்திற்றன். பட்டிமேட்டுகாக்கா கடையில நிப்பாட்டு' என அப்பா கூற கற்பூரம் வாங்கி வரும்வரை காத்திருந்தார்கள். 'இவருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே மறதிதான். என்ன நினைப்பில திரியிறதோ தெரியா' அம்மா அலுத்துக் கொண்டாள்.

அப்பா வண்டிலில் ஏறியதும் 'த..த..' என்று மாடுகளிடம் நகரும்படி கட்டளையிட்டான் முன்னால் சென்று கொண்டிருந்த வண்டில் ஓட்டி பவளப்பிரியன்.

பட்டிமேட்டுப் பிள்ளையார் கோவிலை வண்டில் தாண்டும்போது அம்மாவும் அம்மம்மாவும் கண்களை மூடி ஏதோ வாய்க்குள் முணு முணுத்து விட்டு கைளால் தங்கள் தலையில் மூன்றுமுறை குட்டிக் கொண்டார்கள்.

தம்பிராசா ஐயாட பள்ளிக்கூடத்தடியால வண்டில் போகும் போது அவரை நினைத்துக்கொண்டான் பவளப்பிரியன். சாரதா வித்தியாலயம் என்ற பெயரை மக்கள் மறந்து தம்பிராசா ஐயாவின் பள்ளிக்கூடம் என்று கூறுமளவிற்கு அவரது செயற்பாடுகள் இருந்தன. கைப்பந்து விளையாடுவதில் கெட்டிக்காரரான தம்பிராசா ஐயா பிள்ளைகளின் படிப்பில் கண்ணும் கருத்துமாக இருந்து தன் உயிரைக் கொடுத்து கற்பித்த ஆசிரியரான பள்ளி முதல்வர்.

வண்டில் சற்று விரைவாகத்தான் சென்று கொண்டிருந்தது. கூட்டாம்புளி கடந்து மீண்டும் அழகிய வயல்வெளியால் சென்று கரைச்சைத்திடலையும் தாண்டி வர்ணமேட்டுக்கூடாக குடமுருட்டிப்பாலத்து சிறிய ஏற்றத்தில் ஏறும்போது வண்டிலினுள் இருந்தவர்கள் பின்னால் சாய்ந்தார்கள். விழுந்துவிடாதவாற ஒருவரையொருவர் மாறி மாறிப் பிடித்துக் கொண்டார்கள்.

முள்ளியடியில் இடுகாட்டைக் கண்டவுடன் அம்மம்மா தனது அம்மாவை எண்ணி சில துளிகளை கண்களில் இருந்து காணிக்கை ஆக்கினார்.

சிவத்தப் பாலத்தில் வண்டில் மிகவும் மெதுவாகச் சென்றது. இரண்டு நாள்களுக்கு முன்னர்தான் லாடன் கட்டிய மாடுகள். காலுக்கு கொஞ்சம் நோவும் கூச்சமும் இருந்திருக்க வேண்டும். சிவத்தப் பாலம் மிகவும் ஒடுங்கியதாக இருந்தது. ஒரு வாகனம் தான் ஒரு நேரத்தில் செல்ல முடியும். அந்நாள்களில் அநேகமாக பாலங்கள் அகலம் குறைவாகவே கட்டப்படுவது வழக்கம்.

காலிபாஞ்சான் வெளியில் உள்ள வேளாண்மை, கதிர்கள் தள்ளியிருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவிகள் நெற்கதிர்களில் பால் குடித்துக் கொண்டிருந்தன. தினையான் குருவிகள் கூட்டம் கூட்டமாக வயல்களில் பறந்து திரிந்து நெற்பால் குடிப்பதையும் அதனைத் துரத்துவதற்காக ஒரு பெடியன் அங்கும் இங்கும் ஓடித் திரிவதையும் பார்க்கும் போது தான் பொட்டி வயலில் புறாக்காவல் பார்க்கும் போது பட்ட துன்பங்கள் நினைவிற்கு வந்து தொலைத்தன. அவை இப்போது மனதிற்கு மகிழ்ச்சி தருகின்ற விடயங்களாக அவனுக்குத் தெரிந்தன.

சூரங்கல் கடந்து கச்சக்கொடி தீவினால் வண்டி சென்றது. அப்போதெல்லாம் அவர்களுக்குத் தெரியாது பின்னர் நாட்டில் ஏற்படப் போகும் நிகழ்வுகளினால் தம்பலகமம் மக்கள் முழுமையாக இடம்பெயர்ந்து கச்சக்கொடித் தீவிலும் முனைச்சேனையிலும் வந்து பல மாதங்கள் தங்கியிருக்கப் போகின்றார்கள் என்று.

முனைச்சேனையும் கடந்து குட்டிக்கரைச்சைப் பாலத்தினால் மெதுவாகச் சென்ற மாடுகள் பாலத்தைக் கடந்ததும் சற்று வேகமெடுத்தன. குட்டிக்கரைச்சைச் சந்தியால் வலது பக்கமாகத் திரும்பி இடிமண் தாண்டி ஆலங்கேணி ஊருக்குள் வந்தன.

ஆலங்கேணிப் பள்ளிக்கூடத்திற்கு முன்னபாக நைநார் ஐயாவின் வீடு இருந்தது. அவரின் வீட்டிற்கு அப்பா போய் அவரைச் சந்தித்து கதைத்துவிட்டு வந்தார். நைநார் ஐயா ஆலங்கேணியின் கிராமசபைத் தலைவராக இருந்தவர். ஊரில் மதிப்பும் மரியாதையாகவும் வாழ்ந்தவர்.

இரு வண்டில்களும் உப்பாற்றுத்துறையடிக்கு மாலை ஆறு முப்பது மணிக்கு வந்து சேர்ந்தன.

தம்பலகமம், ஆலங்கேணி, ஈச்சந்தீவு ஆகிய ஊர்களில் இருந்து பலர் வண்டில்களில் கூடாரம் கட்டி வந்து உப்பாற்றுத்துறையினைக் கடப்பதற்காக காத்து வரிசையில் நின்றனர்.

கொஞ்ச நேரம் இறங்கி நில்லுங்க. எப்படியும் இருபது நிமையமாவது செல்லும்' சின்னத்தம்பி ஐயா கூற எல்லோரும் கீழே இறங்கி கடற்கரையில் உப்புத் தண்ணீரில் கால் நனைப்பதற்காகச் சென்றார்கள்.

'தம்பி வண்டில்ற பின் வள்ளாக்கம்ப கீழ எடுத்து விடு. மாடுகள் பாவம்' ஐயா சொல்ல அப்படியே செய்தான் பேரன். முன், பின் வள்ளாக் கம்புகளை எடுத்து கீழே விட்டான். அவ்வாறு செய்வதனால் வண்டிலினுள் இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருட்களின் சுமை மாடுகளுக்கு தாக்காது என்பதனால் அப்படிச் செய்தார்கள்.

ஐயா கூறியபடி அவர்களது நேரம் வந்தது. இரு வண்டில்களையும் ஒரே நேரத்தில் பாதையில் ஏற்றி சில்லுகளுக்கு அசைந்துவிடாதவாறு கட்டைகளால் முட்டு வைத்தான் பேரன்.

பாதையை இரு கரைகளையும் இணைக்கும் கம்பியைப் பிடித்து பாதை ஓட்டுபவர்கள் இழுத்தார்கள். வண்டிலில் வந்தவர்களும் சேர்ந்து இழுக்க இழுக்க பாதை விரைவாக கரையைச் சேர்ந்தது.

சின்னத்தம்பியர் பாதை ஓட்டுநர்களின் கையில் யாரும் பார்த்திராதபடி ஐந்து உருபா தாளைத் திணித்து விட்டு வந்தார். சிரிப்பால் நன்றி சொன்னான் பாதைக்காரன்.

முறிஞ்சபாலத்தடியில் மணல் அதிகமாக கிடந்ததால் எல்லோரையும் வண்டிலிலிருந்து இறக்கி நடந்துவரும்படி கூற எல்லோரும் இறங்கி நடந்தார்கள். நடக்கும்போது கால்கள் மணலுக்குள் புதைந்தன. 'மாடுகள் பாவம்' என அம்மா மனதுள் நினைத்துக்கொண்டாள்.

கங்கைத்துறையடிக்கு ஏழுரை மணிக்கு இரண்டு வண்டில்களும் போய்ச் சேர்ந்தன. தெருவின் இருமருங்கிலும் விழாக்கடைகள் நிரம்பி இருந்தன.

சிறுவர்களுக்கான விளையாட்டுப் பொருட்கள், சமையல் பாத்திரங்கள், உடைகள், சிற்றுண்டிகள் என வகைவகையான கடைகள் முளைத்திருந்தன. பிரதேசம் முழுமையாக 'பெற்றொல்மக்ஸ்' விளக்கு மூலமாக ஒளியேற்றப் பட்டிருந்தது.

சின்னத்தம்பி ஐயா இரண்டு 'அரிக்கன் விளக்கு' கொண்டு வந்திருந்தார். கங்கைக் கோயிலுக்கு இடதுபுறமாக வழமையாக அவர்கள் வந்து தங்கியிருக்கும் இடத்தில் ஒன்பது பேரும் தமது இருப்பிடத்தில் கொண்டு வந்த சாக்குப்படங்கை விரித்து, கொண்டு வந்த உமல்களை எல்லாம் இறக்கி வைத்து அமர்ந்தார்கள்.

நான்கு நாள்களுக்கு முன்னர் கோணேசர் கோயில் நிருவாகத்தினர் வினைக்கொடை(சிரமதானம்) ஏற்பாடு செய்திருந்தனர்.

தம்பலகமம், ஆலங்கேணி மக்கள் பெருமளவில் கலந்து கங்கைப் பிரதேசம் முழுவதையுமே துப்புரவு செய்திருந்தார்கள். அந்த நேரத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கான இருப்பிடங்களையும் மேலும் துப்பரவு செய்து இடங்களை தமக்கானதாக தற்காலிகமாக உரிமை கோரிக்கொண்டார்கள்.

நிகழ்ச்சிகள் நடத்துவதற்காக மேடை ஒன்றும் தென்னங் குற்றிகளைப் பயன்படுத்தி உருவாக்கியிருந்தார்கள்.

அப்பா மட்டும் அந்த இடத்தில் இருக்க ஏனையவர்கள் கங்கைக்குச் சென்று முகம் கழுவி கங்கைக் கோயிலுக்கும் சென்று கும்பிட்டு திருநீறு, சந்தனப் பொட்டு கைகளில் வாங்கிக் கொண்டு இருப்பிடத்திற்கு வந்துசேர்ந்தார்கள்.

அப்பா அதன் பின்சென்றார். ஏனையவர்கள் செய்ததனை தனியாளாகச் செய்து இருப்பிடத்திற்கு வந்தமர்ந்தார்.

தமது சொந்தங்கள் ஒவ்வொருவராக வந்து நலம் விசாரித்துச் சென்றார்கள். ஏதோ கனகாலம் பிரிந்து சென்று வந்து சந்திப்பது போன்று தோன்றியது பவளப்பிரியனுக்கு. 'மகிழ்ச்சியான வாழ்க்கையின் ஒருகூறு இது' என எண்ணி மகிழ்ந்தான்.

எட்டரை மணியளவில் மேடையில் நிகழ்ச்சிகள் தொடங்கின. கோணேசர் கோயிலின் தலைவர் மங்கல விளக்கின் முதல்சுடரை ஏற்றி வைத்து மேடை நிகழ்வுகளை தொடக்கி வைத்தார்.

வழமையான நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து இசைநிகழ்ச்சி தொடங்கியது.

தம்பலகமத்து இசை உடன்பிறப்புகள் முதலாவது பாடலை இணைந்து பாடுவார்கள் என அறிவிப்புக் கேட்டது.

'சண்முகலிங்கம் மாமாவும் மகாலிங்கம் மாமாவும் பாடப்போறாங்களாம். வாங்க கெதியா முன்னுக்குப் போய் இருப்பம்' என மாமாக்களின் பாடலைக் கேட்பதற்காக அம்மா மற்றவர்களை அழைத்தாள்.

சண்முகலிங்கம் ஐயாவின் பாடல்களைக் கேட்பது என்றால் பவளப்பிரியன் வீட்டில் உள்ள அனைவருக்கு தனியான விருப்பம்.

'உச்சிப் பிள்ளையார் கோவில் கொண்ட இடம் திருச்சி மலையினிலே. நம் அச்சம் நீங்கவும் ஆனந்தம் பெருகவும் அவன்தான் மனதினிலே...' என்ற பாடலை இருவரும் இணைந்து தலையை அசைத்து அசைத்து சிரித்த முகத்துடன் பாடினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முகராசா அண்ணரின் மிருதங்க இசையும் விபுணசேகரம் ஐயாவின் ஒத்திசைப்பெட்டகத்தின் இசையும் பாடல் கேட்பவர்களைப் பரவசப்படுத்தியது.

அம்மா சப்பாணம்கட்டி அமர்ந்திருந்து தொடையிலே வலது கையினால் தாளம் போட்டுக்கொண்டு பாடலை சுவைத்துக்கொண்டிருந்தாள். அங்கு கூடியிருந்த அனைவருமே பாடலைக் கேட்டு மகிழ்ச்சியடைந்தனர் என்றுதான் சொல்ல வேண்டும்.

'அச்சுதன் மனம் அன்பினால் மகிழ்..' என்ற பாடல் அடியினை சண்முகலிங்கம் ஐயா உயர்த்தி எடுத்துப் பாடியபோது அம்மா தன்னை அறியாமலே தனது கைகளைத் தட்டியே விட்டாள். அவ்வளவு இனிமையாக இருந்தன பாடலும் பாடிய குரல்களும்.

'இப்படிப் பாடுவதற்கு கொடுத்து வைத்திருக்க வேண்டும். யாரால இப்பிடிப் பாட ஏலும்? அத கேக்க நமக்குக் கொடுத்து வச்சிருக்கே' அம்மம்மா தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள்.

ஐந்தாவது பாடலாக தனது விருப்பப் பாடலைப் பாட மகிழ்வடைந்தார் சின்னத்தம்பி ஐயா. 'புல்லாங்குழல் கொடுத்த மூங்கில்களே...எங்கள் புருசோத்தமன் புகழ் பாடுங்களே...வண்டாடும் கங்கைமலர்த் தோட்டங்களே எங்கள் மதுசூதனன் புகழ் பாடுங்களே..'

பன்னீர் மலர் சொரியும் மேகங்களே ..எங்கள் பரந்தாமன் மெய்யழகைப் பாருங்களே..' ஐயாவிற்கு இருப்புக் கொள்ளவில்லை. ஐயா இவ்வுலகில் இல்லை. 'சா.. இந்த மனுசன் என்ன மாதிரியப்பா பாடுறார்.' விரித்துரைக்க வார்த்தைகள் அவருக்கு வரவில்லை.

அனைவரது மனதையும் மகிழ்வித்துக் கொண்டிருந்தார்கள் இசை உடன்பிறப்புகள். அங்கு குழுமியிருந்த மக்கள் அனைவருமே இசைமழையில் நனைந்தனர்.

அடுத்த பாடல் செல்வி கலையரசி ஒப்பிலாமணி பாடுவார் என்ற அறிவிப்பு வெளியானது.

அம்மா அதிர்ந்து போய்விட்டாள். என்னடா இது இவள்ற பேர அறிவிக்கிறாங்க. நம்மட்ட இந்தச் சனியன் மூச்சுக் கூடவிடல்லயே. தானும் பாடுறன் எண்டு ஒரு சொல்லுக்கூட சொல்லல்லயே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைநிகழ்ச்சி நடைபெறும் போது நான்காவது பாடல் பாடி முடிந்ததும் மகள் கலையரசியிடம் கேட்டாள் 'நீயும் பாடியிருக்கலாமே 'என்று. 'நம்மளச் சேப்பாங்களா' என பதிலளித்துக் கொண்டிருந்த போதுதான் கலையரசியின் பெயரை ஒலிபெருக்கியில் அறிவித்தார்கள். அறிவிப்புக் கேட்டதும் மேடைக்கு ஓடிச் சென்றுவிட்டாள்.

'ஆயர்பாடி மாளிகையில் தாய்மடியில் கன்றினைப் போல் மாயக்கண்ணன் தூங்குகின்றான் தாலேலோ..' எனத் தொடங்க அம்மாவின் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து ஓடியது.

'அதுதான் அம்மா' என்பதை பவளப்பிரியன் கடைக்கண்ணால் பார்த்து உணர்ந்து கொண்டான். தனது மகள் எப்படி அருமையாகப் பாடுகிறாள். மேடையில் பாடுவது இதுதான் முதல் தடவை. பள்ளியில் பாடியிருக்கி றாள். ஆனால் பொது நிகழ்வொன்றில் பாடுவது இதுதான் முதல் தடவை.

பாடலைப் பாடி முடிந்ததும் சண்முகலிங்கம் ஐயாவிற்குக் கிடைத்ததை விட கூடுதலான உரத்த கை தட்டல் கலையரசிக்குக் கிடைத்தது.

சண்முகலிங்கம் ஐயா எழுந்து சென்று பாடியவளை தன்னருகே அழைத்து மேடையிலே வைத்து முத்தமிட்டார். ஒலிவாங்கியை வாங்கி கலையரசியை வாழ்த்திப் பாராட்டினார். பொன்னாடை ஒன்றினைப் பெற்று அவர் தன் கையாலேயே சிறுமிக்குப் போர்த்தினார். பார்த்துக்கொண்டிருந்த அனைவரும் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

அம்மாவினதும் அம்மம்மாவினதும் கண்கள் கண்ணீரால் குளமாயின. மகிழ்ச்சியின் உச்சத்திற்குச் சென்றார்கள் குடும்பத்தினர்

தனது இருப்பிடத்திற்கு ஓடி வந்தவளை சின்னத்தம்பி ஐயா கட்டியணைத்து நெற்றியில் முத்தமிட்டார்.

'சரியான கள்ளிதாண்டி நீ. ஒரு சொல் சொல்லலல்லயே எங்களுக்கு' செல்லமாகக் கடிந்து கொண்டார் அப்பா ஒப்பிலாமணி.

இசைநிகழ்ச்சியில் பத்துப் பக்திப் பாடல்கள் பாடப்பட்டன. அதன் பின் பள்ளிக்கூட மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. தனிஆடல்கள், குழு ஆடல்கள், நாடகங்கள், தாள லயங்கள், பேச்சுக்கள், வில்லுப்பாட்டு என பலவகைப்பட்ட நிகழ்ச்சிகளை நிகழ்த்திப் பள்ளிப் பிள்ளைகள் தங்களது திறமையால் அனைவரையும் மகிழ்ச்சியி லாழ்த்தினர்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிகள் கண்கொள்ளாக் காட்சிகளாக இருந்தன. ஆண்டுக்கொருமுறை கங்கைக்கு வருகின்றோம். அதனை மகிழ்வாக களிப்பதிலும் அனைவரும் தங்களது அனைத்து வளங்களையும் ஒருங்கிணைத்து நிகழ்வுகளை திறமாக நடத்துவதிலும் கூடிய கவனஞ் செலுத்தினர்.

'பதினொரு மணியாகிற்று. சாப்பிடுவம். பிறகு உங்கட புளிச்சாதம் நாறின சாதமா போயிரும்' என்றார் சின்னத்தம்பி ஐயா. 'அப்பிடியெல்லாம் புளிச்சாதம் இவ்வளவு கெதியா கூடாம போகாது. நாளைக்கு காலம வரைக்கும் இருக்கும். தம்பலகமத்து பச்சரிசிச் சோத்து புளிச்சாதமாவது கூடாமப் போறாதாவது' அம்மம்மா ஐயாவிற்கு பதிலளித்தாள். பவளப்பிரியன் அம்மம்மாவின் பதிலை இரசித்து மகிழ்ந்தான்.

ஐயாவிற்கு பசி வந்து விட்டது என்பதனை அனைவரும் புரிந்து கொண்டனர். அம்மா, வீட்டார் அனைவருக்கும் கொண்டு வந்த புளிச்சாதத்தை தட்டுகளிலே வைத்து வட்டமாக இருந்தவர்களிடம் கொடுக்கும்படி கலையரசியிடம் கொடுக்க அவளும் ஒவ்வொருவருக்கும் கொடுத்து வந்தாள்.

அனைவரும் சாப்பிட்டு மீதமும் இருந்தது. சாப்பிடும் போது உறவினர்கள் யாராவது வந்தால் அவர்களுக்கும் கொடுக்க வேண்டும் என்பதற்காக சற்று கூடுதலாகவே புளிச்சாதம் செய்து வந்திருந்தார்கள் அம்மாவும் மகளும். கொடுத்துண்ணும் விருந்தோம்பல் தம்பலகமத்துப் பழக்கம்.

அனைவரும் சாப்பிட்ட பின்னர் அம்மா கடைத்தெருவிற்குச் சென்று வீட்டிற்குத் தேவையான சில பாத்திரங்களுடனும் பிள்ளைகளுக்குத் தேவையான அவர்கள் கேட்ட பொருட்களுடனும் பன்னிரண்டரை மணிக்கு இருப்பிடத்தை வந்தடைந்தாள்.

நான்கு மணிநேரத்திற்கு ஒரு தடைவை கங்கைக் கோவிலில் பூசை நடைபெற்றது. அப்பூசையிலும் சின்னத்தம்பி குடும்பத்தார் மாறி மாறி கலந்து கொண்டார்கள்.

யாருக்குமே நித்திரை வரவில்லை. விடிகாலை நாலு மணியிருக்கும். நீராடிய பின் சாப்பிடுவதற்காகவென கொண்டு வந்த பொருட்களை உணவாக்கும் செயலில் குடும்பமே ஈடுபட்டது.

காலை ஏழரை மணியளவில் கோணேசருடன் கங்கைக் கரையில் கூடியிருந்தவர்களில் பெரும்பாலானவர்கள் நீராடச் சென்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னத்தம்பியரும் பேரப் பிள்ளைகளை அழைத்துக் கொண்டு சென்றார். வீட்டில் இருந்து வந்தவர்களில் அப்பாவைத் தவிர அனைவரும் கங்கைக்கு நீராடச் சென்றனர். பேரப்பிள்ளைகளை தலையில் நீர் படாமல் குளிக்குமாறு சின்னத்தம்பி ஐயா கேட்டுக்கொண்டார். தாய், தந்தையரை இழந்தவர்கள்தான் இன்று தலைநீராட வேண்டும் என்பதனை பேரப்பிள்ளைகளுக்கு தெளிவு படுத்தியும் இருந்தார்.

கோணேசர் கங்கையில் நீராட ஊராக்கள் அனைவரும் 'அரோகரா' என்ற ஒலியுடன் நீரில் அமிழ்ந்து நீராடினார்கள்.

நீராடியவர்கள் உடைமாற்றிய பின் தமது இருப்பிடத்திற்குச் சென்று சமைத்த உணவை உண்டு மகிழ்ந்தனர்.

தனியாள்களாக வந்திருந்த உறவுக்காரர்களை பவளப்பிரியன் அழைத்து வந்து அவர்களுக்கும் தமது உணவினை கொடுத்து உண்பதைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருந்தார் சின்னத்தம்பி ஐயா.

பதினொரு மணியளவில் தமது வீட்டிற்குச் செல்வதற்கு அணியமாகுமாறு சின்னத்தம்பியர் கூற மீதமாக இருந்த பொருட்களை இரு வண்டில்களிலும் ஏற்றியபின் ஒன்பது பேருடன் வந்த வழியே தங்களது வீடு நோக்கிப் போய்க் கொண்டிருந்தன இரு வண்டில்களும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரைப் பற்றி...



கதிரவேலிப்பிள்ளை திருச்செல்வம் அவர்கள் தம்பலகமத்தில் பிறந்து சேனையூர் மத்திய கல்லூரியில் படித்த எனது பள்ளித் தோழன். படிக்கின்ற காலத்திலே எமது வகுப்பின் முதல் மாணவனான கதிர்.திருச்செல்வம் அனைவருடனும் அன்பாக பழகுகின்ற அதேவேளை அனைவரும் இன்புற்றிருக்க வேண்டும் என்ற சிந்தை உடையவனாக் காணப்பட்டான். அனைவருக்கும் உதவுகின்ற மனப்பாங்கு கொண்டவன். கல்வியிலே சிறந்து விளங்கியவன் மட்டைப்பந்து, கால்ப்பந்து, கைப்பந்து, பூப்பந்து, சதுரங்கம் போன்ற விளையாட்டுகளிலே திறமையானவன்.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலே பொறியியலாளரானான். பொறியியலாளராலும் திறமாக படைப்புகளை ஆக்க முடியும் என்பதற்கு கதிர்.திருச்செல்வம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. பல விருதுகளுக்குச் சொந்தக்காரனான எனது பள்ளி. தோழன் அவற்றினையிட்டு பெரிதாக அலட்டிக்கொள்ளாத எளிமையானவன். தமிழ்பேசும் மக்கள் அனைவரும் பிறமொழிக் கலப்பின்றி தமிழ்பேச வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளவன்.

மக்கள் பணியில் தன்னை அர்ப்பணித்து ஈடுபாட்டுடன் செயல்படும் கதிர்.திருச்செல்வம் வாசிப்புப் பழக்கத்தை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என ஓயாது பாடுபடுபவன். அதனால்தான் சிறிய சிறிய கதைகள் மூலமாக தனது பட்டறிவினை அனைவருக்கும் பகிர விரும்பி எழுத்துக் துறைக்குள் நுழைந்தவன்.

கதை, கட்டுரை, கவிதை, அரசியல் ஆய்வுகள் என கதிர் திருச்செல்வத்தின் எழுத்துப் பணி நீண்டு செல்கின்றது. முகப்புத்தகத்தோடு முடங்கிக் கிடந்தவன் கடந்த ஆண்டு 'உயரப் பார்' எனும் குறுங்கதை பனுவலுடன் எழுத்துலகத்தில் நுழைந்தவன். தனது இரண்டாவது நூலான 'உனக்குள் நீ' என்ற சிறுகதைத் தொகுப்பினை வெளியிடுவதில் எங்களுக்கும் மகிழ்ச்சியே.

கா.அழகேஸ்வரன்,
பள்ளித் தோழன்.
பள்ளி முதல்வர்
தி/தி/நாவற்சோலை கனிஷ்ட வித்தியாலயம்.

ISBN 978-624-95654-1-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org